Registered as a News Paper

பக்கம் - 16 + IV

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00

நாதம் -13 திருவள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 05 20-12-2002 வெள்ளிக்கிழமை ஓசை 305

C.B.I புகையிரத நிலையம் முன்பாக
வவுனியா

முதற்தர முன்பள்ளி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த போதனையின் கீழ் 2003 கல்வி ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

தரம் - 01 தொடக்கம் O/L வரை

ஆரம்பம் :- 15-12-2002

நிர்வாகி
திரு.எஸ்.தவபாலன்

(2664)

# உச்ச பாதுகாப்பா ?




The Island Sunday Edition

தெயன்

VIRAKESARI வீரகேசரி

லங்காதீப

சமாதானத்துக்கான மீடியா







எதிர்காலம்...



# புனரமைப்பு !

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 20.12.2002

## திட்டங்களும் - எதிர்ப்பார்ப்புகளும்

கடந்த வாரம் உடனடி மனிதாபிமான - புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான செயலகம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை சமாதான நகர்வில் மற்றொரு முன்னேற்றகரமான கட்டத்திறகான வழியை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறிவேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்டு புலம்பெயர்ந்தும், இடம்பெயர்ந்தும் உயிரிழப்பு சொத்திழப்பு ஆகியவற்றைச் சந்தித்து இன்னலும் மக்களின் வாழ்வை, மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் அவர்களைக் குடியேற்றி, எவ்வித அச்சுறுத்தலுமின்றி இராணுவ சூழலற்ற நிலையில் மீண்டும் வேர்விட வைப்பதன் மூலம்தான் இயல்பு நிலைக்குக் கொண்டுவர முடியும்.

இன்று இந்த செயலகத்தின் முன்னால் உள்ள பாரிய பணி இதுவேயாகும். பேச்சுவார்த்தைகளில் காணப்படும் திருப்திகரமான முடிவுகள் வெறும் அறிக்கைகளாகி விடக்கூடாது. மக்களின் எதிர்ப்பார்ப்புக்களையும், நம்பிக்கைகளையும் உத்தரவாதம் செய்வது போன்று, நடவடிக்கைகள் யாவும் மிகவும் தொலைநோக்கு திட்டமிடல்களுடனும், நிதானம் தவறாத வேகத்துடனும் மேற்கொள்ளப்படவேண்டியது முக்கியமாகும்.

வடக்கு - கிழக்கிலுள்ள உடனடியான மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின், அதாவது சிரான் அமைப்பின் செயலமர்வின் பின் வெளிபிடப்பட்ட கருத்துக்கள் நம்பிக்கை தருவனவதாகவே உள்ளன. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உதவித்திட்டம் செயற்படுத்தப்படும்' என்று அரசியல்துறை பொறுப்பாளர் அவர்கள் தெரிவித்திப்பதானது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி இனங்காணப்பட்டு, மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கான புனர்வாழ்வுக்கான திட்டங்கள் வடுக்கப்பட்டு செயற்படுவத்தப்படவேண்டும்....

சர்வதேச உதவி நிதி குறித்து முக்கிய முடிவுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் செயலகக் கட்டமைப்பு தொடர்பாகவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அதன் பணிகளும் ஆரப்பிக்கப்பட்டு விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒரு ஆரோக்கியமான சூழலின் ஆரம்பம் என்றே கூறவேண்டும். மீளக்குடியமர்த்துதல் என்பது அதனோடு மட்டும் நின்றுவிடும் ஒரு பணியல்ல. குடியேற்றப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை அமைதியானதாக, மகிழ்ச்சிகரமானதாக, ஆழவேரூன்றி அச்சமின்றி வாழும் நிலை ஏற்படும் வரை மேற்கொள்ளப்படும் ஒரு தொடர்பணியேயாகும். இதுவே இந்த மக்களின் எதிர்காலத்தை வளப்படுத்த தேவையான முக்கியமான பணியுமாகும்.

கடந்த காலங்களில் அரசுகள் அவ்வப்போது புணர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் நலவாழ்வு, பாதிப்புற்றோர் நிவாரணப்பணி என்றெல்லாம் எத்தனையோ திட்டங்களை அறிவித்து, அதற்காகப் பெற்ற சர்வதேச நிதிகளை யுத்தச் செலவீனத்திற்கு பயன்படுத்திய வரலாறு மக்கள் அறியாததல்ல ஆனால் இன்றைய நிலையே வேறு. அதுவே நம்பிக்கைதரும் விடயமாகும்.

'உயர் பாதுகாப்பு வலயம்' என்ற இச்சொல் இன்று சமாதான நகர்வுகளை அச்சுறுத்தும் ஒரு விடயமாகியுள்ளது.

மக்களின் வாழ்வியக்கத்தின் இதயப்பகுதிகளை உள் வாங்கி ஆக்கிரமித்துக் கொண்டு, அதற்கு உயர்பாதுகாப்பு வலயங்கள் என பெயருமிட்டு, அங்கு நிலைகொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் இராணுவம், புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இசைவாக நடக்காது, மக்களின் வாழ்வுரிமையை தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றமையானது, இராணுவம் அரச கட்டுப்பாட்டுக்குள் இல்லையோ என்ற சந்தேகத்தை உறுதியாக்குவதாகவே உள்ளது.

முப்படைத் தளபதியாகவும், பாதுகாப்பு விவகாரங்களில் இறுதி முடிவு எடுப்பவராகவும் ஜனாதிபதியே இன்னமும் இருக்கையில், ரணிலின் அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் திலக் மாரப்பன சுயாதீனமாக முடிவு எதனையும் மேற்கொள்ள முடியாத ஒருவராகவே உள்ளார். இந்த நிலையில் அரசின் அபிலாஷைகளை, இலக்குகளை, சமாதானத்திற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இராணுவத்தின் மீதான அரசின் கட்டுப்பாடின்மை ஒரு பெரும் தடையாகவே இருக்கப்போகிறது.

இராணுவம், கடற்படை ஆகியவற்றின் மீதான தனது பிடியை இறுக்கமாகவே வைத்திருக்கும் சந்திரிக்கா, இராணுவத் தளபதி பலகல்லேக்கும் கடற்படைத் தளபதி சந்திரிக்கும் பாதுகாப்புச் சட்ட வீதிமுறைகளை மீறி சேவை நீடிப்பினை வழங்கி அவர்களை தன்னிஷ்டப்படி ஆட்டிப்படைக்கும் சக்தி மிக்கவராகவும் உள்ளார்.

நெடுந்தீவில் கடற்படையினர் நடத்தும் ஈ.பி.டி.பி. தரையிறக்க நடவடிக்கைக்கும் மற்றும் உயர் பாதுகாப்பு வலயத் கெடுபிடிகளுக்கும் இதுவே காரணம். சந்திரிகாவின் அபிலாஷைக்கேற்ப கடற்படையும், இராணுவமும் இயங்குகின்றது. இந்த விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் இயலாமையும் தெளிவாகியுள்ளது.

இந்த நிலையில், உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள்குடியேற அனுமதிக்காவிடில் இனி உபகுழுக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்ததைத் தொடர்ந்து உயர்பாதுகாப்புவலயத்தில் மீளக் குடியேற்றம் தொடர்பான திட்டத்தை டிசம்பர் 21க்கு முன்னர் வெளியிட யாழ். மாவட்ட சிறிலங்கா இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா அறிவித்துள்ளார்.

சமாதானத்திற்கான முயற்சிகளில் மேஜர் ஜெனரல் எவ்வளவு அக்கறையுடன் பங்கேற்கப் போகிறார் என்பதை அவர் வெளியிடப் போகும் திட்டம் வெளிப்படுத்தும்.

## மக்களின் புதுவாழ்விற்கு அவசியமான துரித புனர்வாழ்வுத் திட்டங்கள்

அரசு - புலிகள் சமாதான பேச்சுவார்த்தைகளின் அறுவடைகளை வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் அனுபவிக்கும் காலத்திற்கான நேரம் நெருங்கி விட்டது.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் சிறிலங்காவிற்கான நோர்வேத்தூதுவர் ஜோன் வெஸ் பேர்க் அவர்களினால் திறந்து வைக்கப்பட்ட உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக் கான செயலகத் திறப்பு இதனையே தெரியப் படுத்துகின்றது.

செயலகத் திறப்பு விழாவைத்தொடர்ந்து நடைபெற்ற உபகுழுக் கூட்டத்தில் அரச தரப்புப் பிரதி நிதிகளும் புலிகள் தரப்பு பிரதி நிதிகளும் புனர்வாழ்வ மற்றம் அத்தியவசிய தேவைகள் தொடர்பாக எட்டியுள்ள முடிவுகளும் எனி எடுக்கப்படவுள்ள நடவடிக் கைகளும் மக்களிற்கு நம்பிக்கைதரக் கூடியவையாக அமைந்துள்ளன.

இதனையே உபகுழுக் கூட்ட முடிவில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் வெளியிட்ட வடகிழக்கில் வாழ்கின்ற தமிழ் முஸ்லிம் மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள் அவர்கள் அனைவரிற்குமான உதவித் திட்டங்கள் முன்னெடுக் கப்படும் எனத் தெரிவித்தமை தெளிவுபடுத்து கின்றது.

இந்நிலையில்



கிளிநொச்சியில் அமைக்கப் பட்டுள்ள "சிரான்" அலுவலகமானது துரித கதியில் இயங்கி வடக்கு கிழக்கு பகுதியில் தமது ஆய்வுகளையும் நடவடிக்கைகளையும் மேற் கொண்டு மக்கள் இதன் பலாபலன்களை அனுபவிப்பதற்கான ஏதுவகைகளை மேற் கொள்வது அத்தியாவ சியமாகின்றது.

மக்கள் பேரினால் பாதிக்கப்பட்டு பல்வேறு இடங்களில் அகதிகளாய் அலைந்து தற்போது தமது சொந்த பூர்வீக நிலங்களிற்கு திரும்பி மீளக் குடியமர்வதற்குரிய சூழ்நிலை தோன்றியுள்ளது. இந்த மக்கள் தமது பூர்வீக இடங்களில் மீளக் குடியமர்வதற்குரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் மீளக்குடியமர்வதை தூண்டுதல் வேண்டும்.

இதற்கு அத்தியவசியமாக இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் அச்சுறுத்தலாக இருந்து வருகின்ற கண்ணி வெடி அச்சுறுத்தல் நீக்கப்படுதல் வேண்டும்.

இதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக் கப்பட்டு வந்தாலும் இதனை மேலும் துரித கதியில் விரிவாக்கப்பட்டு மீளக் குடியமரும் மக்களிற்கு நம்பிக்கையினை அளித்தல் அவசியம். இதற்கு கண்ணி வெடி அச்சுறுத்தல் முற்றாக நீக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் தொடர்ச்சியாக அல்லல் பட்டு அவலப்பட்டு வாழ்ந்து வரும் மக்களிற்கு பெரிதும் நிம்மதி கிடைக்க வழிசமைக்கலாம். இன்று மக்களின் மனங்களைத் திடப்படுத்துவதற்கு இத்தகைய நடவடிக்கைகள் அவசியமாகின்றது.

மக்களின் புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகள் நீண்டகால மற்றும் குறுங்காலத் திட்டங்கள் முன்னெடுக் கப்படாலும் அத்தியவ சியமாக போரினால் சிதைந்து போயிருக்கின்ற மக்களின் அடிப்படை வசதிகளான கல்வி, சுகாதாரம் மற்றம் சமுகநலத்திட்டங்கள் சம நேரத்தில் சீரமைக்கப்படுதல் அவசியம்.

மக்கள் கிராமங்களை விட்டு போரின் காரணமாக எவ்வளவு விரைவாக வெளியேற நிர்ப் பந்திக்கப் பட்டார்களோ அதே வேகத்தில் அவர்களின் பிள்ளைகளிற்கான கல்வியினை வழங்கி வந்த பாடசாலைகளிறகான கட்டிடங்களும் அவற்றின் பிற வழங்களும் தகர்ந்து போயுள்ளன. இவற்றை மீழ்புனரமைப்பதன் மூலமே அந்த மக்களின் பழைய வாழ்வு நிலையை மீளக் கட்டியெழுப்ப முடியும் இதன்மூலம் சமூகவளர்ச்சியின் மெய்நிலையை கொண்டுவர முடியும்.

இதே போன்று இன்று சுகாதார நிலையும் அடைந்துள்ளது. இவற்றினை புனர்வாழ்வு மற்றும் மனிதர் பிமான நடவடிக்கைகளின் போது முன்னுரிமைளித்தல் வேண்டும்.

அதாவது சிதைந்து போயுள்ள மக்களிற்கான அடிப்படை சமூக கட்சி மாற்றங்களை மீளநிறுவுதற்கு திட்டங்களும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்த வகையில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நன்கு திட்டமிட்ட வகையில் மக்களிற்கான புனர்வாழ்வு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் மக்களின் அடிப்படை வசதிகள் ஒரு புறமும் சமூக கட்டுமானங்கள் மறுபுறமும் என மக்களிற்கு நம்பிக்கை யூட்ட முடியும்.

இன்று தொடர் போரின் காரணமாக நகரங்கள் முற்றாக சிதைந்து மீண்டும் துளிர்க்கத் தொடங்கியுளது.

இதே போன்று நகரங்களை விட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நகரங்களிற்கும் கிராமங்களிற் குமான தொடர்புகள் பாதிக் கப் பட் டுள் ள புனரமைப்பிற்கும் அபிவிருத திக்கும் அங்கமாக நகரங்களிற்கும் சிரமங்களிற்குமான தொடர்புகளை ஏற்படுத்தத்தக்க வகையில் அபிவிருத்திகள் அவசியமாகின்றது.

சரியான வகையில் பிரதேசங்கள் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப் பட்டு மக்களிற்கான அபிவிருத்தித் திட்டங்கள் முன்மொழிப் படுத்தல் வேண்டும் இதற்கு தொண்டர் நிறுவனங்கள் மட்டுமன்றி சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் என தேச தீர்மானத்திற்கு அனைவரும் பங்கெடுத்தல் அவசியம்.

ஆனால் மக்களின் புனர்வாழ்வும் புனரமைப்பும் இன்று இரு வேறுபட்ட பரிமானங்களாகவுள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

அந்தவகையில் படையினரின் கட்டுப் பாட்டிலுள்ள பிரதேசங்களும் கட்டுப்பாடு இல்லாத பிரதேசங்களும் இதில் அடங்குகின்றன.

இவற்றில் படையினரின் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் மக்கள் மீளக்

(15ம் பக்கம் பார்க்க...)

# சமாதானத்துக்கான மீடியா

**யாழ்பாணத்திலிருந்து** வந்த ஒருவர் சொன்னார் அங்கிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை சமாதானத்தைப் பற்றிய மிகைப் படுத்தப்பட்ட செய்திகளைப் பிரசுரிப்பதால் ஒரு பகுதி படித்த யாழ்ப்பாணத்தவர் அதை அதிகம் விரும்புவதில்லை என்று.

இதுபோல கொழும்பிலிருந்து வந்த ஒருவர் சொன்னார் "எமது பத்திரிகைகள் சமாதானத்தைப் பற்றி இல்லாதது பொல்லாத தையெல்லாம் எழுதுகின்றன." என்று. அவரிடம் திரும்பிக் கேட்டேன்.

"நீங்கள் சமாதானத்தை நம்பவில்லையா?"

"எப்படி நம்புவது? இந்த நாட்டில் நம்பக் கூடாது சமாதானம் தானே?"

"அப்படியென்றால் என்றாவது ஒரு நாள் யுத்தம் வெடிக்கும் என்று நம்புகிறீர்களா?"

"ஓம்"

"அப்படியென்றால் சமாதானத்தைக் குறித்த ஐயங்களையே பத்திரிகைகள் அதிகம் பிரசுரிக்க வேண்டுமா?"

"ஓம்"

"யுத்தத்தைத் தவிர வேறு வழி இல்லையா?"

"இல்லை"

"சரி நீங்கள் வன்னிக்கு வந்து யுத்தம் செய்யத் தயாரா?"

"......................................"

பிறகு அவர் கதைக்கவேயில்லை.

இதுதான் பிரச்சினை. கடந்த சுமார் முப்பது ஆண்டுகளாக எமது ரசனை ருசி தெரிவு எல்லாமும் யுத்தத்திற்கே அதிகம் இசைவாக்கப்பட்டு விட்டன.

இதில் சமாதானத்தை அதன் பலம் பலவீனங்களுடன் ஏற்றுக் கொள்வது என்பது ஒருவித ரசனை மாற்றம் தான்.

அதிலும் கடந்த சுமார் இரு தசாப்பதங்களாக யுத்தகள் ஸ்கோர் போர்ட் விவரங்களின் மீது வாசகர், நேயர்களின் கவனத்தை அதிகம் ஈர்ந்து வந்த மீடியாக்களே இப்பொழுது திடீரென்று கடந்த சுமார் ஓராண்டு காலமாக சமாதானத்தை நோக்கி சனங்களை ருசிமாற்றம் செய்வதென்றால் எப்படி?

தவிர யுத்தத்தின் பொய்களால் அதிகம் விழிப்படைந்திருக்கும் சனங்கள் சமாதானத்தைச் சந்தேகிப்பது என்பதும் தர்க்கபூர்வமானதே.

கடந்த சுமார் இரு தசாப்தகாலமாக சில அரிதான புறநடைகள் நீங்கலாக இலங்கைத் தீவின் பெரும்பாலான மீடியாக்கள் சனங்களை யுத்தத்தை நோக்கியே மனோவசியம் செய்து வந்துள்ளன.

இந்நிலையில் சமாதானத்துக்கான ஒரு மீடியா தர்மம் பற்றிக் கதைப்பதும் சிந்திப்பதும் பிழைக்கத் தெரியாத சிலரின் புலம்பல்களாகவோ அல்லது கவர்ச்சி குறைந்த சில **N.G.O.**க்களின் கற்பனையாகவோதான் காணப்படுகிறது.

சில மாதங்களுக்குமுன்பு கொழும்பில் வைத்து ஒரு ஐரோப்பிய பத்திரிகையாளர் "சமாதானத்துக்கான செய்தியாளர்களின்" அவசியம் பற்றிக் கூறப் போய் கொழும்பிலிருந்து வரும் ஆங்கிலப் பத்திரிகைகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

இலங்கைத்தீவில் மட்டுமல்ல பூமி முழுவதிலுமே இதுதான் பொழுதுபோக்கும் பெரும் போக்கும்,

மீடியாக்களுக்கு எப்பொழுதும் முரண்பாடுகள் தேவை.

முரண்களின் மீது வாசகரின் அல்லது நேயரின் கவனத்தைக் குவித்து வைத்திருப்பது என்பது மீடியாத்துறையில் பரவலாகக் காணப்படும் ஒரு தொழில் தந்திரம்.

எமது தமிழ்ச் சினிமாவிலும் இப்படித்தான். எப்பொழுதும் ஒரு முரண் தேவை. இந்த முரணை அவர்கள் கதாநாயகன் - வில்லன் என்று மனிதநிலைப்படுத்தி கதை பின்னுகிறார்கள்.

மீடியாக்களுக்கும் எப்பொழுதும் ஒரு எதிரியும் கதாநாயகனும் தேவைப்படுகின்றது. அது வெளிப்படையாகத் தெரியும். தூலமான ஒரு எதிரியாயுமிருக்கலாம் அல்லது கண்களுக்குப் புலனாகாத ஒரு மாயாவியாயுமிருக்கலாம்.

ஆனால் எதிரி தேவை. அந்தப் "பொது எதிரி" யைக் குறித்த அச்சத்தைத் தணிய விடாது பார்த்துக் கொண்டால் சரி. மீடியாத் தொழில் லாபமாக நடக்கும். அந்தப் பொது வில்லனுக்கு எதிராக உள்ளூர் மற்றும் சர்வதேச கதாநாயகனை உயர்த்திப் பிடித்து சண்டைக்காட்சிகளை சதா விறுவிறுப்பாக வைத்திருக்க வேண்டும். குருதி வடியும் ஸ்கோர் போர்ட் தான் மீடியா உலகின் மிகக் கவர்ச்சியான அம்சம்.

இப்பொழுது அமெரிக்க

**நிலாந்தன்**

மற்றும் ஐரோப்பிய மீடியாக்களுக்கு மாயாவி வில்லனாகக் கிடைத்திருப்பது ஓசாமா பின்லேடன்.

இந்திய மீடியாக்களுக்கு - பாகிஸ்தான் காஸ்மீர் மற்றும் இஸ்லாமிய தீவிரவாதிகள் உண்டு.

தென்னிலங்கை மீடியாக்களுக்கு விடுதலைப புலிகள்.

இப்படியே உலகு முழுவதும் உள்ள அனேகமாக எல்லா மீடியாக்களும் இந்த கதாநாயக - வில்லன் சண்டையின் ஸ்கோர் போர்ட்டை நோக்கியே நுகர்வோரைக் கவர்ந்து வைத்திருக்கின்றன.

மிக அரிதான சில புறநடைகள் நீங்கலாக உலகம் முழுவதும் உள்ள பெரும்பாலான மீடியாக்களிடம் .இந்த நோய்க்கூறு உண்டு. ஆம் இதை நோய்க்கூறு என்றுதான் கூறுவேண்டும். எப்பொழுதும் எதிலும் ஏதாவது நெக்கரிவ் - Negative ஆனது - எதிர்மறையானது பிரச்சினை் குரியது. சர்ச்சைக்குரியது உள்ளதா என்று தேடி எடுத்து அதைப் பெருப்பிப்பது.

இதைத்தான் கொல்லப்பட்ட குமார் பொன்னம்பலம் ஒரு முறை கூறினார் "செய்தி எங்களுடையது தலைப்பு உங்களுடையது" என்று.

இப்படி முரண்களைப் பெருப்பிக்கும் ஒரு தொழில் பாரம்பரியத்தில் முரண்களைக் களைய முயலும் சமாதானம் போன்ற பொசிற்றிவ் ஆன அம்சத்தைக் கையாள வேண்டி வரும்போது முழு அளவில் மூலோபாய மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது.

ஆனால் அதற்கு மீடியா நிறுவனங்களை வைத்திருக்கும் முதலாளிகள் ஒத்துக் கொள்ள வேண்டும். அதாவது மீடியா முதலாளிகளின் அபிலாசைகளோடு சமாதானம் முட்டாமலும் மோதாமலும் இருக்க வேண்டும். இது எப்படிச் சாத்தியமாகும்?

இன்று பூமி முழுவதிலும் சில புறநடைகள் நீங்கலாக பெரும்பாலான மீடியா நிறுவனங்கள் யுத்த வியாபாரிகளைப் பகைக்க விரும்புவதில்லை என்பதே இங்குள்ள மிகக் குரூரமான யதார்த்தம்.

இதனால் மீடியாத் தொழில் எனப்படுவது அதிகமதிகம் யுத்த வியாபாரிகள் மற்றும் ஆயுதத் தரகர்கள், ஆயுத முகவர்கள் போன்றோரின் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகவே இருக்கிறது.

உதாரணமாக ஜலண்ட் இதன் நடுப்பக்கத்தில் சிற்றுவேசன் றிப்போர்ட் - களநிலவரம் என்றொரு பத்தி உண்டு. எழுதுபவர் இக்பால் அதாஸ். யுத்த காலத்தில் களநிலவரங்களை ராணுவ ரகசியங்களை எழுதிவந்த இவர் இப்பொழுது யுத்த நிறுத்த காலத்தில் பெருமளவு கவர்ச்சி குறைந்த ஒரு பத்தி எழுத்தாளராகிவிட்டார். ஆனாலும் எங்கேயாவது தேடிஎடுத்து ராணுவ விவகாரங்களையே எழுதி வருகிறார்.

ஆனால் யுத்த நிறுத்தம் எனப்படுவது குருதி சிந்தும் யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளது என்ற அர்த்தத்தில் மட்டும்தான் மற்றும்படி - ராஜதந்திர யுத்தம் ஒன்று பாங்கொக்கிலும் ஒஸ்லோவிலும் ஐரோப்பாவின் பிற தலை நகரங்களிலும் நடந்து கொண்டிருக்கிறது.

பேச்சுவார்த்தை எனப்படுவது யுத்தத்தை வேறுவழியில் தொடர்வதுதான்.

எனவே இப்பொழுது யுத்தகளம் இலங்கைத்தீவுக்கு வெளியே விரிந்தும் பரந்தும் சென்று விட்டது.




ஈழப்போர் இப்பொழுது சர்வதேச களத்தில் வேறொரு வடிவத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சிற்றுவேசன் றிப்போர்ட் எனப்படுவது இப்பொழுது சமாதான முயற்சிகள் பற்றிய விவரங்களும் வியாக்கியானங்களும் தான்.

யுத்தத்திற்கு இசைவாக்கம் அடைந்துவிட்ட சண்டே ரைம்ஸ் அதிலிருந்து விலகி வரத் தயாரில்லை. ஒருவேளை யுத்தம் திரும்பவும் வரலாம் என்ற சந்தேகமோ தெரியாது. ஆனால் பிரச்சினை ராணுவத் தளபதிகளைக் கடந்து ராஜதந்திரிகளிடம் சென்று கொண்டிருக்கிறது. அல்லது தளபதிகள் ராஜதந்திரிகளாக மாறவேண்டியுள்ளது என்பதே மெய்நிலை.

ஆனால் சண்டே ரைம்ஸ்சும் ஜலண்ட்டும் இவைபோன்ற பத்திரிகையை அதன் ஆசிரியத் தலையங்கத்தோடு குறைந்தது ஒரு மாதத்துக்காவது தொடர்ச்சியாக வாசித்தாலே போதும் ஏன் சமாதானம் செய்வது இவ்வளவு ரிஸ்க்கானதாயிருக்கிறது என்பதற்கான காரணத்தை யாரும் கஸ்ரப்படாமலேயே கண்டுபிடித்து விடலாம்.

மற்றது சண்டே ரைம்ஸ் இது ரணில் விக்கிரமசிங்கவின் உறவினர்களின் பத்திரிகை. ஏனைய எல்லாப் பத்திரிகைகளும் சமாதான முயற்சிகளைக் கண்டு மிரள்வது போலத் தெரிகிறது. யுத்தத்தை நம்பி அவர்கள் விரித்த கடையை யுத்த நிறுத்த காலத்திலும் அதேயளவு லாபத்துடன் நடாத்த முடியாது என்ற யதார்த்தம் அவர்களுடைய இந்த மிட்சிக்குக் காரணமாயிருக்கலாம்.

யுத்தத்துக்குத் திரும்பிச் செல்ல முடியாத ஒரு வளர்ச்சிக் கட்டத்தை சமாதானம் அடைந்துவிடக் கூடாது என்று இவர்கள் தவிப்பது தெரிகிறது.

அப்படியொரு வளர்ச்சிக் கட்டம் வரும் ஆண்டின் நடுக்கூறில் தான் வரும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அதற்கிடையில் சமாதானத்தின் மங்கலான பகுதிகளைக் குறித்து வீணான ஐயங்களையும் பயங்களையும் தூண்டி விடும் பொறுப்பை யுத்த வியாபாரிகள் இந்த மீடியாக்காரர்களிடமே ஒப்படைத்திருப்பதுபோற் தெரிகிறது.

ஆனால் - ஈழப்போரின் கடந்தகால அநுபவங்களின்படி சமாதான முயற்சிகள் சறுக்கினால் வரும் யுத்தம் முன்னரைவிடப் பயங்கரமானதாக இருப்பதே வழமை.

சர்வதேச அநுபவமும் அவ்வாறுதான் உள்ளது.

அங்கோலாவில் 1992 இல் யுத்தநிறுத்தம் முறிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏறக்குறைய மூன்று லட்சம் பேர் கொல்லப் பட்டனர்.

ருவாண்டாவில் 1994 இல் அரஷா உடன்படிக்கை முறிக்கப் பட்ட போது மூன்று மாதங்களுக்குள் மட்டும் சுமார் பத்து லட்சம் தலைகள் உருண்டன.

இப்பொழுது சமாதானம் விஞ்ஞானபூர்வமாகச் செய்யப்படும் நாடுகளில் Spoilers - சமாதானத்தை நாசமாக்கிகள் பற்றி அதிகம் கதைக்கப் படுகிறது.

பேராசியர் ஜோசவ் ஸ்ரெட்மன், 1997 இல் எழுதிய - சமாதான வளர்ச்சிப் போக்குகளில் வரும் பிரச்சினைகள் problems in peace processes - என்ற அதிகம் கவனத்தை ஈர்த்த ஒரு கட்டுரையில் மேற்படி நாசமாக்கிகள் பற்றிக் கூறப் பட்டது.

இலங்கைத் தீவின் சமாதான முயற்சிகளைப் பொறுத்த வரை குறிப்பாகக் கிழக்கில் இத்தகைய நாசமாக்கிகள் அதிகம் செயற்படக் கூடிய ஒரு கள யதார்த்தம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆனால் பயங்கரம் என்னவென்றால் - ஹிரு, ராவய போன்ற சில மிக அரிதான புறநடைகளைத் தவிர மற்றெல்லா சிங்கள ஆங்கில மீடியாக்களையும் இந்த நாசமாக்கிகளின் பட்டியலில் தான் சேர்க்க வேண்டியிருக்கும் என்பதே. ●●

# போள் ஹறிஸ்

## ஏற்படுத்த முடியாமல் போய்விட்ட படுநாசம் அவரது வெளியேற்றம் நியாயமானதா?



**போள் ஹறிஸ்** (Paul Harris) என்ற பிரபல ஆங்கிலேய ஊடகத்துறை ஆய்வாளர் அண்மையில் சிறிலங்காவை விட்டு வெளியேற்றப்பட்டார். இவரது வெளியேற்றம் குறித்து சர்வதேச ஊடகவியலாளர் சங்கங்கள், உள்ளூர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய எதிர்புக் குரல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. London Telegraph இதழில் சிறிலங்கா செய்தியாளரான இவர் சிறிலங்காவிலிருந்து வெளிவரும் டெய்லி மிரர் செய்தித்தாளில் "போள் ஒண் வெனிஸ்டே'' (Paul on Wednesday) என்ற பெயரிலான பத்தியொன்றை தொடர்ச்சியாக எழுதி வந்தார். பொ.ஐ. முன்னணி, ஐ.தே. முண்ணனிக்குச் சார்பானதும் விடுதலைப் புலிகளுக்கு விரோதமானதுமான கருத்துக்களை இவர் இப்பத்திகளில் நிரப்பியிருப்பது வழக்கம். இது அவருக்கு இருக்கும் ஊடகச் சுதந்திரம் தான்.

ஆனால் அவரது விசா வழங்கலின் போது உள்ளூர் பத்திரிகைகளுக்கு எழுதக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டதாகவும் அதை மீறிய மையால் விசா நீடிப்பு மறுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புலிகளின் நெருக்குதல் காரணமாகவே அவர் வெளியேற்றப்பட்டதாக JVP குரலெழுப்பியுள்ளது.

தனது சனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி போள் ஹறிஸின் விசாவை நீடிக்கவும், அவருக்கு குடியுரிமை வழங்கவும் போவதாக சனாதிபதி சந்திரிகா அறிவிக்கும் அளவுக்கு இவரது செல்வாக்கு கொடிகட்டிப் பறந்திருக்கிறது.

"உல்லாசப் பயணியாக தான் திரும்பவும் வருவேன்'' என்று கித்தாய்ப்பாக சவால் விட்டுப் போயிருக்கிறார் போள் ஹறிஸ். பிரித்தானிய தூதரகமோ இந்த விடயத்தில் தான் தலையிடப் போவதில்லை என கை கழுவிக் கொண்டுள்ளது.

இவரது கட்டுரைகளில் அப்படி மோசமான விடயங்கள் இருந்திருக்குமா? 'ஒரு சோற்றுப் பதம்' பார்க்கும் முறையில் ஒரே ஒரு கட்டுரையை இங்கு ஆராய்வோம்.

2002 செப்ரெம்பர் 04 ம் திகதிய டெய்லி மிரர் இதழை எடுத்துக் கொள்வோம்.

"தாய்லாந்து பேச்சுகள் அமோக வெற்றி பெறும்''

என்ற தலைப்பில் இது எழுதப்பட்டிருக்கின்றது. தலைப்பிலேயே அவரது விஷமம் தெரிகிறது. பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறாது என்பதை ஒரு அங்கதப் பாணியிலே குறிப்பிட்டிருக்கிறார்.

கட்டுரையின் ஒரு கட்டத்திலே

"பேச்சுக்கள் நீண்ட காலத்துக்கு நீடிக்கும்..... முரண்பாடுகள் ஏற்படுத்தாத விடயங்களையே தற்போது ஆராய்வார்கள்......

க்கையிலானவர்களை கொண்ட குழுமங்களினாலும் வலுவாக முன்னெடுக்கப்படுகிறது. ஒரு தரப்பில் பிரபாகரன், தமிழ்ச்செல்வன், பாலசிங்கம், ஆகியோரும் மறுதரப்பில் விக்கிரமசிங்க, பீரிஸ், மொறகொட, குணதிலக ஆகியோரும் இருக்கிறார்கள்.

இந்த இரு தனி நபர்களும் தத்தமது மக்களால் ஏற்றுக்

நாயக்காக்கள், ரத்வத்தைகள் குணவர்தனாக்கள் , ஜயவர்த்தனாக்கள் இல்லை. மேட்டுக்குடியினர் இல்லை. இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா? என்ற சவாலை அதிகார வட்டாரங்களில் உள்ள சிங்கள, பௌத்த உயர் வர்க்கத்தினருக்கு விடுகிறார்.

அதையும் விட பேச்சுவார்த்தை என்று வரும்போது பாராளுமன்றம் போன்ற ஒன்றை கூட்ட முடியாது. சிறு குழுக்கள் தான் எதிர் எதிர் தரப்புக்களில் பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்கலென்பதை அறியாதளவுக்கு போள் ஒன்றும் "வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத'' பையனல்ல.

சரி இதையும் விடுவோம். அபாயகரமான ஒரு பகுதிக்கு வருவோம்.

"பிளவு பட்டுப்போய் உளவுரன் குலைந்து காணப்படும் படைத் துறையினர் ஒரு புரட்சிச் சதியை நடத்த முடியாத நிலையில் உள்ளனர்....."

மறைமுகமாக இராணுவத்தை புரட்சிச் சதி ஒன்றுக்கு தூண்டும் இதை எந்த தன்மானமுள்ள அரசு பொறுத்துக் கொள்ளும்?

இன்னும் இருக்கிறது......

" இந்த இரு தலைவர்களில் ஒருவர் இயற்கையான அல்லது இயற்கையல்லாத முறையில் மரணத்தைத் தழுவினாலும் அடிப்படை விடயங்கள் என்ற சகதியில் இப்போதுதைக்கு சிக்கிக் கொள்ளமாட்டார்கள்."

வடக்கு கிழக்கில் தங்கள் பிடியை இறுக்கிக் கொள்ள புலிகளும் நன்கொடையாளர்களையும், முதலீட்டாளர்களையும் நாட்டுக்குள் கொண்டு வர அரசும் இந்த இடைவெளியை பயன்படுத்துவார்கள்.....

என்கின்றவர் முத்தாய்ப்பாக

"ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். புலிகளுக்கும் அரசுக்குமிடையேயான காதல், "சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட திருமணமாக கனியப் போவதில்லை" என்று மக்களை விரட்டுகிறார்.

சரி இதைவிடுவோம். இன்னொரு இடத்தைப் பார்ப்போம்.

"அமைதி முயற்சியானது இரு தனி நபர்களாலும் சிறிய எண்ணி

கொள்ளப்பட்ட தலைமைகள் என்பதையும் இந்தக் குழுமங்களில் அன்ரன் பாலசிங்கம், G.L. பீரிஸ் போன்ற அரசியலமைப்பு நிபுணர்கள் இருப்பதையும் அவர்களுக்கு பின்னால் பல்துறை சார்ந்த நிபுணர் இருப்பதையும் குறிப்பிடுவதற்கு அவர் வசதியாக மறந்து விட்டார்.

இதில் சிங்கள தேசத்து குழுவில் இருப்பவர்களின் குடும்பப் பெயர்களையே குறிப்பிட்டிருக்கிறார். ரணில்... போன்ற முதற்பெயர்களை அல்ல இதில் தன் விஷப்பல் முத்திரையை ஹறிஸ் பதித்திருக்கிறார்.

இந்தப்பட்டியலில் பண்டார

பேச்சுவார்த்தைகள் குழம்பிவிடும்"

எப்படி போகிறது பார்த்தீர்களா? யாராவது ஒருவரை கொன்றும் பேச்சுவார்த்தையை குழப்பலாம் என்று சூசகமாக தெரிவிக்கிறார் அல்லவா? எதிர்காலத்தில் அப்படி ஒன்று நிகழ்ந்தால் கொலை வழக்கில் திட்டமிட்டவர் என்ற ரீதியில் போள் ஹறிஸ் முதலாவது எதிரியாக இருக்கப்போகிறார் ஏன்கிறீர்களா?

தட்டிலிருந்த கைரேகைக்காகவே "வேலுப்பிள்ளை கரிகாலனுக்கு" 200 வருட சிறைவிதித்த இந்தநாட்டு நீதித்துறையிடமிருந்து கொலைத் திட்டத்தை எழுத்திலேயே போட்டிருக்கும் போள் ஹறிஸ் தப்பமுடியாது கவலையை விடுங்கள்.

போள் ஹறிஸின் வக்கிர சிந்தையில் இன்னொரு அருமையான திட்டமும் உருவாகி இருப்பதுபோல் தோன்றுகிறது. கட்டுரையின் இன்னொரு இடத்தில்....

"ஏற்கனவே நோய் வாய்பட்டிருக்கும் பாலசிங்கத்தின் இழப்பும் பாரதூரமான பின்னடைவுகளை ஏற்படுத்தக் கூடியதே......." என்கிறார்.

இனி திரு. பாலசிங்கம் சிகிச்சை பெறச் செல்லும் இடங்களில் கவனமாக இருக்க வேண்டியதுதான்.

இது மட்டு மல்ல இவர் சிறிலங்கா வந்ததும் வராததுமாக பாராளுமன்ற செயற்குழுக்கள் அறையில் கூடிய 40 க்கு மேற்பட்ட சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைதிப் பேச்சுக்களில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் பற்றி விளக்க விரிவுரை ஒன்றையும் ஆற்றியிருக்கிறார். நிச்சயமாக அவர் பேச்சு வார்த்தைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுமுள்ள சாதகமான அம்சங்களை பற்றி பேசியிருக்கப் போவதில்லை.

சரி இப்போது கூறுங்கள் நம்பிக்கையுடன் இருதரப்பும் ஈடுபடும் சமாதான முயற்சி தோற்கும் என்று மக்களை மூளைச் சலவைச் செய்ய முயற்சிக்கும் ஹறிஸை.........

**வின்சென்ற் புளோறன்ஸ்**

பேச்சுக்களை நீடிக்கச் செய்து மக்களை மாயையில் வைத்து அரசும் புலிகளும் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றப் போகிறார்கள் என்று போதிக்கும் ஹறிஸை.........

பேச்சுவார்த்தைகளில் உயர் வர்கத்தினர் இல்லை என்று பேதம் செய்யும் ஹறிஸை........ நிபுணர்கள் பின்னணியில் இருப்பதை வேண்டுமென்றே மறைக்கும் ஹறிஸை.....

புரட்சிச்சதி ஒன்றுக்கு அடி எடுத்துக்கொடுக்கும் ஹறிஸை..... படுகொலைக்கு தூபமிடும் ஹறிஸை தற்போதய கள நிலையில் அமைதிப் பேச்சுகளுக்கு எதிராகச் செயற்படும் சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் ஆலோசனை வழங்கி ஒரு இறைமையுள்ள நாட்டின் உளவிவகாரங்களில் தலையிட்ட ஹறிஸ்ஸை நாட்டைவிட்டு துரத்தியடித்தது நியாயம் தானே நீங்களே சொல்லுங்கள். ●

# சொல்லியே தீரவேண்டும்

## கசப்பான பயணம்

**அன்று** வீட்டிற்குச் செல்வதற்கு கிளிநொச்சி - முகமாலை பேருந்தைப் பிடிப்பதற்காக முருகன் கோவிலடியில் நின்று கொண்டிருந்தேன். பிரயாணிகளுக்கான பேருந்தா அல்லது லொறியா என்று சந்தேகப்படும் படியாக வாகனமொன்று கண்ணுக்குத் தெரிந்தது. பனிக்குளிரில் போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு வரும் கிழவியொருத்தியைப் போல, மழைக்காகக் கட்டப்பட்ட பசளைப் பைகள் சிறகு விரிக்க வந்து கொண்டிருந்த அந்த வாகனம்.

என்னோடு இன்னொருவர், இருவருமாக ஏறினோம். இருக்கக் கூடியதாகப் பலகை ஆசனங்கள். எதிர்த் திசையில் மூன்று தாய்மார்கள் குழந்தைகளை மடியில் படுத்திவைத்திருந்தனர். ஒருவர் 50 வயதுக்கு மேல் மதிக்கத்தக்கவர். மற்றையோர் எப்படியும் இருபத்தைந்தைத் தாண்டாதவர்கள். எல்லோர் முகங்களும் எரிச்சல் பட்டுக் கொண்டிருப்பது போலத் தெரிந்தது.

வாகனத்தின் ஒலி சிறிது



வித்தியாசமாகப் பட்டது. வித்தியாசமான சத்தங்களோடு வாகனத்தின் உள்ளே புகை கறந்து விட்டது போல் உள் நுழைந்து கொண்டிருந்தது.

"பாழ்பட்டுப் போனது. இதென்ன சனியன், இதென்ன வஸ்சோ அல்லது பொயிலைக் கொட்டிலோ? பிள்ளையள் மூச்சு விடாமல் கிடக்கு." இது ஒரு தாயின் பொருமல்.

"அவங்களுக்கென்ன? திக்கற்றுப் போட்டாச் சரி. சனங்கள் எக்கேடு கெட்டாலும் கெட்டுப் போகட்டும். புகையைக் குடிச்சாலென்ன? பிரண்டு போனால் என்ன?" இது ஒரு பழசின் பகிடிப் பேச்சு.

"இதுகளைப் பற்றி ஒருத்தரும் கதைக்கப் பேச மாட்டாங்கள். எங்கையாலும் போய் மரத்தோடை அல்லது மதவோடை இடிபட்டுப் பிரண்டு போனாப் பிறகு பேப்பரிலை போடுவாங்கள்.''

அரிசிச் சாக்குக்கு மேல் இருந்து வந்த அம்மாவின் குரல் விம்மி வெடித்தது.

"யாழ்ப்பாணத்திலை என்ன மாதிரிப் புது வஸ்சுகள். காமணித்தியாலத்துக்கு ஒவ்வொண்டு விடுவாங்கள். என்ன மாதிரிப் போய் வரலாம். இஞ்சையென்னடா எண்டால்...''

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து திரும்பும் இளந் தாயெருத்தியின் வக்கிரப் பேச்சு.

"என்ன செய்யிறாங்கள் பரந்தனுக்கும் பளைக்குமிடை யில் பதினாறு தரம் தண்ணி விட்டிட்டாங்கள். இது தண்ணியடிக்கிற வசுப் போலை.... நானும் நினைச்சன் பத்து மணிக்கிடையிலை வீட்டை போய்விடலாமெண்டு. சரிவராது போலை கிடக்கு."

பேரப்பிள்ளையின் முகத்தைத் தனது முந்தானையால் மூடியபடி இருந்த அம்மா இப்படிச் சொல்லி ஆசுவாசப்பட்டாள். மெல்ல மெல்ல உருண்டு சென்ற வாகனம் எங்கள் எல்லோரையும் முகமாலையில் எரிச்சலோடு இறக்கிவிட்ட போது தான் வாகனச் சாரதியைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதே ஆள்.....

சென்ற முறை லீவில் வீடு சென்று திரும்பி வந்தபோது மாலை ஆறு மணியளவில் பரந்தன் வெளியில் எங்களைத் தவிக்க விட்டுவிட்டு நிம்மதியாக வீதியின் அருகே ஒதுங்கி நின்ற அதே வாகனத்தின் சாரதி தான்.

நான் ஆத்திரப்படவில்லை. வன்னிச் சூழலில், எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் எமது தேவைகளுக்கு முண்டு கொடுத்து நிற்கும் இந்தப் பழைய வாகனங்களை உதாசீனப்படுத்த முடியாதுதான். அதற்காக இப்படியான துன்பங்களை இனியும் சுமப்பதற்கு மக்கள் தயாராக இல்லாதுபோது இதில் மாற்றங்கள் ஏன் வரக்கூடாது. புகைகக்கும் வாகனங்கள் வீதியில் பயணிப்பதென்பது சட்டம் இடமளிக்கக் கூடியதா? சட்டம் ஒருபுறம் இருந்தாலும், சௌகரியமாகப் பயணம் செய்வதில் யாருக்குத்தான் விருப்பம் இருக்காது. ஆகையால் இது சார்ந்த நிறுவனத்தினர் மனது வைத்து இவற்றில் கவனம் செலுத்துவது நல்லதல்லவா?

**மாவன்னா**

# முஸ்லிம் காங்கிரஸின் எதிர்காலம்!

**சிறிலங்கா** முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ராவூப் ஹக்கீம் கடந்த 02.12 அன்று அவரது கட்சிக்குள் இருந்து ஒரு பாரிய நெருக்கடியினைச் சந்தித்தார். 05.12 அன்று அந்த நெருக்கடியினைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தற்காலிகமாகத் தவிர்த்துக் கொண்டது ஆயினும் அவரது கட்சிக்குள் நெருக்கடி என்பது தலையெடுத்த வண்ணமே உள்ளது.

கட்சியினுடைய யாப்பிற்கு முரணாகவும் கட்சியினுடைய உயர்பீடங்களின் முடிவுகளுக்கு முரணாகவும் ஹக்கீம் நடந்து கொண்டமையையே நெருக்கடிக்குக் காரணமென மாற்றுக் குழுவைச் சேர்ந்த காங்கிரசின் தவிசாளர் அதாவுல்லா காரணம் காட்டுகிறார். இதற்காகவே நாட்டில் கட்சித்தலைவர் இல்லாத பட்சத்தில் கட்சியின் உயர்பீடத்தைக்கூட்டி ஹக்கீமுக்கு எதிராக 36 குற்றச்சாட்டுகளை முன்வைத்து தடைஉத்தரவு மனுவை சமர்ப்பித்தது மாற்றுக்குழுத் தலைமை.

நாட்டில் தலைவரில்லாத நிலையில் உயர்பீடத்தை யாப்புக்கு விரோதமாகக் கூட்டியதும் கட்சிக்குள் முரண்பாட்டை உருவாக்கியமைக்குமாக கட்சியிலிருந்து உறுப்பினர் சிலரை நீக்குமாறு வெளிநாட்டிலிருந்தபடியே உத்தரவிட்டார் ஹக்கீம்.

இச்சமயத்தில்தான் மாற்றுக்குழுவின் மனுவை ஏற்றுக் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் 02.12.2002 அன்று கட்சியின் எல்லாச் செயற்பாடுகளிலிருந்தும் ஹக்கீமுக்கு ஒரு இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது. இந்த இடைவெளிக்குள் காங்கிரசின் ஆரம்பகால உறுப்பினர் எஸ்.சுபைர்தின் கட்சித் தலைவர் ஆக்கப்பட்டார். தவிசாளர் அதாவுல்லாவின் செயற்பாட்டில் ஊடகவியலாளர் மாநாடு கூட்டப்பட்டது. கட்சியின் புதிய நடைமுறைகள் பிரகடனம் செய்யப்பட்டன.

மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவென நோர்வே சென்றிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ராவூப் ஹக்கீமை நெருக்கடி நிலையைச் சமாளிக்க உடனடியா நாடு திரும்புமாறு பிரதமர் ரணிலால் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

நாடு திரும்பிய ஹக்கீம் தனது கட்சிக் கூட்டத்தையும் உயர்பீடக் கூட்டத்தையும் அவசர அவசரமாகக் கூட்டி ஆராய்ந்து அதாவுல்லாவும் அவரது குழுவாலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செல்லுபடியற்றவை என ஒரு மனுவை நீதி மன்றில் தாக்கல் செய்தார்.

இந்த மனுவினை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிமன்று தான் விதித்த இடைக்கால தடை உத்தரவை நீக்கிக் கொண்டு ஹக்கீம் மீண்டும் கட்சித்தலைவராகச் செயற்பட அனுமதித்தது. முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழு உயர்பீடம் தாக்கல் செய்திருந்த மனுவுக்கான வாதங்களை சமர்ப்பிக்கும்படியும் நீதிமன்று கேட்டுக் கொண்டது.

இவ்வளவும் நடந்து முடிந்திருக்கையில் தற்போதைய நிலைவரத்தின்படி காங்கிரஸ்சிற்கும் மாற்றுக்குழுவாகச் செயற்படுகின்ற கட்சி அணியினருக்குமிடையில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான பேச்சுக்கள் நடைபெறுவதாக தெரியவருகின்றது. மேற்கொள்ளப்பட்ட அதிகார மாற்ற முயற்சிகள் வெற்றியழிக்காத பட்சத்தில் தாம் ஒதுக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சம் அதாவுல்லா அணிக்கு எழுந்துள்ளது.

டிசம்பர் 05ம் திகதியுடன் நிறைவுற்ற ஐ.தே. முன்னணியின் ஒரு வருடத்தில் இந் நிகழ்வுகள் அரங்கேறியிருப்பது இலங்கை அரசியலில் சமாதானத்துப்பட்டாவால் மூடியிருந்த எதிர்க்கட்சி, ஆளும்கட்சி முறுகல்களை சற்றே விலக்கிப்பார்க்க வைக்கின்றது.

ஒருவருட நிறைவில் எப்பொழுதும் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் அல்லது வேறு ஏதாவது மாற்றங்கள் நிகழலாம் என எதிர்பார்க்கப்பட்ட தருணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உட்பிரச்சினைகள் பிரதமர் ரணிலையும் சற்று அசரவைத்து விட்டது போலதென்படுகின்றது.

இவ் உட்பிரச்சினைகளின் பின்னணியில் முக்கியமாக பேரினவாத சக்திகளின் தூண்டுதல்கள் அதிகம் இருக்குமென நம்பப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் அஷ்ரப்பின் மறைவுக்குப்பின் கட்சி இரண்டாகப் பிளவுற்றதும் ஒரு கட்சி பேரியல் அஸ்ரப்பின் தலைமையில் இன்று பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருப்பதன் பின்னும் இடர்களுக்கு மத்தியிலும் முஸ்லிம் காங்கிரஸ்சை தொடர்ந்து கையில் வைத்திருப்பது ஹக்கீமின் திறமை எனலாம். ரணில் அரசாங்காத்திற்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் மு.கா.வை பிளவுற வைப்பதன் மூலம் பாராளுமன்றப் பெருன்பாண்மையை சம்பாதித்துக் கொள்ளலாம் என எதிர்க்கட்சி நம்புகிறது.



இதற்காகவே முஸ்லிம் மக்களின் ஏக பிரதிநிதி எனும் வகையில் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் ஹக்கீமை கட்சியிலிருந்து தனிமைபடுத்துவதும் அவருக்கு அவப்பெயரை முஸ்லிம்மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கும் அக்கட்சியின் ஒருபகுதியை (அதிருப்தியாளர்களை) ஒருங்கிணைக்க எதிர்க்கட்சி நினைத்திருக்கிறது. சமாதான முயற்சிகளினால் பிறந்திருக்கும் ஒரு சுமூகமான சூழ்நிலை ரணில் அரசிற்கும் முஸ்லிம் காங்கிரசிற்கும் மக்கள் மத்தியில் ஒருஆட்சிப் பலத்தை வழங்கியிருக்கும் கட்டத்தில் இம்முயற்சிகள் பயனற்றுப் போனதில் விந்தையேதுமில்லை.

மாறாக இம்முயற்சிகள் இன்னும் இன்னும் சமாதானம் மீதான முஸ்லிம்களின் கவனத்தையும் கடமைப்பாட்டையும் உணர்த்தி நிற்கின்றது எனலாம். ஹக்கீம் மீதான தடை உத்தரவிற்குப் பின்னான கிழக்கின் சம்பவங்கள் இதையே காட்டி நிற்கின்றது. தடை உத்தரவை எதிர்த்து நிகழ்ந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் மாற்றுக்குழுக்களுக்கு வயிற்றில் புளியை கரைத்திருக்கும் என்பதை தற்போது நிகழும் இணக்க முயற்சிகள் காட்டி நிற்கின்றன.

முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளை நிகழ்ந்து வரும் சமாதானப் பேச்சுக்களில் உணர்த்தியும் உரைத்தும் வந்த என்மீது தேவையற்ற அனாவசியமான குற்றச் சாட்டுக்களைச்சுமத்தி என்னை ஒரு குற்றவாளியாகச் சித்தரிக்கும் மாற்றுக்குழுச் செயற்பாடுகளுக்கு சரியானதொரு பதிலடியைக் கொடுக்கப் போவதாக தெரிவித்திருக்கும் ராவூப் ஹக்கீமின் அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி அரசியல்களத்தில் ஒரு எதிர்பார்ப்பு இருக்கின்றது.

பேச்சுக்கள் மூலம் ஒரு சரியான தீர்வை முஸ்லிம் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும் ,அதற்காக விடுதலைப் புலிகளுடனும் அரசுடனும் கைகோர்த்து நிற்கவேண்டிய அவசியம் உண்டு என்பதை பெரிதும் உணர்ந்திருக்கும் ஹக்கீம் வெளியிடும் கருத்துக்கள் யாவும் சாமாதான முயற்சிக்காக முழு முஸ்லிம் சமூகத்தையும் ஒருங்கினைக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பு. ஆனால் அண்மையில் பத்திரிகை ஒன்றில் அவரளித்த பேட்டி ஒன்றில் "மு.கா.வுக்குள் ஏற்பட்டிருக்கும் இப்பிரச்சினை சில வேளைகளில் புலிகளுக்கு சந்தோசத்தை அளிக்கும் ஏனெனில் முஸ்லிம் மக்களின் பேரம்பேசும் அதிகாரமுள்ள கட்சிக்குள் இக்குழப்பங்கள் நிகழ்வது அவர்களின் பேரம் பேசும் ஆற்றலைக் குறைக்கும்" எனக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான ஹக்கீமுடைய கருத்துக்கள் அவர்மீது குற்றம் சாட்டும் மாற்றுக் குழுவின் குற்றச்சாட்டுக்கள் சரியானதே என்னும் எண்ணத்தை முஸ்லிம் மக்களிடத்தில் ஏற்படுத் திவிடும் "புலிகளுடன் இணைந்து முஸ்லிம் மக்களின் உரிமகளுடன் ஹக்கீம் விலை போகிறார்" என்ற மாற்றுக்குழுக்களின் குற்றச் சாட்டை முஸ்லிம் மக்களும் நம்பி முஸ்லிம் சமூகமே பிளவுற்றுப் போவதை ஹக்கீமால் தடுக்கமுடியாது போய்விடும்.

ஆகவே முஸ்லிம் காங்கிரஸ் தான் கைகோர்த்து நிற்கும் இரு அணிகளுக்கும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தாத வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் அத்துடன் "தொடர்ந்து முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் பற்றி நாம் கதைப்போம்" என்ற புலிகளின் வாக்கு முஸ்லிம் மக்களிடத்தில் ஏற்படுத்தியிருக்கும் நம்பிக்கையைச் சிதறவிடாது. கட்சியின் ஒருமைப்பாடு கைகோர்த்த அணிகளுடனான நம்பிக்கை என்பதாக ஒரு அரசியல் முக்கோணத்தில் முஸ்லிம் காங்கிரஸ்சை தொடர்ந்து நிலைக்கவைக்க ஹக்கீம் முயல வேண்டும்.

**விஜயன்**

---

# நறுக்கென...

## கதிர்காமரின் புதிய புலம்பல்கள்; ராஜதந்திரத் தோல்வியின் எதிரொலி....!



**கொஞ்சக** காலமாக விலாசமற்று போய் 'விலல்' கதையெல்லாம் கதைத்துக் கொண்டிருந்த முன்னாள் சந்திரிக்கா அரசின் வெளிவிவகார அமைச்சரும், இந்நாள் சனாதிபதி சந்திரிக்காவின் வெளியுறவுகளுக்கான ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர், இப்போது மீண்டும் தனது விலாசத்தை பதிப்பதற்காக நாளொரு அறிக்கையும் பொழுதொரு கருத்துமாக உள்ளூர்ப் பத்திரிகைகளின் அரசியல் நகைச்சுவைப் பகுதிகளை நிறைவுசெய்யும் ஒருவராக மாறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் முழு ஆயுத பாணிகளாக இருக்கிறார்கள் என்றும், அவர்களின் ஆயுதங்களைக் களையாதவரை தீர்வு முயற்சிகளுக்கு உதவப்போவதில்லை என்று கூறியுள்ள கதிர்காமர் பேச்சுவார்த்தைகளின் போக்கு மக்கள் மத்தியில் சந்தேகங்களை ஏற்படுத்தியிருப்பதாவும் தெரிவித்துள்ளார். கதிர்காமரின் குழப்பங்களையெல்லாம் சமாதானப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றகரமான நகர்வுகளின் எதிரொலிகளால் ஏற்பட்டவைகள்தான். ஒரு காலத்தில் எந்தெந்த நாடுகளுக்கெல்லாம் போய் பொய்யையும் கட்டுக்கதைகளையும் நாக்கூசாமல் கூறி, காலில் விழாக்குறையாக விடுதலைப்புலிகளை தடை செய்யுமாறு கெஞ்சினாரோ... அந்தந்த நாடுகளின் ஏன் அப்படித் தடைசெய்த நாடுகளின் பிரதிநிதிகளும், தூதர்களும் இப்போது அவரிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் வன்னி சென்று. விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையை சந்தித்து பேசிவருவதும் சமாதான முயற்சிகளுக்கு பாராட்டும் ஆதரவும் தெரிவிப்பதும், புனர்வாழ்வு புனரமைப்பிற்கு நேரடியாக உதவவிருப்பம் தெரிவிப்பதும், வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை வரவேற்று அரசியல் தீர்வு முயற்சி களுத் தேவையான 'அரசியல் யாப்பு' முறைமைகள் குறித்து விளக்கம் கொடுப்பதும் கதிர்காமரால் தாங்கிக் கொள்ளமுடியாதவைதான். சந்திரிக்கா + கதிர்காமர் கூட்டணியின் விடுதலைப புலிகளுக்குகெதிராக மேற்கொள்ளப்பட்ட பலகோடி டொலர் பெறுமதியான, ராஜதந்திர ரீதியிலான பிரசார யுத்தத்தில் இவ்வளவு மோசமான ஒரு வீழ்ச்சி நிலை ஏற்படுமென்று இருவருமே கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்கள்.

'புலிகள் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெறுவதை இலக்காக நோக்கி முன்னோறுகிறார்கள் என்றும் ஏற்கெனவே அதில் அவர்கள் அரைவாசி வெற்றியைப் பெற்றுவிட்டார்கள் என்றும் கதிர்காமர் ஒரு ஒப்புதல்- பகிரங்க - வாக்கு மூலம் ஒன்றையும் வழங்கியுள்ளார். உலக சமூகம் விடுதலைப்புலிகளை- அவர்களின் போராட்டத்தை -அதனுள் பொதிந்துள்ள நியாயத்தன்மையை உணர்ந்து கொண்டதன் பின்னர் இன்னும் சொல்வதானால் சந்திரிகா + கதிர்காமர் கூட்டுப்பிரசார நடவடிக்கைகளின் பொய்மைகளைப் புரிந்து கொண்டதன் பின்னர் தான் விடுதலைப்புலிகளை நோக்கி நேசக்கரம் நீண்டத்தொடங்கியுள்ளது. என்பதை கதிர்காமர் புரிந்து கொள்ள வேண்டும். 'கெட்டிக்காரன் புழுகு எட்டே நாளுக்குத்தான்' என்பது கதிர்காமர் விடயத்தில் யதார்த்தமாகி விட்டது.

இனி என்ன...? ஐயா...அம்மாவின் கோபம் கூடக்கூடக்...புதுப்புதுப்புலம்பல்களாகக் கூறிக்கொண்டே இருக்கப் போகிறார்.

போடுவதற்கு ஊடகங்களும் படித்து ரசித்து சிரிப்பதற்கு மக்களும் தான் நிறையவே இருக்கின்றனவே...!

---

## பொதிசுமந்த பீரிஸிடம் உதைவாங்கும் கதிர்காமர்



'ஒரு பிரச்சினைக்கான நியாயமான, உறுதியான அரசியல் தீர்வொன்று, எட்டும் வரைக்கும் ஒரு கொரில்லா இயக்கமே ஆயுதங்களை கீழே போடச் சம்சதிக்காத நிலையிருக்கும் போது ஒரு மரபுப் படையணியாக வளர்ந்து விட்டுள்ள விடுதலைப்புலிகளிடம் ஆயுதங்களைக் கீழே போடுமாறு கோருவதென்பது வேடிக்கையானது' என புலிகளின் ஆயுதங்களை களையுமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்த சந்திரிக்கா அம்மையாரின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு அமைச்சர் G.L. பீரிஸ் பதில் கொடுத்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் இன்றைய சனாதிபதி சந்திரிகாவின் தீவிர ஆலோசகராகவுமுள்ள தமிழே பேசத்தெரியாத இந்த கதிர்காமத்தமிழர் தற்போது பிதற்றிய வாய்மொழிக்கே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பதிலடி கொடுத்துள்ளார்.

பீரிஸ் தனது ஒரு காலத்தில் நெருங்கிய அமைச்சரவைச் சகாவான கதிர்காமரை மிக நன்றாகவே அறிவார். அவரின் பலமும், பலவீனமும் கூட அவருக்கு நன்கு தெரியும். கதிர்காமர் எந்தப்பின்னணியில் இவ்வாறெல்லாம் அறிக்கை விடுகிறார் என்று கூட அவர் அறிவார்.

'அவர் இவ்வாறு அறிக்கை விடுவதன் நோக்கமே பேச்சுவார்த்தையை எப்படியாவது குழப்ப வேண்டும் என்பதேயாகும்' என்றும் பீரிஸ் தெரிவித்திருப்பது இதற்கு சரியான உதாரணமாகும்.

இந்தப் பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு நகர்விலும் சர்வதேச சமூகம் இயல்பான ஆர்வம் கொண்டுள்ளதுடன், அதன் கண்காணிப்பிலும் மேற்கொள்ளப்படுவது தான் இன்றும் ரணிலின் அரசை ஆட்சியில் தக்க வைத்திருக்கிறது. இல்லையேல் கடந்த ஐந்தாம் திகதி நள்ளிரவுக்குப் பின்னரே சந்திரிகா ஆட்சியைக் கலைத்திருப்பார். நிறைவேற்று அதிகாரதிகள் அவருக்கு அன்றைய தினத்தில் அந்த அதிகாரத்தை பயன்படுத்தும் வலுவையும் வழங்கி விட்டிருந்தது.

ஆனாலும் கூட சந்திரிகா தனது மதியுக ஆலோசகர்களான அநுராவையும், கதிர்காமரையும் ஏவிவிட்டு இருமுனைகளில் சமாதான நகர்வுகளைக் குழப்புகின்ற அதேவேளை தானும் பிறிதொரு முனையில் இறுதி அஸ்திவாரமாக நிறைவேற்று அதிகாரத்தை ஏந்தியபடி அதனை எந்தக் கணத்திலும் தான் பிரயோகிப்பேன் என்ற தொனியில் நாளொரு எச்சரிக்கை மிரட்டலை விடுத்தவண்ணமும் உள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்கெல்லாம் பீரீஸ் அரசின் சார்பில் துணிச்சலாக சொல்லப்பட வேண்டியவற்றை, சொல்ல வேண்டிய சமயத்தில், சொல்லி வருதுதான் இன்று எதிர்கட்சியினருக்கு, குறிப்பாக சந்திரிகாவுக்கு, சிறப்பாக கதிர்காமருக்கு 'மூலக்கொதியை' கிளப்பும் விடயமாகியுள்ளது.

ஒருகாலத்தில் போன ஆட்சிக காலத்தில் - தீர்வுப்பொதி சுமந்த கழுதையாக வர்ணிக் கப்பட்டு, சந்திரிகா, கதிர்காமரின் போக்குக்கெல்லாம் பின்தொடர்ந்த பீரிஸ் இவ்போது சமாதான முன்னெடுப்பில் முன் சொல்கிறார். அவரது காலை வாரிவிட பின் தொடரும் சந்திரிகாவுக்கும், கதிர்காமருக்கும் அவ்வப்போது முறையான உதைகளையும் உறைக்க... உறைக்க வழங்குகிறார்...

காலம் எப்படி மாறிவிட்டது... வரலாறு வழமைபோல் தனக்குள் சிரித்துக்கொண்டே நகர்ந்து கொண்டிருக்கிறது....

---

போர்க்கருவிகளின் நடுவில், சட்டங்கள் மௌனமாகிவிடுகின்றன. -ஸிஸரோ



# என்னை நானே... எப்படி நம்ப வைப்பேன்

புரிந்துணர்வு உடன்படிக்கை வந்ததாலதான் எனக்கும் அதின்ர அருமை விளங்குது. என்ன அந்த நாளையில விட்டுப் போட்டு வந்த நிலம், வீடு, வங்கி, கச்சேரி, எண்டு எங்க போனாலும் அதைத்தான் கேட்கினம்.

**'அது'** என்னோட வாழ்ந்தகாலம் அதிகந்தான். அது எண்டு உரிமை யோட சொன்னாலும், அது அஃறிணையா- எண்ட கேள்வி வரும் ஆனா உயர்திணைதான்.

நாங்கள் ஒரு வரை ஒருவர் விட்டுப்பிரிகிறதேயில்லை. அவ்வளவுக்கு நெருக்கமான பிணைப்பு இருந்தது. எந்த இடத்திலும் எவரும் என்னைவிட அதைத்தான் நம்பிச்சினம்.

யுத்தம் உக்கிரமடைய வன்னிக்க வந்தபிறகுதான் எனக்கும் அதுக்குமான பிணைப்பு விட்டது எண்டு சொல்லலாம். நான் இப்ப அதை ஒதுக்கிப்போட்டு நான் 'நானாகத்' திரியத் தொடங்கினன்.

இஞ்ச எனக்கொரு 'சப்போட்' தேவைப்படவில்லை. எடுத்ததுக்கெல்லாம் முன்னுக்கு அதைத்தான் விசாரிக்கிறது எனக்கு பிடிக்கேல்லத்தான். ஏறக்குறைய முப்பது வருச வாழ்க்கையில் இரவிலகூட இதயத்துக்குப் பக்கத்தில கைவச்சு உறங்கி எழும்பியிருக்கிறன்.

ஆனா இடையில ஒருக்கா அது என்னட்டயிருந்து முன்னூறு ரூவாக்காசோட போயிற்றுது. அதைக் கொண்டு போனவை காசை எடுத்திட்டு ஆளை தெருவில விட்டுட்டுப் போயிற்றினம்.

ஒரு நல்ல இதயமுள்ள சிங்களப்பெடியன். அதை என்னட்ட கொண்டுவந்து தந்தான். அதில்லாம எப்பிடி நானிருக்க முடியாதோ அது போலத்தான் நானில்லாம அதுகும் வேற ஆரோடயும் இருக்கேலாது.

ஆனாப் பாருங்கோ போனமாசம் என்ர கையில கிடந்த பொருளுகளோட அதுகும் போயிற்றுது. தனிய வன்னிக்க இருக்கேக்க நான் அதை ஒதுக்கிவிட்டது பிழையோ சரியோ இப்ப அதில்ல என்ர வாதம் "இவ்வளவு காலமா அது எனக்கு தேவைப்படேல்ல. இப்ப புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்திட்டுது இனி நான் தனிச்சுத் திரியேலாது. இது சாதாரணமா இலங்கையில பிறந்த தமிழர் எல்லோருக்கும் தெரியும். நானும் அப்பிடி அயண்டயீனமா இருக்கேல்லத் தான்".

"அண்டைய நாளில நான் எந்த முகத்தில முழிச்சனோ தெரியாது. காலம வெள்ளணப் போகயுக்கேயே 'கானு'க்க மேஞ்சு கொண்டிருந்த பேய்க் கோழியொண்டு எதிர்க்கரைக்கு பாஞ்சுது. நானும் விடியப்பறம்... தெருவில சனச்சச்சடியும் இல்ல... வாகனங்களுமில்லை. கொஞ்சம் 'விரைவாத்' தான் போன நான். இல்லையெண்டேல்ல. பின்ன இந்தக் கோழி பாய... எட சும்மா நிண்ட ரெண்டு மூண்டு விறாத்துப் பருவத்துக் குஞ்சுகள். அதுகளும்... குறுக்க பாய. கண் வெட்டித் திறக்கிற துக்க ஒரு கறுத்தக் குஞ்சு என்ர மோட்டச்சயிக்கில் முன் சில்லில தட்டுப்பட்டிட்டுது. திரும்பிப்பாத்தன். செட்டையள் ரோட்டில சிதற குஞ்சு கிடந்து துள்ளுது.

நினைச்சுக் கொண்டே பாக்கிறன். அந்த மோட்டச்சயிக்கில் இரவல் கேட்டவர் இன்னொருவரட்ட கேட்டுக் கொண்டு நிக்கிறார். ஆரெட்டயும் வாங்கட்டும் உதுக்கெல்லாம் இரங்கினா... பிறகு சைக்கிள் சைக்கிளா வராது.

பின்ன பாருங்கோவன் உந்த பறாளை ரோட்டில சிலதுபேர் மோட்டச்சயிக்கிலோடுறதை பள்ளங் கிள்ளமெல்லாம் பறக்கிற கியர் தானே போட்டு

சனம் இல்லை. நான் நிப்பாட்டாம ஓடினாலும் நெஞ்சு கிடந்து பதறுது. நிண்டு தான் என்ன குஞ்சக் காப்பாத்த ஏலுமே- பாவம் குழந்தைக் குஞ்சு, தாய் போனதக் கண்டுதானே பறந்திருக்கும். செத்திருக்குமோ- ச்சா உதைவிடக் கூடின காயம் வந்த கோழியளே தப்பியிருக்கு. ஆனா வீட்டுக்காரரில தான் இருக்கு. இதே சாட்டா சட்டிக்க வைச்சாலும் வைச்சிருவினம்."

நாள் முழுக்க இதே நடுக்கமா வந்துது. அப்ப தான் ஓராள் "அவசரமா ஓரிடத்த போகோணும் உந்த சைக்கிளைத் தாறியளோ" எண்டு கேட்டார். உங்களட்ட சொல்லுறதுக்கென்ன. என்னட்ட ஒரு குணம் பாருங்கோ இரவல் வாங்கவும் மாட்டன் இரவல் குடுக்கவும் மாட்டன். இல்லை யெண்டு போட்டன். அவர் முகத்தைத் தொங்க வைச்சுக் கொண்டு போனார்.

எனக்கு கோழி ஞாபகம் கோழிக்காறி திட்டியிருப்பாள். ஓடுகினம். நான் பாத்த உடன சொல்லிப் போடுவன் சொந்தச் சயிக்கில் வாகனம் இல்லை யெண்டு.

பின்ன வந்திருந்த சனக் கூட்டமும் அப்பிடியிப் பிடித்தான். மத்தியானம் சாப்பிட்டிட்டுவர அந்த மோட்டச்சயிக்கில் இரவல் கேட்டவர் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு நிக்கிறார். எனக்கு பாவமாப் போச்சு " என்ன சைக்கிள் கிடைக்கேல்லயே" எண்டு கேட்டன்.

" இல்லை" யெண்ணுது

**தமிழ்க்கவி**

அழுவாரப் போல். " ம்....சரி... இந்தா துறப்பு மாமரத்தடியில நிக்குது கொண்டு போ... அஞ்சு மணிக்குள்ள வந்திட வேணும்."

புதுப்பற்றி போட்ட ரோச் லைற் மாதிரி மாறிச்சுது முகம். 'கெதியா வருவன்' எண்டு போட்டு ஊருப்பட்ட நன்றியும் சொல்லி துறப்பை வாங்கிக் கொண்டு போனார். நான் கூட்டத்தில நிண்டிட்டன்.

ரெண்டுமணி, மூண்டு மணி, நாலுமணி, மணியஞ்சாகுது. இன்னுங் காணேல்ல. நான் வெளிக்கிட்டிட்டன். மோட்டச் சயிக்கில்ல கிடந்த பை எங்க? அப்பிடியே கொண்டு போட்டாரோ. இல்லை அது இஞ்ச வீட்டுக்க கிடக்குதெண்டு ஓராள் கொண்டு வந்து தந்தார்.

அஞ்சு மணி ஆறு மணி தாண்ட, எனக்கு கோபம் வந்திட்டுது. பென்சன் வயதில டென்சன் வாறதுதானே. ஏழுமணி, எட்டு மணி, எட எங்கையும் போட்டு டைச்சுப் போட்டாரோ- இல்லாட்டி விபத்துக் கிபத்து வந்திட்டுதோ- தேடிப் போறண்டாலும் ஒரு கையுதவியில்ல. எல்லாரும் கலியாணச் சந்தடியில.

கலியாண வீட்டுக்கு வந்த காரொண்டு எங்கட வீட்டுப்பக்கம் வெளிக்கிடுது. நான் அதில ஏறிற்றன் முதல் வீட்ட போவம். அறிஞ்சாளொண்டிட்ட மோட்டச் சயிக்கில் வந்தா வீட்ட கொண்டரட்டாம் எண்டு போட்டு காரில ஏறிற்றன். வீட்ட வர இராப்பன்னெண்டு மணியாச்சு- மழை ஒருபக்கம்.

வந்த உடன பையில கிடந்த சாமானுகள எடுத்து வெளியில வைக்க அப்பத்தான் பாத்தன் அதைக் காணேல்ல. காரால இறங்கின இடத்தைப் போய்ப்பாத்தன் இல்ல.

எப்ப போனாலும் தனியப் போகாது இந்தமுறை நகையள் காசுகள் எண்டு கொண்டுதான் போயிற்றுது. பொருளுகள் போனாலும் தேடிக் கொள்ளலாம். ஆனா இதைப் போய் எங்க தேடுற. ஆத்தந்தரமெண்டு இரவல் வாங்கேலுமே.

ரோட்டில போகவும் பயமாக் கிடக்கு. அதையெங்கையெண்டு கேட்டா. நானும் நாலு பேரை விசாரிக்காமயில்ல. ஆரெட்டப் போய்க் கேட்டாலும் தங்கட பொருள் துலைஞ்சதப் பற்றித்தான் கதைக்கினம். என்ர பொருளுக்கு முடிவில்லை. சனத்தின்ர குணம் உதுதான்.

இந்த வலக்கையில நாலு விரலும் விறைக்கிற மாதிரிக்கிடக் கெண்டு ஆருக்குஞ் சொல்லிப் பாருங்கோ உடனே " நீ உதைச் சொல்லுறாய் இஞ்சே இந்த மூட்டோட ஒரே குத்தும் நோவுமாக் கிடக்கு. எண்டு சொல்லுவார் அவர்."

அதுபோல தான் நானும் மோட்டச் சயிக்கில் விட்ட வீட்டில போய் கேட்டன். "அய்யோ உதைச் சொல்லுறியள் பாருங்கோ போன கிழமை இஞ்ச உப்பிடித் தான் நாலாயிரம் ரூபா காணாமல் போனது" எண்டா ஒருத்தி.

எப்பிடியோ அங்க களவு போறது தான் எண்டு தெரிஞ்சுது. எனக்கு நகை காசு ஒண்டும் வேண்டாம் அதைமட்டும் தாங்கோ. அதில்லாம நான் ஒரு பக்கமும் போகேலாது. என்னை நானெண்டு ஒருவரும் நம்மமாட்டினம் எண்டும் கேட்டுப் பாத்தன்.

அதின்ர அருமை விளங்கினவை அதைக் கட்டாயம் தருவினம். அதைப்பற்றி அறியாதவைக்கு நான் படப் போற துன்பம் தெரியாது.

புரிந்துணர்வு உடன்படிக்கை வந்ததாலதான் எனக்கும் அதின்ர அருமை விளங்குது. என்ன அந்த நாளையில விட்டுப் போட்டு வந்த நிலம், வீடு, வங்கி, கச்சேரி, எண்டு எங்க போனாலும் அதைத்தான் கேட்கினம்.

அதைப்போல இன்னொண்டை எப்பிடித் தேடஅறுவத்தெட்டு விவரங் கேக்கினம். அகதியளா நாளுக்கொரு ஊரும்வேளைக்கொரு வீடுமா திரிஞ்ச எங்களுக்கு இப்ப அடையாள அட்டையைக் கொண்டா எண்டால்:... உப்பிடித் தானே பாருங்கோ நானுங் கவனமில்லாம எங்கையோ கைவிட்டிட்டன் எண்டு சொல்லுகினம்.

இனி இதை வச்சிருந்துதான் என்ன செய்யப் போகுதுகள் ஒருவருககும் அது உதவப் போறதுமில்லை. தருவினம்.

நான் இனி என்ன செய்ய எண்டு முறைப்பாடு குடும்பமெண்டு. பொலிசுக்குப் போனன். அப்பதான் தெரியும் இது ஆயிரக்கணக்கானவையின்ர பிரச்சினை எண்டு.

நடந்து போகேக்க காலுச் செருப்பறுந்து போனா மற்றவையட காலத்தானே பாக்கிறம். ஏன் மற்றவைக்கும் செருப்பறுந்தா எங்களுக்கொரு ஆறுதல்.

*பி.குறிப்பு: ஆனா சென்றிப் பொயின்றுகள்ள வாங்கி கிழிச்செறிஞ்சும், போயிற்றுவா தரலாம் எண்டும் கனபேற்ற அடையாள அட்டை கிடைக்காம போயிற்றுது. வேலைக்கு வராம விட்டாலும் எண்டு கூட சிலபேற்ற அடையாள அட்டையள் வேலை கொள்ளுறவையால கெட்டுப் போச்சு. ஆனா இப்ப எல்லாம் போறவாற வழியில விழுந்து போய்ச்சு எண்டதுதான் பேச்சு இன்னும் எத்தினை பேச்சு வார்த்தைகள் வந்தாலும் எங்கட முகத்துக்கு அடையாளம் இதுதான்.*

●

---

## சிந்திக்க வைத்த சந்திப்பு

# பாத்திரமறிந்து...

**அது** முகமாலை பஸ்தரிப்பு நிலையம்:

மழை சாதுவாய்த் தூறிக் கொண்டிருந்தது. தூறலில் நனைந்தால் தடிமன் வரும்.சளி வைக்கும். சளி வைத்தால் முட்டு வரும்.

அந்தத் தாய் மழையில் நனைந்தபடி ஓடி வந்தாள். ஒரு தோளில் பாக் மறுகையில் குழந்தை. குழந்தை பாவம். மொட்டந்தலையில் தூறல் விழுந்து ஒழுகுகிறது. பஸ்தரிப்பு நிலையத்தில் நின்றவர்கள் சிலர் குழந்தையைப் பார்த்துப் பரிதாபப்பட்டனர். சிலர் தாயைப் பேசினார்கள்.

அவள் ஏன் ஓடி வந்தாள்? எதற்கு ஓடிவந்தாள்? பஸ்சில் ஏறவேணும், சீற் பிடிக்க வேணும். 'சீற்' இல்லாது விட்டால், பஸ்சில் இருப்பவர்கள் இரந்து சீற்றுக் கூடக் கொடுக்கமாட்டார்கள். என்பதனால் தானே.........

இரக்கம் இங்கே எவருக்குத் தான் இருக்கிறது? வீதிகளில் செல்பவர்களை "தம்பி.... இந்த வாகனத்தை ஒருக்கால் தள்ளி விடும்'' "குஞ்சு இந்த காய் பிஞ்சுப் பெட்டியை கொஞ்சம் தலைக்கு ஏத்திவிடு'' என்று கேட்டால் எத்தனை பேர்கள் நின்று உதவுவார்கள்.....?

அந்தத் தாயின் குஞ்சு மேல் பரிதாபப்பட்டவர்களில் அனேகமானவர்கள் கைகளில் குடைகள் வைத்திருந்தார்கள். எவராவது ஓடிப்போய் அந்தக் குஞ்சுவுக்கு குடைபிடிக்க முயன்றார்களா....?



பரிதாபம் என்பது வெறும் இலவசப் பேச்சு மட்டும் தான்! அந்தத் தாய் பஸ்சில் ஏறியதும் கண்களை சீற்றுக்களுக்கு எறிந்தாள். எனக்குப் பக்கத்தில் மட்டும் தான் ஒரு ஆசனம் இருந்தது. அவள் வந்து அமர்ந்தாள். குழந்தையின் தலையை லேஞ்சியால் துடைத்துக் கொண்டு இருந்தாள்.

பஸ் புறப்படுகிறது...........

அவள் பாக்கிலிருந்து ஒரு பத்திரிகையை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தாள். பத்திரிகையின் பெயர் 'இடி'. நல்ல பெயர்தான். இந்த பஸ்சுக்கும் இப்படி ஒரு பெயரை வைத்தால் எவ்வளவு பொருத்தமாய் இருக்கும். காலால் கழன்ற செருப்பை தேடி எடுக்க எத்தனை இடி. நடத்துநன் டிக்கற் போட்டுப் போட்டு நுழைந்து வர எத்தனை இடி. பஸ்சை நிறுத்த மணிக் கொடியை தேடிப்பிடிக்க எத்தனை இடி. வீடு போய்ச் சேரும் வரைக்கும் மண்டைக்குள் எத்தனை இடி.

"அம்மா, உந்த இடியைத் தாறியளே.....?''

"என்ன ஐசே... என்னை அம்மா என்கிறீர்?''

நான் பதறிப் போனேன்.

"சொறி மேடம்''

"நீங்கள் வன்னியே...? அவள் கேட்டாள்.

"நீங்கள்....?''

"யெவ்னா''

குழந்தை அழவில்லை. அழாமலே பாக்கில் இருந்த புட்டிப்பாட்டிலை எடுத்து குழந்தையின் வாய்க்குள் வைத்தாள்.

"மேடம்....''

"ம்.....''

"நான் வன்னி'' அவளைவிட நான் பெருமையாய் சொன்னேன். வன்னியிலை நிறையக் குளங்கள் இருக்கின்றன.சலசலவென ஓடுகிற ஆறுகள் இருக்கின்றன. உயர்ந்த மரங்கள் இருக்கின்றன. ஏதும் ஆபத்துக்கள்வந்தால் மறைய காடுகள் இருக்கின்றன.

வன்னி நிறையச் சனங்களை அரவணைத்திருக்கிறது. வன்னி உலகத்தின்ர கதவுகளை அசைக்க வைத்திருக்கு. இன்னும் நிறைய சொல்ல வேணும் போலிருந்தது.

"நீங்கள் போராளியே?'' அவள் கேட்டாள். எனக்கு வெக்கமாய் இருந்தது. நான் எதைப் பேசினேன்? நான் சொன்னவைகளிலிருந்து தான் அவள் அப்படி நினைத்தாளா? அல்லது வன்னி என்றால் அனைவரும் போராளிகள் தான் என நினைத்தாளா?

ஓ! வன்னிக்கு நிறையக் கதைகள் இருக்கின்றன.... நிறைய வரலாறுகள் இருக்கின்றன.....

எனக்கு...........?

அவளின் மடியில் உறங்கிய குழந்தை எழுந்து. "அம்மா.... அம்மா....'' என்று அழுதது.

"அம்மா இல்லை மம்மி....மம்மி எண்டனை..... மம்மி எண்டனை.....''

அவள் குழந்தையின் கன்னத்தை செல்லமாய் அள்ளி குழந்தையை சிரிக்க வைக்க முயன்றாள். குழந்தை சிரிக்கவில்லை. பஸ் சிரித்தது.

**எரிசரன்**

✦

---

வெறும் உடல் வளர்ச்சி மட்டும் ஒருவனை மனிதனாக்குவதில்லை. சிந்தனைதான் மனிதனை உருவாக்குவது. - ஐசக் டெயிலர்

# தாயகப் பயண அனுபவப் பகிர்வு

> "இதைவிட வேறவருமானமே அப்ப இல்லையா....?"
> அதிசயமாயக் கேட்ட எனக்கு அவர் அடுத்துச் சொன்ன வார்த்தைகள் பேசாமல் வந்திருக்கலாம் என்றிருந்தது.

**4**

**சுதந்திரா**

## தாய்மடி வாசம்

"ஆறு பிள்ளையள். மூத்தது கலியாண வயசிலயிருக்குது. மற்றதுகளும் இந்தா உந்தாவண்டு இருக்குதுகள். இளைய் மூண்டும் படிக்க ஆசை ஆனா வசதியில்லை. என்ரை ஒருத்தன்ர உழைப்பில என்னெண்டு மோனை படிக்க ϵ வக்கிறது. அண்டண்டைக்கு சாப்பாட்டுக்கே திண்டாடுற நேரத்திலை என்னேயிறது. ஊரெண்டா எப்பிடியிருந்திருக்குங்கள் என்ரை பிள்ளையள். ஆனா குறுக்காலை போன உந்த ஆமி எப்ப வந்திச்சோ அண்டு இடிவிழுந்தது"

'உங்கட வீடுகளிலையெல்லாம் இப்ப ஆமியா....?"

"ம்... அவங்கள் இப்போதைக்கு துலையிறமாதிரி இல்லைப் பிள்ளை. ஏதோ இப்ப வந்திருக்கிற இந்த அமைதியைத்தான் நம்பியிருக்கிறம். ஆனா அரசாங்கம் எடுக்கிற முடிவிலதான் எல்லாம் இருக்கு."

எனக்குப் பதில் சொல்லியபடி நடந்து கொண்டிருந்தார் அந்த ஐயா. மெலிந்து ஒடுங்கிய உருவம். காலில் செருப்பில்லை. ஆனாலும் வாழ்வின் மீதான நம்பிக்கையும் தன்னை நம்பியிருக்கும் ஜீவன்களின் வாழ்வுக்காகவும் அந்த மனிதன் வேகமாக நடந்து கொண்டிருந்தார். அவரது வேகத்துக்கு நானும் ஈடாக விரைவாக நடந்து கேட்கிறேன். "உங்களுக்குச் சலிக்கேல்லையே ஐயா ஒரே இடப்பெயர்வும், வறுமையும் துயரமும்.....?"

என்னம்மா செய்யிறது. உயிரைக்குடுத்த அந்தப் பிள்ளையளின்ர இழப்பென்ன சும்மாவே...? அதுகளின்ர கனவு பலிக்கோணும். அதுவரைக்கும் நாங்க இப்பிடித்தான் வாழவேணும். நாடு வந்திட்டா வாழ்ந்திடுவம். இத்தனை வலிகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் எமக்கென்றொரு தேசம் உருவாக வேண்டும் என்பதில் இத்தனை உறுதியுடன் இருக்கிறாரே.

வெளிநாடுகளில் அந்தந்த நாட்டு பிரஜா உரிமைகள் பெற்றதோடு பலருக்கு தாய்மடி வாசத்தின் தேவையே மறந்து போயிருக்கும் கொடுமை அங்கிருக்க... போருக்குள்ளும், போராடும் பூமிக்குள்ளும் இருந்து கொண்டு விடுதலையை மட்டும் நேசிக்கும் இந்த மனிதர்களை என் இதயமார வணங்குகிறேன். தலையிலும், தோழிலும் பாரங்களைச் சுமந்தபடி நடந்து கொண்டிக்கும் அந்த மனிதர்களோடு நானும் நடந்து அடுத்துப் பயணிக்கவிருக்கும் வாகனத்தில் ஏறுகிறேன்.

உண்மையிலேயே அந்த வாகனத்தை வெளிநாடுகளில் பழுதான பழைய வாகனங்களை நெரிக்கும் இடங்களில்தான் காணலாம். ஆனால் இத்தனை தடைகளுக்குள்ளும் தலைநிமிர்ந்து வாழுவோம், வாழ்ந்து காட்டுவோம் எனும் துணிவோடு அந்த வாகனங்கள் நிற்பது போலிருந்தது எனக்கு. அக்கா வாங்கோ.... .அண்ணை வாங்கோ....வாகன உரிமையாளர்கள் அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

தாரைக்கண்டு பலகாலம் ஆகிவிட்டிருந்த அந்த வீதி. காற்றள்ளி வீசிய புழுதி ஏதோவொரு பெருமிதத்தையும், சுதந்திர உணர்வையும் தந்தது. சற்றுமுன் சற்றுத்தூரம்



தள்ளி அந்தச் சிங்கள முகங்களின் பார்வைகளுக்குள் நின்றிருக்க முகத்தில் நிரம்பிய பயமும், அருவெருப்பும் போய் அந்த மண்ணில் வாழும் உறவுகளைப் பார்க்கும் ஆவலும் அவர்களின் நினைவுமே நெஞ்செங்கும் நிறைந்திருந்தன.

வாகனம் புறப்பட்டு ஊரத் தொடங்கி வேகமெடுத்தது. 10 வருடங்களின் பின் மண்ணெண்ணை வாசம் வயிற்றைப் பிரட்டியது. தோழில் கிடந்த தோள்பையிலிருந்த சோடாவை உடைத்துக் குடித்துவிட்டு யன்னலால் முகத்தை வெளியே நீட்டுகிறேன். காற்று வந்து முகத்தில் பட இனிமையாயிருந்தது. வீதி ஆங்கங்கே பள்ளமும் திட்டியுமாக இருந்ததால் குலுக்கியடித்தது. பின்னிருந்து யாரோ ஓங்காளிப்பது கேட்டது. மண்ணெண்ணை மணம் அந்த மனிதருக்கு ஒத்துக் கொள்ள வில்லைப் போல.......

முன்பு பெற்றோலில் ஓடிய வாகனங்கள். போகும் தூரமோ வரும் தூரமோ தொலைவோ தெரியாது. அத்தனை வேகமான பயணங்கள் அப்போது நடந்தவை. பெற்றோலைத் தவிர வேறெதிலும் ஓடாத வாகனங்கள் இன்று மண்ணெண்ணையில் எப்படி ஓடுகிறது....? ஆச்சரியமாய்த்தானிருந்தது. நான் இந்த மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்த 1992 ம் ஆண்டும் மண்ணெண்ணையில்தான் வாகனம் ஓடியது. அப்போ இந்த மண்ணெண்ணையின் மகிமை எனக்குப் புரியவில்லை.

"கார் இல்லாது விட்டால் கௌரவம் இல்லையெனக் கலங்கும் புலத்தார் பலரது, போலிக் கௌரவமும், போலிவாழ்க்கையும் பெரிதென எண்ணும் அவர்களெங்கே? போர் நடக்கும் மண்ணுக்குள் நின்று போராடி வாழ்வை வெல்லும் இந்த வரலாற்றின் மனிதரெங்கே......! இவர்களை வெல்லவோ இவர்களுடன் வாழவோ யாராலும் முடியாது.....".

இருமருங்கும் காடுகள் போரின் வலிதந்த காயங்களால் காடுகளும் அங்கங்கே காயங்களோடு காட்சியளித்தன. இயற்கையைக் கூட தமிழனின் பிரதேசங்களில் வாழ விடாத பேரினவாதம்.

"இனி ஆமியில்லையோ...?" வாகனச் சாரதியைக் கேட்டேன். 'இனி தமிழீழ காவல்துறைதான் பிரச்சினையில்லை."

"இன்னும் எவ்வளவு தூரம் போக வேணும்....?"

"கெதியிலை போகிடலாம்"

என்றான் அவன். பின்னிருந்து ஊர்க்கதை உறவுக்கதை, நோயில் இருப்போர் கதை என்று பலவிதமான உரையாடல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

நேரத்தைப் பார்த்தேன். அது இன்னும் சந்திரிகாவின் நேரத்திலேயே இருந்தது. அருகில் இருந்த சுதான்ரியிடம் கேட்டு மணிக்கூட்டை தமிழீழ நேரத்திற்கு மாற்றிவிட்டு எனது பிள்ளைகள் இப்போ என்ன செய்து கொண்டிருப்பார்கள் என்பதைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தேன்.

விடுதலைப்புலிகளின் 'பாஸ்'பதியும் இடமது. எனது விபரங்களைப் பதிந்து விட்டுத் தன்னுடன் வருமாறு அழைத்தான் அந்த இளைஞன் எனது பொருட்களையும் தூக்கிக் கொண்டு பின்னே போகிறேன். தமிழீழ காவல் துறையினரின் சோதனை யிடமது. நான் நிற்க வேண்டிய இடத்தைக் காட்டிவிட்டுத் தன் கடமைக்குப் போனான் அந்த இளைஞன்.

சோதனைக்காய் வரிசையில் நின்றவர்களோடு நானும் இணைந்து கொள்கிறேன். சிலவாய்களின் கோபமிது......

"என்ன சோதிக்கிறாங்கள்....? நாங்களென்னத்தைக் கொண்டு போறம்...?"

அந்தச் சிலரின் உரையாடலில் கோபம் தான் வந்தது அவர்கள் மேல். யாரிவர்கள்? ஏன் இப்படி யெல்லாம் இவர்கள் கதைக்கிறார்கள்....? இது போராடும் பூமியல்லவா...! போருக்குள்ளிருந்து போராடி வெல்லப்பட்ட வன்னி மண்ணல்லவா.....இந்த மண்ணை மீட்க எத்தனை போராளிகள் தங்களது ஆவியை அர்ப்பணமாக்கிப் பெற்ற மண்ணல்லவா இது...ஏன் இத்தனையும் மறந்து போனார் கள்...! இவ்வளவு பாதுகாப்புக்குள்ளும் ஊடுருவியல்லவா சிங்களம் 26.09.01 சங்கரென்ற ஆலமரத்தை சரித்து விழுத்தியது. அந்த ஆலமரம் போல் எத்தணையாயிரம் விருட்சங்கள் விளைந்து விரிந்திருக்கும் மண்ணுக்குள் இன்னொருமுறை சிங்களம் வந்துவிட வழியமைப்பதா....? இது எங்களது மண். இவர்கள் எங்களது பிள்ளைகள் கடமையில் நிற்கும் இந்தக் காவியங்களின் கடமையுணர்வை எங்களது கோபங்கள் கொழுத்தி விடுவது என்ன நியாயம்....? போர்முடிந்து எங்களுக்கான பூமியில் பூபாளம் எழும் பொழுதொன்று வந்த பின்னர் இந்தச் சோதனைகளுக்கு இடமிருக்காது. அதுவரை நாம் நாவடக்கம் காத்து நமது பிள்ளையளுக்கு ஆதரவாக இருப்பதுதானே இன்றையதேவை.

சற்றுமுன் அவர்கள் அந்தச் சிங்களப்படைகள் என்னவெல்லாம் கேட்டார்கள். எத்தனை அக்கிரமம் பண்ணினார்கள். வன்னிக்குப் போகும் பொருட்களில் எதைச் சோதிக்காமல் விட்டு வைத்தார்கள்....? அணுவணுவாகவல்லவா சோதித்தார்கள். அதற்குள் எத்தனை குத்தற்பார்வைகள். குதறல் பேச்சுக்கள், விழுங்கியேவிடும் விசமப் பார்வைகள், அத்தனையும் சகித்து எவனையெல்லாமோ ஐயா என்றழைத்து ஆலவட்டம் பிடிக்காததைத் தவிர அனைத்து மரியாதையும் செய்தல்லவா அவர்களது தடை தாண்டினோம்.

இதையெல்லாம் எப்படி சற்றைக்குள் மறக்க முடிந்தது:.. அப்போது இந்த வாய்களெல்லாம் எப்படி அடைத்து கிடந்தது....? அங்கு கேட்டிருக்கலாமே ஏன் இப்படியெல்லாம் செய்கிறீர்கள்....? நாங்கள் ஏதும் செய்யவில்லையே என்று ஏன் கேட்கமுடியாது போனது....? ஓ...வீட்டுக்குள் தான் எங்களுக்கெல்லாம் வீரம் வருமோ...?

இந்தப் பிள்ளைகள் மீது கோபம் கொட்டத் துடிக்கும் கோபத்தை அங்கு அவர்கள் முன் கொட்டியிருக்கத் துணிவில்லை. எவனுக்கோ சல்யூட் அடிக்கத் தயாராகவிருக்கும் இந்தத் தமிழர்கள் இந்தப் பிள்ளையளுக்கு சல்யூட் அடிக்க வேண்டாம்.... அவர்கள் மீது கோபப்படாமல், கொதிக்காமல் அவர்களைப் புரிந்து நடப்பதே பெரும் கடமை. அக்கா என்றும், அம்மா எனறும், ஐயா என்றும், அண்ணா என்றும் தங்கச்சி என்றும்உறவு சொல்லியழைத்துக் கடமையில் நிற்கும் இந்தத் தங்கைகளும் தம்பிகளும் எங்களது உறவுகள். எங்களது பிள்ளைகள் எனும் நினைவே இனி இந்த இடம் வரும் ஒவ்வொரு ஈழத்தவனின் நினைவையும் நிறைக்க வேண்டும.

என் நினைவுச் சங்கிலிகள் அறுபட்டு அந்தக் கடமைவீரர்களின் செயல்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பிரமிக்கிறென். அது எனது முறை. அங்கு நின்ற காவல்துறைப் பெண் பிள்ளைகள் எனது பயணப் பொதிகளைச் சோதனையிட்டு முடித்து விட்டு ஒழுங்கான எனது பொருட்களை அடுக்கி ''சரியக்கா நீங்க போலாம்'' புன்னகைமாறாத முகங்களோடு எனக்கு விடைதந்த அந்தத் தங்கைகளிடமிருந்து விடைபெற்று அடுத்த பயணத்துக்காக நடக்கிறேன்.

"அக்கா வாங்கோ மோட்டசயிக்கில்லை போவம்...". "அக்கா வாங்கோ இப்ப எங்கடை வான் வெளிக்கிடும்.... அக்கா வாங்கோ காறில போகலாம்...." தத்தமது வாகனங்களிற்கு ஆட்களைச் சேர்க்கும் அவர்கள் ஒவ்வொருவரது அவசரமும் அவர்களது அழைப்பில் தெரிந்தது. சாதாரண வாழ்க்கை வாழ்ந்த நாட்களிலென்றால் இப்படியெல்லாம் வாய்வலிக்க கூப்பிட வேண்டிய தேவையிராது. ஆனால் இன்று இந்த மனிதர்களதும் இந்த வாகனங்களதும் வருவாயை நம்பி எத்தனை சீவன்கள் காத்திருக்கும். கணவனின் கையை எதிர்பார்த்து மனைவி, அப்பாவின் வரவை எதிர்பார்த்து பிள்ளைகள், அண்ணணின் வரவை எதிர்பார்த்து தங்கைகள், மகனின் வரவை எதிர்பார்த்து வயோதிப அப்பாவும், அம்மாவும்..... இப்ப உறவுத்தொடர் இவர்களை எதிர்பார்த்திருக்க ஆறுதலாய் நிற்க முடியுமா....?

ஸ்கந்தபுரம் புறப்படத் தயாராயிருந்த 15 பேரையடக்கக் கூடிய வான் அது. நானும் சுதான்ரியும் அதில் ஏறிக் கொள்கிறோம். எங்களைத் தவிர அப்போது வேறுயாருமேயில்லை அந்த வானில். எப்ப தம்பி வெளிக்கிடுவியள் கேட்ட சுதான்ரீக்கு கெதியில வெளிக்கிடுவமம்மா.... நீங்க சாப்பிடுகிறதெண்டா சாப்பிட்டு இருங்கோ.... சொல்லிவிட்டு அந்த வான் உரிமையாளன் ஆட்களைச் சேர்க்க அழைத்துக் கொண்டிருந்தான்.

கடலை வேணுமா...? கடலை வேணுமா...? என்னருகே வந்து நின்று கேட்ட அந்த மெல்லிய குரல் என் சிந்தனையைக் கலைக்கத் திரும்புகிறேன். 5 ரூபா கடலை வேணுமே...? வன்னிக் கடலை சாப்பிடப் பிரியமாயிருந்தது. கடலை சாப்பிட்டால் பின் என்னை உலைக்கும் தலைச்சுற்றை நினைக்கப் பயமாயிருந்தது. "வேண்டாம்" என்றேன். நான் ஆனால் என்னைத் தாண்டிப் போய் கடலைச் சுருள்க ளைச் சுமந்து நிற்கும்



அந்தப் பிஞ்சு முகத்தவன் என் கவனத்தில் பதிந்து போனான். தம்பி இஞ்சை வாங்கோ...! போனவன் பயந்து பயந்து என்னருகில் வந்து நின்றான். எண்ணையைக் கண்டு கனநாட்களாகி விட்டிருந்த அவனது தலையும், வெற்று மேலோடு வெளுறிய காற்சட்டையும், எல்லாவற்றையும் தாண்டி அவனது கண்களில் முட்டி நின்ற வேதனையின் அடையாளங்களாய் அவனது உருவம். அந்தக் கண் கள் சொல்லி நின்ற சோகம் அப்படியே அவனை என்னுடன் அழைத்துப் போமென்றிருந்தது......

தொடரும்.

சிறுகதை

# இது எனக்கு மட்டுமேயாகட்டும்

சூரியநிலா

**அவளது** குரல் கேட்டது. என் மனதிற்கினியவளின் குரல். ஆசுவாசமாய் வெளியிலே அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்த நான் எழுந்து உள்ளே வந்தேன். அவளை மறைந்திருந்தே ரசிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இது ஒரு தலைப் பாசம். அவள் என்னைப் பார்ப்பதற்கே விரும்புவது கிடையாது. இந்த நிலையில் எனது அன்பை எப்படி நான் அவளிடம் காட்டுவது?

எனது அறைக்குள் வந்து சாளரத்தருகில் அமர்ந்து அதன் திரையை இழுத்து விட்டேன். அந்தத் திரைக்கு என்னில் நேசமதிகம். அவளை எனக்குக் காட்டும் என்னை அவளுக்குக் காட்டாது.

அதோ என்னவள். நாயின் கைகளைப் பற்றியபடி துள்ளித் துள்ளி வருகிறாள். அவளுக்கு எல்லாவற்றுக்கும் அம்மாதான் வேண்டும். துயிலெழும்ப, உடற்சுத்தம் செய்ய, தலைவார, பாடசாலைக்கு கூட்டிச் செல்ல, அழைத்துவர......, அவள் ஒரு அம்மாப் பைத்தியம். நான் அவளின் பைத்தியம்.

அவர்கள் இருவரும் வீட்டினுள் சென்றுவிட அவர்களின் பேச்சுக் குரல்கள் எனக்குக் கேட்கின்றன. அவற்றை வைத்துக் கொண்டு என்னவள் என்ன செய்கிறாள் என்பதனை கற்பனையில் பார்த்துவிட என்னால் முடியும்.

அவளது காலணி வெட்டிவிட்டதாய்ப் பெரிதாய் அழுகிறாள். இப்போது குதித்தபடி தானே வந்தாள்? கழற்றும் போதுதான் வேதனை தெரிந்திருக்க வேண்டும். அவளது தாய் ஏதோ சமாதானம் சொல்வது கேட்கிறது. என்னவள் இன்னும் பெரிதாய் நிலத்தை உதைத்து அழும் ஒலி கேட்கிறது. என்னிடம் மருந்துகள் இருக்கின்றன. ஓடிப்போய் அவளுக்கு மருந்து போட்டுவிடப் பரபரக்கும் எனது கைகளை இறுகக் கட்டி என்னை அடக்கிக் கொள்கின்றேன். ஏனெனில் என்னைக் கண்டால் அவள் காயத்தை மறந்து விட்டு இன்னும் பெரிதாய் கத்தி அழுவாளே..

பாவம் அவள் முன்னரென்றால் எனது அறையை, எங்கள் வீட்டு வாசலை முறைத்தபடியே பதுங்கிப் பதுங்கிப் போய் வருவாள். இப்பொழுது நான் இங்கை இல்லை என்ற நினைவுடன் சுதந்திரமாகத் துள்ளித் திரிகிறாள். அவளது அந்தச் சுதந்திரத்தை நான் ஒருபோதும் குறைத்து விடக் கூடாது. அப்படி நான் செய்வது அவளை நான் நேசிப்பதை பெய்யாக்கிவிடும். உண்மையான நேசம் என்பது அந்த நேசத்திற்குரியவளுக்கு ஒரு போதும் தீங்கிழைக்கத் தூண்டாது. அவர்களே எங்களுக்கு தீங்கிழைத்தாலும் கூட....

சாப்பிட வேண்டும் என்பதைக் கூட மறந்துபோய்க் கூரையை வெறித்தபடி நிலைகுத்திப் போயிருந்த எனது தோற்றத்தின் அகோரம் கண்டு உள்ளே வந்த அவளது தாய் பயந்து போயிருக்க வேண்டும்.

“தம்பி.....தம்பி... என்ன இது? ஏன் இப்படி இருக்கிறீங்கள்?”

இறுதிச் சொல்லில் தளும்பிய அந்தப் பாசக்குரல் கேட்டுத் திடுக்கிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டேன். எனது விழிகளும் ஏனோ சுரந்தன.

மூக்கை உறிஞ்சி, கண்களையும் சேலைத் தலைப்பினால் துடைத்தபடியே “இந்தாங்கோ தம்பி சாப்பிடுங்கோ. சுடச் சுட கொண்டு வருவம் எண்டு தான் பார்த்னான். ஆனா உவள் இப்பதான் நித்திரை கொண்டவள்.”



என்றபடி ஏதோ சிற்றுண்டியை எனக்கருகில் வைத்தாள் என்னவளின் தாய்.

ஓ! என்னவள் குட்டிப் பகல் தூக்கம் போடுகின்றாளா? அப்படியானால் அவளது நினைவுகளில் மூழ்கி மதியச் செய்திகள் எதையும் கேட்காமல் விட்டுவிட்டேனா? நிலைமை மூளையில் இப்போது தான் உறைத்தது.

“இண்டைக்கு உங்களுக்கு மனஞ்சரியில்லைப் போல கிடக்கு. நீங்கள் சாப்பிடுங்கோ. மற்றாக்களுக்கு உள்ள கொண்டு வந்து வைச்சிருக்கிறன். பிறகு வாறன்” என்று விட்டுப் போய்க்கொண்டிருந்த அந்தத் தாயைத் திரும்பிப் பார்த்தேன். ஒவ்வொரு அசைவிலும் பாசம் பொழியும் அந்தக் கருணை உருவத்தைப் பார்க்கவே கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் இருந்த மனநிலையில் அந்தத் தாயை நோகடித்து விட்டேனோ?

மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா. என்ன சொன்னீர்கள்? பிறகு வருகிறேன் என்றா? எப்படி முடியும் உங்களால்? இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்கள் இளவரசி எழுந்து உங்களை வாட்டியெடுப்பாளே. மீண்டும் இரவு அவள் தூங்கும் வரை நீங்கள் ஓரிடமும் அசைய முடியாதே. அதன் பிறகு அலுப்பில் நீங்களும் தூங்கி விடுவீர்கள். பின்னர் எப்படி யம்மா வருவீர்கள். இனி நாளை அவள் பாடசாலைக்குப் போன பின்னர் தான் நானும் நீங்களும் சற்று ஓய்வாகக் கதைக்க முடியும். அப்போது மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனோ தெரியவில்லை மாலைப் பொழுதில் என்னவள் அடித்த கொட்டங்களை என்னால் ரசிக்க முடியவில்லை. அவளது தாயை மனம் நோகடித்த குற்ற உணர்வு போலும் நான் எனது வேலைகளிலேயே மூழ்கிப் போனேன். வழமையான என்னவளின் இன்னிசைக் குரலின் கீச்சிடல்களில் லயித்து என்னைத் தொலைக்காமல் நிறையவே வேலை செய்தேன். கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கவும் முடிந்தது.

எப்பொழுதும் போல கடிகாரத்தின் எச்சரிக்கை ஒலி அதிர்வில் விழித்தேன். காலைப் பொழுதின் இதமான தூக்கத்தை இங்கே வந்த சிலநாட்களில் இருந்து என்னவளுக்காகத் தியாகம் செய்யப் பழகிக் கொண்டேன். அவள் எழும் முன் எழுந்து குளித்துவிட வேண்டிய தேவை எனக்கிருந்தது. இல்லையெனில் நான் கிணற்றுக்குப் போவதை அவள் கண்டு விடுவாளே.

கண்களும் உடலும் தூங்கச் சொல்லி கெஞ்சின. ஆனாலும் என்னவளின் வீரிட்ட கத்தலுக்குப் பயந்து போர்வையை உருவியபடி எழுந்தேன். எனது கடமைகளை நான் முடித்து வரவும் IBC தொடங்கவும் நேரம் சரியாகவே இருக்கும்.

பனிநீர் சில்லிட்டது. கைகள் விறைத்து ஆடை மாற்றும் போது மேற்சட்டையின் பொத்தான்களைப் போட்டுக் கொள்ளவே முடியாமல் போனது. எல்லாவற்றையும் சகித்துக் கொண்டேன். அவளுக்காகத்தான்.

எனது நண்பர்களுக்கு நான் படுகின்ற சிரமங்கள் அனைத்துமே தெரியும். அதனாலேயே என்னுடனே எழுந்து நான் குளித்து முடித்ததும் சூடாகத் தேநீர் தருவார்கள். அவர்கள் தரும் தேநீரைப் போல் அவர்களது அந்த அன்பும் எனக்கு இதமாக இருக்கும்.

எனது நண்பர்களுக்கும் நான் அவள் மேல் வைத்திருக்கும் விருப்பம் தெரியும். அவர்களுக்கும் அவளில் விருப்பம்தான். இரட்டைப் பின்னலை மடித்துக் கட்டியபடி சீருடையும் காலணியுமாய் வந்து கண்களும் சிரிக்கச் சிரித்துக் கையசைத்துப் போகின்ற அவளை யாருக்குத்தான் பிடிக்காது?

அழகு என்பது உருவத்தால் வருவதல்ல அவரவர் செயல்களால் வருவது என்பதுதான் எனது கொள்கை. அவளது செயல்களும் அப்படித்தான். யாருக்கும் தீங்கு நினைக்க மாட்டாள். எல்லாருக்கும் ஓடிப்போய் உதவுவாள். யார் அழுதாலும் ஏன் என்று தெரியாமலே தானும் சேர்ந்து அழுகின்ற குழந்தை அவள்.

ம்......இருந்தாலுமென்ன, என்னை ஏற்றுக் கொள்ள, எனது அன்பை உணர்ந்து என்னுடன் ஒருவசனம் கதைக்க அவளால் முடியவேயில்லையே.

எனது நண்பர்கள் அவளை என்னுடன் கதைக்க வைக்க பகீரதப் பிரயத்தனம் எடுத்துப் பார்த்திருக்கிறார்கள். பாவம் அவர்கள். காற்று நுழையும் இடமெல்லாம் நுழையக் கூடிய வல்லமை படைத்த அவர்கள் தோற்றதுஅவளிடம் தான்.

எனது அந்த வேதனை கண்டு அவளது அன்னை படுகின்ற வேதனையை யாராலும் எதற்குள்ளும் அடக்கிவிட முடியாது. அந்த தாயுள்ளம் என்னையும் தனது குழந்தையாகவே பார்த்து ஒவ்வொரு கணமும் அழுது கொண்டிருந்தது. சிலவேளைகளில் அந்தத் தாய்க்காகவேனும் இங்கிருந்து போய்விட வேண்டும் என்று நான் முயன்ற வேளைகளில் அதைத்தடுத்ததே அந்த தாய்தான். அத்துடன் எனக்கு ஏற்ற வசதிகள் அனைத்தும் இங்கதான் இருந்தன. ஆகவே நான் எவ்விதத்திலும் யாருக்கும் சிரமம் ஏற்படுத்தக் கூடாது என்று அமைதியாகி விடுவேன்.

ஒரு முறை எனது படங்களடங்கிய புகைப்படத் தொகுப்பு ஒன்றை எனது நண்பர்கள் எடுத்துப் போய் அவளிடம் காட்டியபோது எனது படத்தை தனது தளிர்க்கரங்களால் தடவியபடியே

“இந்த அண்ணா இப்ப எங்கை?” என்று கேட்டாளாம் என் இனியவள். அந்தக் கேள்வியால் திகைத்துப் போன எனது நண்பர்களினதும், அவளது தாயினதும் கண்களனைத்தும் சொல்லி வைத்தாற்போல கலங்கி வழிய..."ஏன் அழுகிறியள்?" என்று தானும் கண் கலங்கினாளாம். “இவர் இப்ப.....வீ...வீரச்...சாவு....” என்று சொன்ன தோழன் அதற்கு மேலும் அங்கிருக்க முடியாமல் ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டு கதறியழுதது, இன்னுமொருவன் வந்து எனது மடியில் கிடந்து விம்மியது..... எல்லாமே மறக்க முடியாதவை.



பாவம் என்னவள். நான் இந்தத் தேச விடுதலைப் போரிலே இணைந்து கொண்ட கடந்த பதின் மூன்று வருடங்களில் சந்தித்த சமர்க்களங்களில் ஏற்பட்ட விழுப்புண் கள் காரணமாக தழும்பேறிய நெற்றி, உருவிழுந்த மூக்கு, சிதைந்த ஒருபக்கக் கன்னம், எரிகுண்டு பட்டுக் கருகிச் சுருண்ட காது, இன்னும் பெருவிரலை இழந்த இடதுகை என்று உடல் கொள்ளாத் தழும்புகளுடனும், ஆறாத காயங்களுடனும் இருக்கும் என்னை எப்படி ஒரு மனிதனாக அந்த ஏழு வயதுச் சிறுமியால் ஏற்றுக் கொள்ள முடியும்?

அவள் மட்டுமல்ல அவளது வயதினர் என்னை முதன்முதலில் காணும் புதியவர்கள் பொதுவில் யாருமே என்னைக் கண்டால் பயந்து தான் போவார்கள்.

வீட்டிற்கு நான் வருவதேயில்லை என்று என்னைப் பெற்ற எனது அன்னை தினமும் கண்ணீரோடு வாழ்வதாக எல்லோரும்தான் வந்து சொல்லுகிறார்கள்.

என்னைக் கண்டதுமே ஓடி வந்து கன்னம் வழித்து நெட்டி முறிக்கும் எனது அன்னைக்கு இனிமேல் நாவூறுபடச் சாத்தியமே இல்லை என்பதுடன் நாவூறு கழிக்க ஒரு பக்கக் கன்னமுமில்லை என்பது தெரிய வேண்டாமே என்று தான் வீட்டிற்கே போகாமல் அம்மாவே தேடி வந்தாலும் ஒளித்துத் திரிகிறேன்.

என்னைப் போல் இன்னொரு இளைஞன் உருவற்றுப் போகக் கூடாது. ஆசையாய் என்னவளைப் போன்ற ஒரு குழந்தையின் இயல்பில் மயங்கி அதனைத் தூக்கி கொஞ்சக் கூட முடியாமல் தவிக்கக் கூடாது. இரவுகளைப் பகலாக்கி வாழக்கூடாது. தலைக்கவசமும் மழைக் கவசமுமாய் திரியக்கூடாது. இன்னும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நான் படுகின்ற வேதனையை யாருமே அனுபவிக்கக்கூடாது.

அதற்காக.... அதற்காகத்தான் இப்பொழுது என்னால் இயன்ற வரை தீவிரமாய்ச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன். எனது உருவம் தான் சிதைந்ததே தவிர உறுப்புக்கள் எவையும் சிதறவில்லை. எனது சோதனைகளை இனிமேல் யாருமே அனுபவிக்கக் கூடாது என்பதற்காக இழப்பதற்கு என்னிடம் ஒரு முழுமையான உடல் இன்னும் மீதம் இருக்கிறது.

எனது மூளையின் இறுதிக்கலம் இயங்கும் வரையும் உறுதியுடன் செயற்பட என்னால் முடியும். காயப்பட்டுத் தழும்பேறியது எனது என்றோஒருநாள் அழிவிற்குட்படும் உடலே அன்றி உணர்வு சுமக்கும் உள்ளமல்ல.

எப்படி எனக்குள் இத்தனை அற்புதமான சிந்தனைகள்? இவ்வளவு வேதனைகளுக்குள்ளும் என்னால் எப்படி நின்று பிடிக்க முடிகிறது? ஒரு சராசரி இளைஞனாக இருந்த என்னால் எப்படி இப்படி மாற முடிந்தது? எனக்கே சிலவேளைகளில் வியப்பு வருவது உண்டு. வழமைபோல் எதற்கும் வரும் அந்த முகம்தான் சிரித்தபடி பதிலாய் வரும்.

முன்னர் போல நான் இப்போதும் எங்கள் தேசச் சுமைதாங்கியின் படத்தை என்னுடன் வைத்திருப்பதில்லை. ஏனெனில் என்னைப் பார்த்து அந்த நல்லமனமும் வேதனைப்பட்டு விடக் கூடாது. ஏற்கனவே அளவற்ற வேதனையை தாங்கும் அந்த இதயத்தை நானும் வலியடைய வைக்கக் கூடாது என்பதற்காக படமில்லாமலே மனதிற்குள் பதிந்து போன அந்தப் புன்னகையை நினைத்தபடியே செயலாற்றிக் கொண்டிருக்கின்றேன். இதோ, இப்பொழுதும் கூட அந்தப் புன்னகையை நினைக்க எனக்கும் சின்னதாய் ஒரு முறுவல் வருகிறது உங்களுக்கும் வருகிறதா? அப்படியானால் என்னோடு சேர்ந்து சிரியுங்களேன்.

மனிதன் உருவாக்கும் போலிப் பணத்தை விட பணம் உருவாக்கும் போலி மனிதரே அதிகம். - சிட்னி ஹாரிஸ்

# விண்ணரசின் தேவதூதன் பிறந்தான் பாரில்...



அகிலத்தில் பனித்துளிகள் நீராட்ட
அன்னை மரியாள் தாலாட்ட
ஆடிடும் வைக்கோல் தொட்டிலிலே
ஆனந்தமாய் வந்துதித்தான் ஏசுமகன்.

இதயத்தில் இருளை போக்கிடவே
இன்றைய நாளில் விண்ணரசின் மகன் அவதரித்தான்
ஈடில்லா அமைதி வாழ்வை இன்று
ஈட்டித்தந்துள்ளான் தேவபாலன்

உயிர்களிடத்தில் கருணை சொரியவும்
உண்மை வாழ்வை பிரித்து காட்டவும்
ஊட்டிட்டான் உணர்வுகளில் தேவமைந்தன்
ஊறின்றி அவன் புகழை பாடிடுவோம் நாளுமே.

எங்கும் பாலனின் சமாதான சூழல் பாரீர்
எதிலும் பாலனின் அன்பைப் பாரீர்
ஏற்றிடும் தீபத்தில் அவன் ஒளி காண்பீர்
ஏழையின் சிரிப்பில் அவன் முகம் காண்பீர்.

ஐயன் ரட்சகர் அருளால் இன்று நாம்
ஐயமின்றி வாழ்வில் சாந்தி கண்டோம்
ஒருவர் மற்றவரை புரிந்து கொண்டால்
ஒரு துன்பமில்லை என அறிந்து கொண்டோம்

ஒரு தாய் மக்களாய் வாழ்ந்திடுவோம்
ஒருயிரிலும் அன்பைக் கொண்டிடுவோம்
ஒளடதமாய் போற்றிடுவோம் அவன் உரையை
ஒளதாரியம் அல்லவா அவன் பிறப்பு மண்ணில்!

கு.தனுஷன்
ஆண்டு - 7
கிளி/அக்கராயன் ம.வி.


அன்பு நண்பர்கள், வாடிக்கையாளர்கள் சக
தொழில் நுட்பவியலாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய நத்தார் புதுவருட நல் வாழ்த்துக்கள்.

★ நவநாகரிக பிறேம்களிலான
மூக்குக் கண்ணாடிகளைப்பெற்றுக் கொள்ளவும்,

★ அழகிய சங்குப் பற்களை
உறுதி மிக்கதாய்ப் பொருத்திக் கொள்ளவும்.

★ மிதந்த பற்களுக்குச் சிறந்த முறையில்
"கிளிப்" போட்டுக் கொள்ளவும்.



இன்றே விஜயம் செய்யுங்கள்
எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்.

564,566, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி:-021-2222486

91,கே.கே.எஸ். வீதி
கொக்குவில் சந்தி.
80,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

(சி-7575)



அனைத்து எம்மினிய மக்கள் அனைவருக்கும்
நத்தார் பண்டிகை நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக
யாழ்நகரில் மின்னிடும்தங்க நகைகள் விற்பனையில்
தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

நியூ நகுலா ஜுவல்லறி
இல,74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
இல,171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நகுலா நகை மாடம்
இல,241 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7574)



எம் இனிய நத்தார் திருநாள்
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

சகல விதமான கேக், ஐஸ்கிறீம்,
குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருட்கள்
சகல விதமான வாசனைத் திரவியங்கள் மற்றும்
ஆயுர்வேத மருந்துச் சரக்குகள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றிட நாடுங்கள்

ஸ்ரீ காந் எசன்ஸ் அன் குறோசறிஸ்

161A, கே.கே.எஸ்.வீதி,
(சத்திரத்துச் சந்தி)
யாழ்ப்பாணம்.
தொ.பேசி:- 021-2222219.

(சி-7572)



எமது இன்னல்கள் நீங்கி அல்லல்கள் தீர்த்து
சமாதான வாழ்வை தந்திடுவாய்பாலக யேசுவே!
இனிய உள்ளங்கள்அனைவருக்கும்
எம்மினிய நத்தார் நல்வாழ்த்துக்கள்!





புத்தம் புதிய மோட்டார்சைக்கிள்கள்
அவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
பற்றரி வகைகள்
அனைத்தையும் ஓரிடமாகவே பெற்றிட
இன்றே நாடுங்கள்

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

இல. 108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7571) கிளை: பிரதான வீதி,சங்கானை



எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
எம்மினிய சகோதரர்கள் அனைவருக்கும்
நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

உங்கள் எண்ணம்போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்

முத்துமாரி நகைமாடம்
78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



புதிய கருமாரி
நாச்சிக்குடாச் சந்தி
முழங்காவில்.

(சி-7576)





எமது வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் நத்தார், புதுவருட
நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில்
பெருமகிழ்வடைகின்றோம்



உங்களுக்குத் தேவையான

★ சகல விதமான பால்மா வகைகளையும்
★ மருந்துப் பொருட்களையும்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

சிற்றி மெடிக்கல்ஸ்
487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7570)



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நத்தார் நல்வாழ்த்துக்கள்

சகல விதமான கம்பியூட்டர்களை
ஒருவருட உத்தரவாதத்துடனும்,
ரீவி,டெக், அனைத்து மின்உபகரணங்களையும்
உங்கள் எண்ணம் போல் பெற்றிட
நம்பிக்கையான ஸ்தாபனம்.

ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்
SKY ELECTRONIC SYSTEM

தொலைபேசி:
021 - 2225349

இல, 01C
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7573)

உ

சிவமயம்

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்

## தேர்த்திருவிழா சிறப்பிதழ் -20-12-2002

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருநடனம் புரியும் தில்லையம்பலவன் இன்று தேரேறி வருகின்றார்.

யாழ்.குடாநாட்டின் பழம்பெருந் தீவுகளில் ஒன்றான காரைநகர், யாழ் நகரிலிருந்து வடமேற்குத்திசையில் இருபது கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. மிகப் பழைய காலம் முதல் இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு காரைச்செடிகள் மிகவிருந்தபடியால் காரைதீவு என்று பெயர் உண்டாயிற்று. காலப்போக்கில் காரைநகர் யாழ்ப்பாணம் குடாநாட்டுடன் இணைப்புப்பாலம் மூலம் ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்பின்னர் காரைநகர் என்று சிறப்புடன் வழங்கப் பட்டு வருகின்றது.



வானளாவ எழுந்து நிற்கும் அழகிய இரட்டைக் கோபுரங்கள்

செந்தமிழையும் சைவ சமயத்தையும் போற்றிப் பேணிவரும் சீரியநகர் என்ற வகையில் ஈழத்துச் சைவவரலாற்றில் காரைநகருக்கு தனியானதோர் இடமுண்டு. ''ஈழத்துச்சிதம்பரபுராணம்'' காரைநகரை ஒருசிறந்த புண்ணிய பூமியாகப் போற்றுகிறது. இப்புராணம் காரைநகர் திண்ணபுரம் என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்கள் வினை தீர்க்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமான், ஆண்டிகேணி ஐயனாரினதும் அருட்சிறப்புகளையும் தவப்பெருமையையும் போற்றிக் கூறும் வகையில் எழுந்துள்ளது. இத் திருத்தலம் காரைநகரை ஒரு கோயில் மாநகரம் எனப் போற்றுமளவுக்கு இந்த நகருக்கு தெய்வீகப் பொலிவைத் தருகிறது. வித்துவான் எவ்.எக்ஸ்.ஸி. நடராசா எழுதிய "காரைநகர் மான்மியம்," சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள் எழுதிய ''காரைநகரில் சைவ சமய வளர்ச்சி'' என்னும் நூல்கள் பலவும் இந் நகரின் பண்பாட்டு வரலாற்றை கோடிட்டுக் காட்டுகின்றது.

தமிழகத்தின் இதயக் கனியாகத் திகழும் தில்லைச் சிதம்பரம் போல் மூர்த்தி, தலம், தீர்த்தப் பெருமையுடன் முதன்மையும் கருணையும் பல சிறப்புகளும் கொண்டு அடியார்களால் ''ஈழத்துச் சிதம்பரம்'' என்று அழைக்கப்படும் காரைநகர் திண்ணபுரப்பதியில் அமைந்துள்ளது சிவன்கோவிலாகும். இங்கு நடைபெறும் மார்கழித் திருவாதிரை திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

கடந்த 12-12-2002 அன்று ஆரம்பமாகிய திருவாதிரை விழாவில் கடந்த எட்டு நாட்களும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மணிவாசகப் பெருமானை கூத்தபிரான் சந்நிதிக்கு எழுந்தருளச் செய்து திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுபவர் மணிவாசகப் பெருமானாகப் போற்றப்பட்டு அவருக்கு கோயிற்பட்டு தலைப்பாகையாக கட்டப்பட்டு மாலை அணிவித்து கேட்போர் உள்ளங்களை உறைய வைக்கும் வண்ணமாக திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப் பட்டமையை எண்ணிப்பார்க்கையில் உள்ளம் உறைகின்றது. தொடர்ந்து வசந்த மண்டபத்தில் பூசைகள் நடைபெற்று சுந்தரேசப் பெருமான் அம்பாள் சகிதம் பிள்ளையார், சுப்பிரமணியர் ஆகியோருடன் இரண்டாம் வீதி உலா வந்து அடியவர்களுக்கு காட்சி கொடுத்தார். 20-12-2002 வெள்ளிக்கிழமை இன்று நடைபெறும் ஒன்பதாம் திருவிழாவாகிய தேர்த்திருவிழாவில் நடராஜப் பெருமான் பலவகை பூக்களினாலும் திருவாபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டு சிவகாமசுந்தரி அம்பாளோடு உள் வீதியில் பக்தர்கள் புடை சூழ இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட தவில் நாதஸ்வர மேதைகளுடன் ஈழத்து தவில் நாதஸ்வர மேதைகளும் இணைந்து இசைமழை பொழிய திருமுறைகள் ஓதுவோர் பஜனை செய்து உலா வரும் காட்சியைக் கண்டு மெய்யடியார்கள் உளமுருகி வழிபடுவார்கள். பின்னர் நடராஜப்பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் தேர்களில் ஆரோகணித்து மூன்றாம் வீதியில் பவனிவரும் காட்சி பக்திமயமான அற்புத



ஆனந்தக் காட்சியாகும்.

நாளை சனிக்கிழமை 21-12-2002 அன்று அதிகாலை 2.00 மணிக்கு மூல மூர்த்திக்கு அபிஷேகமும், அதனைத் தொடர்ந்து 3.00 மணிக்கு வசந்த மண்டபத்தில் ஆருத்திரா அபிஷேகமும், அதிகாலை 6.00 மணிக்கு நடேசர் ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். மாலை நடேசப் பெருமானுக்கும் சிவகாம சுந்தரி அம்பாளுக்கும் விசேடபூசை நடைபெற்று இரண்டாம் வீதியில் திருஉலா, திருவூடல், உள் வீதியில் தீர்த்தம் ஆகியன நடைபெறவுள்ளன.

இவ்வருடம் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள அமைதி நிலையினை அடுத்து காரைநகரில் இருந்து புலம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழ்ந்து வந்தவர்களும், வெளிநாடுகளில் வாழ்ந்து வந்தவர்களும் தங்கள் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக காரைநகரில் கடந்த பத்து நாட்களுக்கு முன்பே வந்து சேர்ந்துள்ளதை நேரில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பலகோடி ரூபாய் செலவில் பல ஆண்டுகளாக கருங்கல் சிற்ப வேலைப் பாடுகளுடனும் வர்ண வேலைப்பாடுகளுடனும் இரு இராஜ கோபுரங்கள் ஐயனாருக்கும் சிவனுக்கும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவை தமிழர்களுக்கே உரித்தான வைராக்கியத்துடனும் நெஞ்சுறுதியுடனும் வானளாவ எழுந்து நிற்கின்றன.

*

திருவெம்பாவை திருவாதிரை விழாக்காண்போர் வாழி
பூசணை செய்வோர் வாழி! பூசை காண் அடியார் வாழி!
திண்ணபுரத்து நின்றாடிடும் ஈழத்துச் சிதம்பரேசன்
திருத்தாள் வாழிய வாழியவே!

மலர் அமைப்பு
**காரையூரான்**
கிளிநொச்சி.


**தமிழரின் அடிமை நிலை தகர்த்திட, அவர் புது உரிமைபெற்றிட இன்று தேரேறி வரும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தான் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.**

**இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்**
இல. 50,52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(c-7551)

**சீமாட்டி புடைவைக் கடல்**
இல. 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[C-7554)

**THAMPI AIR TOURS (PVT) LTD**
தம்பி தொலைத் தொடர்பு நிலையம்.
இல. 90, கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 - 2222504, 2222823
தொ.ந. 021 - 2222040
அவசர அழைப்புகளுக்கு:-
077 - 7382343,072 - 401423. (C-6793)

**றூபா பன்முக வர்த்தக நிலையம்**
இல. 104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(C-7552)

**தும்பிக்கையான் களஞ்சியம்**
முதன்மைச் சாலை, கிளிநொச்சி (C-7553)

**ஸ்ரீ முருகன்**
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2222670, FAX-021- 2223214
email-del-smskr@eureka.k (C-7567)

**போ.அம்பலவாணர்**
வைர நகை விற்பனையாளர் (C-7564)
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிவகணேசன் புடைவை மாளிகை**
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
[C-7556)

**அற்புதா றேடிங் கொம்பனி**
இல. 198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(c-7557)

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
இல. 212, ஸ்ரான்லி வீதி ,யாழ்ப்பாணம்.
(c-7569)

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
இல. 69, கஸ்தூரியார் வீதி ,யாழ்ப்பாணம்.
(c-7568)



உ
சிவமயம்

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் -20-12-2002



## பஞ்சரதங்களும் பவனி வரும் காட்சி தெய்வீகக் காட்சியாக இருக்கும்

இலங்கையை சிவபூமி என திருமூல நாயனார் அழைத்தார். சிவபூமி ஆகிய இலங்கையில் ஞானபூமியாக திகழ்வது யாழ்ப்பாணக்குடாநாடு ஆகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழ் மொழியும், சிவ நெறியும் சிறப்புற்று விளங்கும் கிராமங்களில் காரைநகர்ப்பதியும் ஒன்றாகும். சைவர்களால் கோயில் என்று அழைக்கப்படும் ஆடவலன் ஆகிய நடராஜர் வீற்றிருந்து அருள் புரியும் திருத்தலம் சிதம்பரம் ஆகும். யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கும் சிதம்பரத்துக்கும் இடையில் நீண்ட காலமாக தொடர்பு இருந்து வந்தது. காரைநகர் சைவப் பெருங்குடி மக்கள் சிதம்பர நடராஜப் பெருமானை நினைவு கூர்ந்து கட்டிய ஆலயமே ஈழத்துச் சிதம்பரம் ஆகும்.

சிவனுடைய விரதங்களில் முக்கியமான விரதம் திருவாதிரை ஆகும். மார்கழி மாத திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்ட பத்து நாட்கள் திருவெம்பாவை உற்சவம் இங்கு மிக சிறப்பாக நடைபெறும். ஆருத்திரா தரிசனத்தைக் காண்பதற்காக இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பெருந்தொகையான மக்கள் இங்கு கூடுவார்கள்.

திருவாதிரைக்கு முதல் நாள் நடைபெறும் தேர்த்திருவிழாவில் பஞ்சரதங்கள் பவனிவரும். பிள்ளையார், முருகன், ஐயனார், மணிவாசகர், சிவகாமி அம்பாள் சமேத நடராஜப்பெருமான் ஆகியோரைத் தாங்கிவரும் பஞ்சரதங்களும் வீதியில் பவனிவரும் காட்சி தெய்வீகக் காட்சியாக இருக்கும்.

தெய்வவாசகமாகிய திருவாசகத்தின் பெருமையினை விளக்கும் திருவாசக விழா ஆலயச் சூழலில் உள்ள மாணிக்கவாசகர் மடத்தில் மிக விமரிசையாக ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றது.

சிவனை மறவாச் சிந்தையாளர்களாக மக்கள் அனைவரும் ஆலயத்துக்கு வருகை தந்து பக்திப் பரவச நிலையில் இறைவனை வணங்கி வருகின்றார்கள். தமிழ் மக்கள் கடந்த சில தசாப்தங்களாக அனுபவித்து வந்த துன்பங்கள், துயரங்கள் அனைத்தும் நீங்கி சாந்தியும், சமாதானமும் பெற்று வாழ ஈழத்துச்சிதம்பரத்திலே இருந்து அருளாட்சி செய்யும் பார்வதிசமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**தியாகராசா மகேஸ்வரன்**
**இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர்.**

## ஆதிரை விழா எம் அனைவரையும் நெறிமாற்றி இருளகற்றி ஞானமூட்டி நிற்பனவாகும்

மாதங்களில் மார்கழி மாதம் சிறப்புக் குரியதாகக் கொள்ளப்படுகின்றது. இறையன்பில் எம்மை ஈடுபடுத்தும் இயற்கை நிலை இம்மாதத்தில் உண்டு. சிவனுக்குரிய திருவாதிரைத் திருநாளும் இம் மார்கழியிலேயே வருகின்றது. இத்தகைய பீடு பொருந்திய மாதத்தில் வரும் விழாக்களில் ஒன்றே திருவெம்பாவை விழாவாகும். இதன்இறுதி நாளே திருவாதிரை பெருவிழாவாகக் கொள்ளப்படுவதாகும். சிதம்பரப் புண்ணிய தலத்திலே இவ்விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமையை நாங்கள் அனைவரும் அறிவோம். இத்தகைய சிறப்பு மிக்க இவ்விழா ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் காரைநகர் சிவன் தேவஸ்தானத்தில் சிறப்பாகஅனுஷ்டிக்கப்பட்டு வருவதை சைவமக்கள் அனைவரும் அறிவர்.இக் காலங்களில் காரைநகர் சிவன் ஆலயத்துக்குச் சென்று நான் வழிபட்டதை எண்ணிப் பார்க்கின்றேன். ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்து வருகை தரும் அடியார்களின் பக்திப் பெருக்கை நான் இவ்வாலயத்தில் கண்டு இறும்பூது எய்தி இருக்கின்றேன்.

திருஞானசம்பந்தப் பெருமான் தமது பதிகத்தில் ஆதிரை நாட் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார். ஆதிரைக்கு முந்திய பத்து நாட்களும் நீராட்டு நாட்களே. சிறப்பாக இல்லறத்தாற் கிடைக்கக்கூடிய இம்மை மறுமைப் பயன்களை ஆடவரும் பெண்டிரும் அனுபவிக்கக் கூடிய வகையில் இவ்விழா அமைந்துள்ளது. இவ்விழாவையே தைநீராடல் என்றும் போற்றுவர். படைத்தல் தத்துவத்தையும், இவ்விழா சுட்டுகின்றது. சிவன் சக்தியுடன் இணைந்து படைத்தல் தொழிலை ஆற்றுகின்றமையை மணிவாசகர் பாடிய திருவெம்பாவைப் பாடல்கள் உணர்த்துகின்றன. இத்தகைய அருட் பாடல்கள் எமது சைவ ஆலயங்கள் அனைத்திலும் திருவெம்பாவைக் காலங்களில் பாடப்பட்டு வருவதை நாமறிவோம்.

இத்தகைய பல சிறப்புக்கள் பொருந்திய திருவெம்பாவை, ஆதிரை விழா எம்மனைவரையும் நெறிமாற்றி இருளகற்றித் துயிலுணர்த்தி ஞானமூட்டி நிற்பனவாகும். காரைநகர் சிவன் தேவஸ்தானத்திலும் இவ் விழா சிறப்பாக பக்தி பூர்வமாக இடம்பெற எம்பிரானது திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி**
**தங்கம்மா அப்பாக்குட்டி**
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை.*

## சமாதானம் பெற பிரார்த்திப்போமாக!

யாழ்ப்பாணம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் கோயிலின் இறைவன் இன்று தேரேறி அருளாட்சி தருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத்தருகிறது. எல்லாவற்றுக்கும் காரண காரியராக இருக்கும் இறைவன் தான் நினைத்தாலே அருள் கொடுக்கக் கூடிய நிலையில் சிதம்பரத்தில் என்னேரமும் ஆடிக்கொண்டே இருக்கிறான். இக் காட்சியைக் கண்டுகளிக்க சிதம்பரம் செல்ல இயலாதவர்கள் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றும் காரைநகருக்கு சென்று தரிசனத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாதங்களின் சிறப்புடையது மார்கழி மாதம் இம்மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரம் ஆடல் விநாயகருடைய அதிசயத்தையும், காலை வேளைகளில் இறைவனுடைய தரிசனத்தையும் தரிசித்தல் ஆகும். இதனை சிறப்பித்து மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவாசகத்தில் திருப்பள்ளிஎழுச்சி தருகிறார்.

சிறப்புக்களை கொண்ட திருவெம்பாவை தரிசனத்தை, அனைவரும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தான் தேரேறி வருவதை தரிசனம் செய்து இகபர சுகம் அடைவோமாக!

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்
இரண்டாவது குருமஹாசந்நிதானம்

## ஈழத்துச் சிதம்பரனைப் போற்றி வாழ்வோம்.

எண்ணருஞ்சீர்க் காரைநகர்ப் பதியின் கண்ணே
இறைவிசுந்த ராம்பிகையின் பாகனாகத்
திண்ணபுரம் வீற்றிருக்கும் சுந்தரேசன்
தேரில் வரும் விழாக்கண்டு தேவரெல்லாம்
வண்ணமலர் மாரிபொழிந் தாடுகின்றார்.
மக்களுக்கு திருவாதி ரைத்தீர்த்தத்தை
புண்ணியனாம் எம்பெருமான் வழங்குகின்றான்.
புனிதசிவ பக்தர்களே வந்துகாண்மின்

முப்பத்து முக்கோடி தேவரெல்லாம்
முறை முறையாய்ப் பணி செய்ய ஆண்டிகேணி
அப்பனாம் ஐயனுடன் கோயில் கொண்ட
அருட்செல்வன் அலங்காரத் தேரிலேறி
இப்புவியில் தமிழ்சிறக்கச் சமாதானத்தில்
எல்லோரும் மனங்குளிர வருதல் காண்மின்
எப்பிறப்பும் செய்தபழி தீர்க்கும் காரை
ஈழத்துச் சிதம்பரனைப் போற்றி வாழ்வோம்.

அருட்கவி. சீ.விநாசித்தம்பி
ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம், அளவெட்டி,

## "நாளை எம் தேசத்தில் நல்ல தீர்வு வர ஈழத்து சிதம்பரத்தில் ஐந்து தேரோட்டம்"

ஈழத்து சிதம்பரத்தில் ஐந்து தேரோடும்
இந்நாட்டு தமிழரின் இன்னல்கள் தீரும்
நாளைய புத்தாண்டு நமதாக மலரும்
நடேசர் ஐயப்பன் நல்லருள் சேரும்
ஏழை பங்காளன் எம் தலைவன் தேரேறி வருவான்
எம் மண்ணில் தமிழருக்கு நல்லாட்சி தருவான்
தோழனாய் வந்தெம் துயரங்கள் தீர்ப்பான்
தொல்லறம் வகுத்து தமிழரைக் காப்பான்

வாருங்கள் எல்லோரும் வடம் பிடிப்போம்
வசந்தம் எம் தேசத்தில் வர இடம் பிடிப்போம்
சேருங்கள் எல்லோரும் சிவன் பக்கம் நில்லுங்கள்
செந்தமிழர் ஆட்சி இந்நிலத்தில் மலரும்
நேருங்கள் எல்லோரும் நிரந்தர தீர்வினை எண்ணி
நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றித் தருவான்
ஈழத்து மக்களின் காவலன் தேரேறி வருகிறான்
இன்றெம் தேசத்தில் நல்ல தீர்வினைத் தருகிறான்.

-கவிமாமணி மதுரகவி- காரை எம்.பி.அருளானந்தன்-

ஆண்டிகேணி ஐயனாரே! உனக்கு
அரோகரா சொன்னோரெல்லாம் அகிலமெல்லாம்!
தில்லைக்கூத்தா உன் தேர் பவனிக்கு
அகிலமெல்லாம் அவசரப்பயணம்!

ஆண்டிகேணி ஐயனாரே! உனக்கு
அரோகரா சொன்னோரெல்லாம் அகிலமெல்லாம்!
தில்லைக்கூத்தா உன் தேர் பவனி காண
அகிலமெல்லாம் படையெடுக்குதய்யா.

மனோஜ் எக்ஸ்பிறஸ்
13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்


**நடேசர் ஐயப்பன் நல்லருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.**

**பிள்ளையார் பல்பொருள் வாணிபம்**
யோகபுரம், மல்லாவி (C-7559)

**வைத்திலிங்கம் துவராசா**
இல.1179, திருநகர், கிளிநொச்சி. (C-7555)

**மருதடிப்பிள்ளையார் களஞ்சியம்**
யோகபுரம், மல்லாவி. (c-7560)

**எஸ்-வீ-முருகேசு**
இல.154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-7566)

**முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை**
தொடரித் தெரு, கிளிநொச்சி. (C-7561)

**வெங்கடேஸ்வரா**
இல.79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-7563)

**பிள்ளையார் பல்பொருள் உதிரிகள் வாணிபம்**
முருகன் கோயில் முன்பாக
முதன்மைச்சாலை, கிளிநொச்சி. (C-7558)

**கலைவாணி நகை மாளிகை**
111B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-7565)

**த-குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
இல.42,44, பெரிய கடை யாழ்ப்பாணம். (C-7562)

**த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்**
இல.21, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# எம் பசுப்பால் குடித்து வளராதவர்கள் யாரும் உண்டா மனிதர்களே? உங்களுக்காகவே எங்களையும் வாழ விடுங்கள்



பசு பால் தரும், பசு சாதுவான மிருகம் என்றும் பசுப்பால் சகல சத்துக்களும் உள்ள பூரண உணவு என்றும் நாம் சிறுவயதில் ஆரம்பக் கல்வியில் கற்றுள்ளோம்

அப்படிப்பட்ட சாதுவானதும், எமக்கு பல்வேறு பட்ட பொருட்களைத் தந்து காக்கும் அப்பசுவை நாம் கொல்வதும், அதன் மாமிசத்தை உண்பதும் மகா பாவம் ஆகவே இன்றைய ஈழத்துச் சிதம்பர தேர்த்திருவிழா நாளில் இருந்து சைவசமய மக்களாகிய நாம் பசுவைக் கொல்வதையும், அதை உண்பதையும், இறைச்சிக் கடைக்காரருக்கு விற்பதனையும் தவிர்த்து அப்பாவத்தில் இருந்து விலகி எம் பெருமானிடம் சரணடைந்து நற்கதி பெறுவோமாக!

விளம்பர அனுசரணை :-

**வேணி களஞ்சியம்**
165, கே.கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி :- 021-2222046
021-2222661
(சி-7577)




**ஆ.மு.சு.மணி**
அடைவு பிடிப்பகம்
முதன்மைச்சாலை (சி-7578) கிளிநொச்சி

---

முன்னர் வெள்ளிநாதத்தில் வெளியாகிய சித்திரத்தொடர்கதை இப்பொழுது புத்தகமாக வெளிவந்து விட்டது.

**ஓயாத அலைகள் -01**
(முல்லைச்சமர்)

அடுத்தவாரம் முதல் வெளிவருகின்றது

**ஓயாத அலைகள் - 02**
(கிளிநொச்சிச்சமர்)
சித்திரத்தொடர்கதை (ராகவன்)




---

# LANKA LABORATORIES LIMITED

33, BANKSHALL STREET, COLOMBO-11. Tel:422011, 3341 00 Fax: (01) 440475

ONE STOP FOR ALL MEDICAL EQUIPMENT SUPPLIES

- Bandages, Gauze, Cottons
- Repairs of BP Meters undertaken
- Mackintosh
- Surgical Gloves
- Sterilizers
- Blood Pressure Meters and Spares
- Hospital Hardware
- Adhesive Plasters
- Disposable Masks, Caps & Gowns
- Thermometers
- Stethoscopes and Spares
- Microscopes
- Scissors, Forceps, Blades, Handles
- Syringes & Hypodermic Needles
- Catguts, Sutures & Needles
- Test Tubes and other Glassware items Hot/ Cold Water Bags, etc.,etc.
- Surgical Disposable: Catheters, Tubes, Scalp Vein Sets. Airways, Umbilical Cord Clamps

மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் வடபகுதி விநியோகஸ்தர்கள்

நீலன் மருந்தகம்
யாழ் சாலை கிளிநொச்சி

# NEELAN PHARMACEUTICALS (PVT) LTD.

28, RETREAT ROAD COLOMBO-04. MAIN STREET KILINOCHCHI. MAIN STREET JAFFNA

(2677)

---

# இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் "லக்பொஹொர" வடபகுதி களஞ்சியத்தினர் விடுக்கும் நற்செய்தி

வடபகுதி விவசாயிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள், விவசாய சேவை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொகை, சில்லறை வியாபாரிகள் அனைவரும் விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனம் விவசாய உபகரணங்கள் என்பவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள

இலங்கை உரம்
LAK POHORA
ලක් පොහොර
விநியோகத்தர்: வே. கணேசமூர்த்தி
353, கண்டி வீதி, கிளிநொச்சி.

**வேலும் மயிலும் களஞ்சியம்**

(சி-7531) 353, முதன்மைச்சாலை. (ஈழநாதம் பணிமனை முன்பாக) கிளிநொச்சி.



# நூல்நோக்கு

| | |
|---|---|
| பெயர் | ஒரு மழைக்கால இரவு (சிறுகதைத்தொகுதி) |
| எழுதியவர் | தாமரைச்செல்வி |
| வெளியீடு | சுப்ரம் பிரசுராலயமும் தேசிய கலை இலக்கியப் பேரவையும் |




**பொருள்** புரியா மனித வாழ்வின் சலிப்பூட்டும் பயணப்பாதையின் பக்கங்களில் நம்பிக்கையையும் மகிழ்வையும் நிறைத்து; வாழ்தலெனும் அர்த்தமறியா பேருண்மையின் முகத்தினில் புதிய, புதிய முடிவுகளை எழுதிப் பார்ப்பவை கலைகள்.

வாழும் காலத்தை தம் வெளிப்பாட்டுத்திகளின் மையமாக்கிக் கொள்ளும் கலை வடிவங்கள் கற்பனைப் புனைவு எனும் எல்லை தாண்டி கலாபூர்வமான; வாழ்வின் சான்றுகளாகவும் அமைந்து வருகின்றன.

" ஒரு மழைக்கால இரவு" எனும் தாமரைச்செல்வி அவர்களின் சிறுகதைத் தொகுப்பு நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட இந்தக் காலத்தை கதைகளாக்கியுள்ளது. 83 லிருந்து எடுதப்பட்டவற்றிலிருந்தான பதினைந்து சிறுகதைகளின் தேர்ந்த தொகுப்பு இது.

எமது தேசிய விடுதலை வரலாற்றினது முக்கிய கால நகர்வின் ஆரம்பத்திலிருந்து இன்று வரையான எமது வாழ் நிலை அனுபவங்கள் சிலவற்றின் உயிர்ப்பான பதிவுகளாக இக்கதைகள் அமைந்துள்ளன.

ஒவ்வொரு கதையும் எமது அறிதலின் ஆளுகைக்குள்ளேயே; எமது முகம் தெரியாத உறவொன்று மோதி மீண்ட பிரச்சினை யின் கணங்கள் பற்றிய, அவர்களோடு சேர்ந்தே நடந்திருந்தாலும் சரியாக உணர்ந்திருக்காத அவர்களின் துயரின் வலி பற்றிய வார்த்தை உண்மைகளை எம் மீது அள்ளி வீசுகின்றன.

கைதொட்ட கணத்திலிருந்து கடைசிக் கதையின் இறுதி வரையும் தொகுப்பினை நோக்கி எம்மை ஈர்க்கும் எழுத்தாளரின் வாசகரை அழைத்துச் செல்லும் வாசிப்புத் தூண்டல் கொண்ட மொழியாள்கை பாராட்டிற்குரியது.

வெறும் செய்திகளாகவும், சில வேளைகளில் ஆழ்மனதைத் தொடத் தவறியிருக்கக்கூடிய நேரடிச் சம்பவங்களாகவும் அமைந்திருக்கூடிய நிகழ்வுகள் வாசிப்பின் பின் சில வினாடிகள் எம்மை மௌனிக்க வைக்கின்றன. ஒரு சிறுகதை பெற வேண்டிய இயல்பான வெற்றி இதுவே.

இங்கேயும் சில இழப்புகள் எனும் சிறுகதை மீள எழுதலுக்கான கடைசி சொத்தையும் இழந்த நிலையிலும் கலங்காத ஒருவனின் விழிகள் அவனுடன் தொடர்பற்ற மீளமுடியா உயிரொன்றின் உன்னதத்திற்காக கண்ணீர் விடுவதை சொல்கையில் மனித நேயமும் எழுத்தாளரின் பேனாவும் கை கோர்த்துக் கொள்கின்றன.

'பாலம்' எனும் வேறோர் கதையின் சில வரிகள் இவை. "வெறும் சீமெந்தாலும் மண்ணாலும் இது கட்டப்பட்டதாக அவன் உணர்வதில்லை. மனதுக்கு மிகவும் பிரியமான ஒன்றை திரும்பத்திரும்ப நினைவு படுத்திப் பார்க்கும் போது ஏற்படும் பரவசம் இந்தப் பாலத்தை நினைக்கும் போதெல்லாம் அவனுக்கு ஏற்படும்."

கண்ணிற்குள் காட்சிப் பிம்பத்தை ஏற்படுத்துபவை ஓவியங்கள் மற்றும் ஒளிப்படங்கள். ஆனால் இந்தக் கதையின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை பாலத்தையும் அதனோடு சேர்ந்தமைந்த சூழலையும் வார்த்தைகளினால் கண்களினுள் காட்சிகளாக்குவது சிறப்பான ஓர் அம்சம்.

" இருபதடி நீள சீமெந்து பாலம். கீழே பழுப்பு பச்சை நிறத்தில் பாய்ந்தோடும் வெள்ளம். இடது பக்கப் பிரதான தெருவை தொட்டுநீளும் ஒற்றையடிப்பாதை. அதன் முடிவில் கிராமம்.

கிராமத்தைச் சூழ பாலை மரங்கள். மரங்களில் மஞ்சள் நிற பழங்கள்" இப்படியாக ஓவிய மொன்றை வார்த்தைகள் தூரிகை யாகி வரைந்து செல்கிறது.

வேறெந்தக் கதையினையும் விட சிறப்பான காட்சிப் பதிவினை இக்கதை கொண்டுள்ளது.

மணவயது கடந்த பெண்ணொருத்தியின் திருமணம் தொடர்பாக அவள் மனதுள் எழுகின்ற எண்ணங்கள் பற்றி மிக இயல்பாக பேசுகிறது"வாழ்க்கை" எனும் கதை.

"அந்த முகத்தில் பதிந்திருந்த ஒவ்வொரு சுருக்கங்களும் சமூகம் பற்றிய அவனது கவலைகளின் வெளிப்பாடாகவே தெரிந்தது" எனும் இந்த வரிகளுள் ஒரு கவிதையின் மென்மையும் பக்குவப்பார்வை ஒன்றின் வெளிச்சமும் இணைந்திருப்பதாகவே தோன்றுகிறது.

உயிர் வாழ்தலிற்கான சகல வழிகளையும் இறுக மூடி எம் மீது துயரையும் மரணத்தையும், வறுமையையும் விதைத்துள்ளது இனவாதம். பசி. 'ஒரு பிஞ்சின்' வயிற்றினுள் மூண்டெழும் தீயாக.. அதை வெற்றி கொள்ள முனையும் அவனின் முயற்சிகள். இறுதியாக தாங்க முடியாத பசியின் முன் தன் சிறுவயது ஆளுமைக் கனவுகள் சரிய அந்தப் பிஞ்சு ஒரு வாய் உணவிற்காகக் குனியும் போது திகைப்புற்று சோர்வது வாசிப்போர் இதயங்களும் தான்.

ஒரு மழைக்கால இரவு. இந்தத் தொகுப்பின் தலைப்பின் பெயர் கொண்ட சிறுகதை இது. ஒரு இனத்தின் குறிப்பிட்ட தொகுதி மக்களின் வாழ்வு கண்டு மீண்ட நினைவகலா வரலாற்று அனுபவமொன்றுள் புதையுண்டு போயுள்ள தனிமனிதன் ஒருவனுடைய சோகம் பற்றிச் சொல்கிறது.

அவர்களைக் கேளாமலே கடந்து போய்விட்ட இளமைக் காலத்தின் தொலைவையும் ஒரு முறை கூட சந்தித்த அநுபவ மில்லாத மரணத்தின் அருகாமையையும் நினைத்து ஏக்கம் சுமக்கும் முதியவர்களையும் இடப்பெயர்வு;அதன் தொடரான தாக்கங்கள்; பிரச்சினைகளின் ஆழத்துள் தள்ளியுள்ளன.

தம் வாழ்வின் இனிய நினைவுகளுடன் இணைந்த வாழ்விடங்கள், மனிதர்கள் இவைகளைப் பிரிந்த துயரம் அவர்களின் இறுதிக்கால வாழ்வ மைதியைக் குலைத்து அவர்களை ஏங்கவைக்கிறது.

இது பற்றி உணர்வு தொடும் விதத்தில் சொல்கிறது இடைவெளி எனும் கதை. உறவிருந்தும் மனதளவில் தனியணாக்கப்பட்ட முதியமன மொன்றின் துயரினை இயல்பாக மனதில் பதிய வைக்கிறது இக்கதை.

பொக்கை வாயின் ஆறுதலான அசைபோடல் போல வாழ்வையும் அதன் அநுபவங்களின் துணைகொண்டு இன்னுமொரு முறை இனிமையாக அவர்களின் இரைமீட்க வழியமைக்க வேண்டியோர் இளையவர்களே.

இளையவர்கள் வாழ்வு தம் ஆளுகைக்கு மட்டுமேயான ஒன்று என எண்ணாது முதியவர்களையும் அதன் பங்காளர்களாக்கினால் வாழ்தல் என்பது இன்னும் இனிய ஒரு அனுபவமாக விரியும்.

அட்டை அமைப்பு, அச்சமைப்பு நேர்த்தியும் அழகும் நிறைந்துள்ளது. எமது பொருண்மிய எல்லைகளின் தொலைவு தாண்டி வந்துள்ளதால் இந்த அழகு சாத்தியமானதோ தெரியவில்லை. அட்டைப்படத்திற்கான காட்சியை மீறிய நிறங்களின் ஆழ்ந்த தன்மை வேண்டாத ஒன்றாகவே தெரிகிறது.

நிகழ்வுகளைப் பின் தள்ளி உணர்வுகள் பற்றி அதிகமாக ஆழமாக பேசுபவை சிறுகதைகள் உணர்வுகள் பற்றி மிக அழகாகவும், ஆழமாகவும் பேசும் திறன் பெற்றுள்ள இவர் சில கதைகளில் நிகழ்வுகளை முன் நிலைப்படுத்தி சம்பவங்களினூடாகவே கதையினை நகர்த்தி செல்வதாகத் தோன்றுகிறது. உணர்வுகளின் கோர்வையாக அமையும் சிறு கதைகள் வாசகரின் மனதை கதையின் கரு நோக்கி இலகுவாக ஈர்க்கக்கூடியவை.

மொத்தத்தில் வெறும் கற்பனைகளின் தூற்றலாக இல்லாது எமது கண்முன்னான வாழ்வனுபவங்களின் பிழிவாக எமது இருப்பின் துயரை மொழியின் பதிவாக கூறுகிறது இத்தொகுப்பு.

படிப்போர் மனதில் எழுகின்ற; இந்த மண் மீதான எம் வாழ்வின் துயரம் பற்றிய பதைபதைப்பும், அதை மீறிய; இத்தனை அவலங்களினூடும் சலிப்பின்றி தொடரும் இருத்தலிற்கான போர் பற்றிய வியப்புணர்வும்; எழுத்தாளரின் காலப் பணிக்கு கிடைக்கின்ற வெற்றியாகும்.

பிரதீபகுமரன்



# காற்றறைக் கிழித்த சாபங்களின் ஓலம்

அமைதி நாளின் பொழுதை
இரவுகளால் நிரவிடத் துடித்த
சூனிய விழிகளின் சாபத்தை,
'ரொறன்டோ' நகரியின்
பியர்கிளாசில்- வாய்கள்
பொருத்திய படிக்கு- நீங்கள்
வன்மம் மிளிரும் விழிகள் கொண்டு
சபதம் செய்தீர்களாம்
சமாதானப் புறாவின்
இறக்கைகள் உதிர்க...
ஈழத் தெருக்களில்
இன்னமும் புழுதி
காற்றை மறிக்கும்- அதற்கு
எனது நெஞ்சக் கோறை
எத்தனை தரமாய் இற்றுப் போனது- நீரோ
ரொறன்டோ நகரில்

சமாதானப் புறாவை
மூளியாக்க சபதம் செய்தீர்
வன்னிக் காடுகள் தோறும்
உறைந்து போயிருக்கும்- எனது
போராளிகளின்.....
குருதிச் சுவடுகளிலிருந்து
மெல்ல வருகிற காற்றுக்கு,
இன்னமும் இனியும்
சொற்களைத் தேடிக் களைத்தோம்.
அந்தக் காடுகளின் கீழாய்
வெற்றி வாகை சூடி
நீழ் துயில்கின்ற
என்னரும் தோழனின்
புதைகுழி மேட்டிலிருந்து
வெளிகளை நிரவிடும் மௌனம்
உலகை உலுக்கிய நாட்களில்-நீரோ
எங்களின் வாழ்வைச் சபித்தீர்.
அவர்களின் நினைவில் கரைந்து
கீதமிசைத்த ஒரு நொடிதனில்- நீரோ
ரொறன்டோ நகரில்
துரோகக்கரங்களை ஒன்றாய்ச் சேர்த்து
சபதம் செய்தீர்-எங்களினத்தின்
சுதந்திரக்கனவை
பீரங்கிகளின் வாய்களினின்றும்
மீட்டு வந்தோரின் நாட்களில்
ரொறன்டோ நகரில்
சபதம் செய்தீர்
"அற்றைத் திங்கள் அவ்வெண்நிலவிலும்"
"இற்றைத் திங்கள் இவ்வெண்நிலவிலும்"
உங்கள் துரோகத்தனத்தை
வார்த்தைகள் மிஞ்ச
குருதிக் கரங்களை சேர்த்தீராமே! எனினும்
எங்களின் போரும்
எங்களின் அமைதியும்
எத்தனையுங்கள் கரங்கள் பிணையினும்
வலியது ஐயா வலியது.

முல்லைக்கமல்




# இளையநாதம்

## குட்டிக்கதை

பீர்பாலை கண்டாலே அக்பரின் அரசசபை அமைச்சருக்குப் பிடிப்பதே இல்லை. நேரம் கிடைக்கும் போதெல்லாம் பீர்பாலை மட்டம் தட்ட நினைப்பார்.

## கழுதைக்கு புகையிலை பிடிக்காது

பீர்பாலுக்கு அடிக்கடி புகையிலை போடும் பழக்கம் உண்டு மந்திரி அதை அறவே வெறுத்தார். ஒரு நாள் அக்பர் தமது அமைச்சருடனும் பீர்பாலுடனும் உலாவப்போனார் அப்போது வழியில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு கழுதை ஒரு புகையிலைச் செடியை பார்த்தவுடன் முகத்தை திருப்பிக் கொண்டு சென்றது. அமைச்சர் அதை பீர்பாலுக்கு காட்டி பீர்பாலை கேலி செய்தார். பீர்பாலோ அடக்கமான குரலில் உண்மைதான் அமைச்சரே கழுதைக்கு எப்போதும் புகையிலையைக் கண்டால் பிடிப்பதில்லை என்றார். தன்னை கழுதையாக்கிய பீர்பாலின் திறனைக் கண்டு மகிழ்ந்தார்.

வி. வைதேகி, தரம் 6B
மு/முள்.அ.த.க.பாடசாலை



## இவர்

பெயர் : மார்க்கோணி
பிறந்தது : 25-04-1876
இடம் : பலோக்னா இத்தாலி
இறப்பு : 20-07-1937 ரோம்
கண்டுபிடிப்பு: ரேடியோ(1896)
நோபல் பரிசு : பௌதீகம் (1909)



## வாரம் ஒரு குறள் அறிவோம்



தான் சுகமாக வாழ நினைப்பதும் தனது குடும்பம், உறவினர் யாவரும் குறைவில்லாது வாழவேண்டுமென்று எண்ணுவதும் அரசு செய்யும் ஒரு மன்னனுக்கு அழகல்ல.தானே எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் தன்னை ஒருவரும் தட்டிக்கேட்க முடியாது என்றும் தனக்குள் பெருமை கொள்பவன் மன்னனாக இருக்க முடியாது. அவனை மக்களும் மதிக்க மாட்டார்கள். மன்னன் என்பவன் எப்படி இருக்க் வேண்டும் எனில், மக்களுக்கு என்ன என்ன தேவையோ அவற்றையெல்லாம் ஒழுங்கான முறையில் நிறைவு செய்து அவர்கள் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு உதவி புரிய வேண்டும். அப்படிச் செய்தால் மக்கள் அவனை மன்னனாக மட்டுமல்ல; தங்களைக் காப்பாற்றும் இறைவனாகவே மதிப்பளிப்பார்கள். இக்கருத்தினை வள்ளுவனார் எப்படித் தனது கடுகுக் குறளில் கரைத்துள்ளார் என்பதைப் பாருங்கள்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்"

ஆட்சி செய்பவர்கள் யாராயினும் இதனைக் கைக்கொள்வார்களாயின் நாடும் மக்களும் நலமுடன் திகழும் என்பதில் என்னசந்தேகம்?

## பாடசாலை



பாலர் கூடி ஆடிடும்
பாடசாலை பாருமே
காலை மாலை பாருமே
கடவுள் பாதம் கூடியே

சின்னவயதில் நாங்களும்
சிரித்துச் சிரித்து சென்றுமே
கள்ளம் இல்லாக் கல்வியை
கற்று நாமும் வந்துமே.



அம்மா அப்பா பார்த்திட
அழகாய் நாமும் பாடிட
சும்மா தந்த மிட்டாயை
சுவைத்து நாமும் உண்டிட

சுத்தமாக வந்து நாம்
சொன்ன பாடம் கற்றுமே



இன்பமாக நாங்களும்
துள்ளித் துள்ளி ஆடிட.
கூடிப்பாடி நாங்களும்
சேர்ந்து விளையாடிட
பாடசாலை விட்டதும்
வீடு நோக்கி ஓடுவோம்.

சுப்பிரமணியம். சர்மிலா
கிளிநொச்சி.

## நகைச்சுவை



வழமையாக ரவி ஐந்து மணிக்கு எழுப்புவான். அவனை அவனது வளர்ப்புச் சேவல் தான் எழுப்பும் சரியாக ஐந்து மணிக்கே சேவல் கூவும். இப்படியாக இவன் எழுந்து தனது கடமைகளை முடித்து வேலைக்குச் செல்வான்.

ஒரு நாள் கடிகாரம் எதுவும் இல்லாத ரவி சேவலையே நம்பி தூங்கி விட்டான். ஆனால் அன்று சேவல் கூவவில்லை நன்றாக விடிந்துவிட்டது. எழுந்து பார்த்தான் தான் கடமைக்குச் செல்லும் நேரம் தாண்டி விட்டது.

வேறு வழி எதுவுமில்லாத அன்றைய நாளை லீவாக எடுத்து சேவலைப் பிடித்துக்கொண்டு மணிக்கூட்டுக் கடைக்குச் சென்றான். மணிக்கூட்டுக் கடையில் நிறைய மக்கள் கூட்டம். அவர்களை விலத்திக் கொண்டு வேகமாக உள் நுழைந்தவனைப் பார்த்த மக்கள்.

இவன் சேவலுடன் ஏன் போகிறான் என்று வியப்புடன் பார்த்தபடி நின்றனர். மணிக்கூடு திருத்துபவரிடம் " அண்ண இந்த சேவல் சரியாக ஐந்து மணிக்கு கூவும் ஆனால் இன்று இவ்வளவு நேரமாகியும் கூவவில்லை இதை ஐந்து மணிக்கு கூவும்படியாக திருத்தித் தாருங்கள் என்று கேட்டான் ரவி.

அங்கு நின்ற அனைவரும் அடக்க முடியாத சிரிப்புடன் அவனது அறியாத் தனத்தை அலட்சியக் கண்ணுடன் நோக்கினர்.

கௌசி

## தெரிந்து கொள்ளுங்கள்..

01) உருக்குத் தொழிற் சாலை எங்குள்ளது?
ஒருவெல
02) ரயர் தொழிற்சாலை எங்குள்ளது?
களனி
03) தெங்கு ஆராய்ச்சி நிலையம் இருக்கும் இடம் எது?
லுணுவில
04) எண்ணெய் சுத்திகரிக்கும் இடம் எங்குள்ளது?
சப்புமல்கந்த
05) ஆயுள் வேத ஆராய்ச்சி நிலையம் இருக்கும் இடம் எது?
நாவின்ன

அ.சீலன்
கிளிநொச்சி



இவ்வுருவில் இருக்கும் துண்டுகளை இணைத்தால் ஒரு விலங்கின் தோற்றம் தெரியும் அது என்ன விலங்கு எனக் கண்டு பிடியுங்கள்.

இளையவர்களே
உங்களுக்காக
இந்தப்பக்கம்

எண்ணங்களில் தோன்றும்
வண்ணங்களை

**வரையுங்கள்**
**எழுதுங்கள்**

அனுப்புங்கள்

**வெள்ளிநாதம்,**
**ஈழநாதம்,**

யாழ் சாலை ,கிளிநொச்சி.

## ரதனும் சுதனும்



ரதன் :- சோப்புக்கள் வெவ்வேறு வண்ணத்தில் இருந்தாலும் நுரைமட்டும் வெண்மையாக இருப்பதேன்?

சுதன்: ஒரு பொருளின் நிறம் அது எந்த நிறத்தை எதிரொலிக்கச் செய்கிறதோ அதைப் பொறுத்தது எடுத்துக் காட்டாக, பச்சை இலை தன் மீது விழும் எல்லா நிறங்களையும் உட்கவர்ந்து கொண்டு பச்சையை மட்டுமே எதிரொலிக்கிறது.

நுரை எனப்படுவது எண்ணிலடங்கா மிகச் சிறிய நீர்க்குமிழிகளாகும் இந்தக் குமிழிக்குள் காற்று அடைபட்டுள்ளது. மேலும் இதன் வடிவம் உருண்டையானது. ஆகவே இதன் மீது விழும் ஒளி எல்லாத் திசைகளிலும்எதிரொலிக்கப்படுகிறது. இவ்வாறு எதிரொலிக்கப்பட்டதால் அவை அனைத்தும் கலந்து நமக்கு வெண்மையாக காட்சியளிக்கின்றன.

இதை எளிதில் புரிந்து கொள்ள ஒரு செய்முறை: ஊதா நிறமுள்ள ஒரு கண்ணாடி வளையல் துண்டை எடுத்துக் கொள் இதை மேலும் இரண்டு மூன்று துண்டுகளாக உடை, இத்துண்டுகளை அம்மியின் மீது வைத்து தூளாக்கு இப்போது நீ காண்பது என்ன? ஊதாப் பொடியா? இல்லை! இது வெள்ளை நிறப் போடியாகும்.

## மனித உடல் பற்றிய சிலகுறிப்புகள்

1. மனித உடலில் மொத்த எலும்புகளின் எண்ணிக்கை?
206
02) உடலில் உள்ள மிகப்பெரிய சுரப்பி
ஈரல்
03) உடலில் உள்ள நீளம் கூடிய கலம்
நரம்புக்கலம்
04) மனித மண்டையோட்டின் எலும்புகளின் எண்ணிக்கை
33
05) உடலின் மிக வலிமை வாய்ந்த பாகம்
பல் மிளிரி (பல்லின் இனாமல்)
06) இரத்தச் சிவப்பணுவின் ஆயுட்காலம்
7நாட்கள்

அ.சிட்டு
கிளி/திருவையாறு ம.வி

# சிறுவர்களும் அவர்களது விருப்புகளும்

பகுதி -I

சிறுவர் என்பவர்கள் அளவில் சிறிய மனிதர்கள் என்ற எண்ணம் எம்மில் பலருக்கு வந்துவிடுவதுண்டு. இதனால் எமது பலம், பலவீனம் என்பவற்றை அவர்களுடன் சமமாக பகிர முற்படுவதும் அவர்கள் அதனை விளங்கிக் கொள்ளாத விடத்து அவர்களை கண்டிப்பதும் அல்லது வற்புறுத்துவதும் இடம்பெற ஏதுவாகின்றது. ஆனால் சிறுவர்கள் அளவில் சிறியவர்கள். உடல், உள முதிர்ச்சி பெற வேண்டியவர்கள். அவர்களது உணர்வுகள் மதிக்கப்பட வேண்டியவை என்பன போன்ற பல விடயங்களை நாம் இலகுவில் விளங்கிக் கொள்வதில்லை. இவ்வாறான தன்மைதான் நேரடியான செயற்பாட்டிலும் பார்க்க வன்மையும் அபாயமும் பொருந்தியதாகும். இக்கட்டுரையின் மூலம் சிறார்கள் எத்தகையவர்கள் அவர்களின் உணர்வு வெளிப்பாட்டுக்கான களங்கள் யாவை போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இன்று உலகளாவிய ரீதியில் சிறார்கள் பற்றிய சிந்தனை விரிவுபடுத்தப்பட்டு அதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. சிறுவர் அரங்கு சிறுவர் இலக்கியம் என்பவை சிறுவர் தொடர்பான முக்கியத்துவம் எத்தகையது என்பதைப் புலப்படுத்தும். சிறுவர்கள். இயல்பாகவே ஈடுபடக் கூடிய பல்வேறுபட்ட செயற்பாடுகளை, அவர்கள் மிக ஆர்வமாய் இருக்கின்ற செயற்பாடுகள் இங்கு கருத்தில் எடுக்கப்பட்டன.

சிறார்கள் தொடர்பான உணர்வு வெளிபாட்டுக் களங்களாக அவர்கள் இயல்பாகவே ஆர்வமாயிருக்கின்ற விளையாட்டுக்கள், ஆடல், பாடல், கவிதை, கதை சொல்லல், சித்திரம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சிறுவர்கள் புதிய விடயங்களை அறிந்து கொள்வதிலும், தாம் பார்த்த பழகிய அறிந்த பல்வேறு விடயங்களையும் போலச் செய்து பார்த்தலிலும் துடிப்புடன் முன் நிற்கும் தன்மை கொண்டவர்களாக இருப்பர். பாவனை செய்தல் என்பது அல்லது பாவனை செய்து விளையாடுவது என்பது சிறுவர்களின் சிறு பராய கற்றல் முறைமை எனக் குறிப்பிடுவர். எமது வீடுகளில் இவ்வாறு குழந்தைகள் சமைத்து விளையாடுதல், கோயில் திருவிழாசெய்து விளையாடுதல் போன்ற பல பாவனை விளையாட்டை விளையாடுவதைத் தாம் நினைவில் இருத்திப் பார்க்கலாம். இவ்வாறே சிறுவர்கள் இயல்பாக விரும்பும் இன்னுமொரு விடயம் ஆடிப்பாடி மகிழ்தல். சிறார்கள் இசையின் சந்தத்திற்கேற்ப ஆடி, குதிக்க விரும்புவர். இசையின் சந்தம் அவர்களின் உடலுள் சென்று உடலியக்கத்தைத் தூண்டி, மனவெழுச்சிகளை ஏற்படுத்தி ஒத்திசைவான ஆட்டத்தை ஏற்படுத்துகின்றது. அத்துடன் இவ்வாட்டமானது, உற்சாகத்தையும், மன அழுத்தங்கள் அற்ற ஒரு விடுப்பு நிலையையும் இதத்தையும் தருவதாக உள்ளது. அத்துடன் இவ்வாட்டத்திற்கு ஏற்பதான சொற்கட்டுக்களைக் கொண்ட எளிமையான பாடலைப் பாடவும், இதனை இசையுடன் இணைந்து பாடவும் ஆடவும் செய்வதில் மிகக்கூடிய மகிழ்ச்சியினை அடைகின்றனர். இம் மகிழ்வும், நாட்டமும் பிள்ளைகளைக் கவிதைகள் புனையக்கூடியவர்கள் ஆகவும் உணர்வைச் சொற்களில் வெளிப்படுத்தக் கூடிய ஆளுமை உள்ளவர்களாகவும் உருவாக்குகின்றது.

சிறுவர்களின் இன்னொரு விருப்பமான களம் கதை கேட்டலும், கதை கூறுதலும் ஆகும். இது விளையாட்டுக்கு அடுத்தபடியாக பிள்ளைகளால் விரும்பப்படும் ஒரு விடயமாகும். எல்லாப் பிள்ளைகளுமே கதை கேட்க பிரியப்படுவர். பொறுமையாகக் கதைகளின் பாத்திரங்களாகப் பாவனை செய்து அதற்கேற்ப குரலை மாற்றிக் கதை கூறுவதினாலேதான் பாட்டி கூறும் கதைகள் சிறுவர்களால் மிகவும் விரும்பப்படுகின்றன. இவ்விருப்புடன் கதைகேட்கும் அவ்வேளைகளில் தாமும் அவ்வாறேமாறி அதைப் போலச் செய்வதிலும் இன்பமடைவர். மேலும் இக்கதை கூறல் என்பது பிள்ளைகளின் சொல்வளத்திற்கு அப்பால் செல்லாத பேச்சு மொழியில் அமைதலே பொருத் தமானதாகும். மேற்கூறப்பட்ட விடயங்கள் மட்டுமல்லாது சிறார்களின் கற்பனை வளம் ஒரு முக்கிய அம்சமாகும். சிறுவர்கள் இயல்பாகவே கற்பனை வளம் பொருந்தியவர்கள். அதனால் தாம் பார்த்த, அறிந்த விடயங்களை போல் செய்யும் போது தமது கற்பனை வளத்தால் மகிழ்ச்சி அடைவர். உதாரணமாக ஒரு தும்புத் தடி, மோட்டார் வாகனமாகவோ, மோட்டார் சைக்கிளாகவோ அவர்க ளால் நோக்கப்பட்டு பயன்படுத்தப்படும். ஒரு சிறிய பெட்டி மாட்டு வண்டியாகவோ, தேராகவே நோக்கப்படும்.

> சிறார்கள் தொடர்பானதும் அவர்களுக்கு இன்பம் தரும், அனுபவத்தைத் தரும் களங்களாக இருக்கின்ற விளையாட்டு. ஆடல், பாடல், கதை கூறல், கற்பனை விநோதம் ஆகிய மேற் கூறப்பட்ட அனைத்து அம்சங்களும் பொருந் திய ஒரு களமே சிறுவர் அரங்கு! - - - -

இவ்வாறாக சிறார்கள் தொடர்பானதும் அவர்களுக்கு இன்பம் தரும், அனுபவத்தைத் தரும் களங்களாக இருக்கின்ற விளையாட்டு. ஆடல், பாடல், கதை கூறல், கற்பனை விநோதம் ஆகிய மேற் கூறப்பட்ட அனைத்து அம்சங்களும் பொருந்திய ஒரு களமே 'சிறுவர் அரங்கு' எனக் கூறினால் அது மிகையில்லை. சிறுவர்களின் இயல்பான குணாம்சங்கள் வெளிப்படக் கூடிய சந்தர்ப்பத்தை இச்சிறுவர் நாடகங்களும், சிறுவர் அரங்கமும் வழங்குகின்றன. இதனால் சிறுவர்கள் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் வாய்ப்பு ஏற்படும். இவ்வாய்ப்பு அவர்களது ஆளுமையினை விருத்தி செய்கின்றது. இதனால் அவர்கள் வெளிப் படையானவர்களாக படைப்பாற்றல் கொண்டவர்களாக வளர்கின்றனர்.

**சிறுவர் அரங்கு:**

**வரைவிலக்கணமும், பண்புகளும**

சிறுவர் அரங்கு என்பது சிறுவர்கள் எல்லோருக்குமே அவசியமான ஒன்றாகும். அதே வேளை பெரியவர்களுக்கும் இது பயன்படக்கூடியது. பெரியவர்களுக்கு அவர்களது தன்முனைப்பு எண்ணத்தை (ஈகோ) விடுவிக்க பயன்படுத்தக் கூடியது. சிறுவர் அரங்கு என்பதை ஆங்கிலத்தில் Children Play எனக்கூறுவது போல் நாம் இதனை சிறுவருக்கான விளையாட்டு எனப் பொருள் கொள்ள முடியும். சிறுவர் அரங்கு ஒன்றிலே சிறுவர்கள் ஆடியும் பாடியும் விளையாடியும் செயற்பட்டு குதூகலம் மிக்கவர்களாக உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெற்றவர்களாக வெளிவருவர். இத்தகைய ஓர் அம்சம் எல்லாச் சிறுவர்களுக்கும் அவர்களது உளவயதுடன் ஒன்றித்ததாக காணப்படும்.

சிறுவர் அரங்கு என்பது பற்றிய விளக்கம் இன்று எம் அனைவருக்கும் அவசியமாகும். பொதுவாக சிறுவர் அரங்கு என்பதை சிறுவர் நாடகம் என்றே எல்லோரும் எண்ணுகின்றனர். ஆனால் அது அவ்வாறு இல்லை. சிறுவர் நாடகம் என்பதையும் சிறுவர் அரங்கு என்பதையும் வெவ்வேறானவையாகவே கொள்ளுதல் வேண்டும்.

சிறுவர் நாடகம் என்பது சிறுவர்களால் தமது வகுப்பறையில் புதிதளிப்பு முறையில் ஆசிரியரோடு இணைந்து உருவாக்கப்படும் நாடகத்தைக் குறிக்கும் நாடகப் பண்பு கொண்ட விளையாட்டுக்கள் பலவும் இந்நாடக ஆக்கத்திற்குப் பயன்படும். சிறார்களின் உணர்வு வெளிப்பாட் டிற்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவர்களின் ஊடாகவே நாடகம் வெளிப்படும். இத்தகைய நாடகங்களுக்கு எழுதப்பட்டதொரு எழுத்துரு பயன்படுத்தப்படமாட்டாது. இந்நாடக ஆக்கத்தின் இறுதியில் மாணவர்களது செயல்கள் கூட்டாகச் சேர்ந்து நாடக எழுத்துரு ஒன்று வெளிவரும்.

மேற்குறிப்பிட்ட பண்புகளுடன் வேறு சிலஅம்சங்கள் கொண்ட ஒன்றாக அமைவதே 'சிறுவர் அரங்கு' எனலாம். இது சிறுவர்களாலோ, பெரியவர்களாலோ ஆற்றுகை செய்யப்படக் கூடிய சிறுவர்களுக்கான ஆற்றுகையைக் கொண்ட அரங்காகும். அதாவது சிறுவர்களைப் பார்வையாளர்களாகக் கொண்டதும் சிறுவர்க ளையோ, வளந்தவர்களையோ அல்லது இரு சாராரையுமோ பங்குபற்றுபவர்களாகக் கொண்ட அரங்கினைக் குறிக்கின்றது. இது ஒரு நியம அரங்காகவோ, வேறு வடிவத்தைக் கொண்டதாகவோ அமையலாம். சிறுவர்களுக்கு. அவர்களது உள வயதுக்கு பொருந்தக் கூடிய அம்சங்கள் கொண்ட எழுத்துரு ஒன்று இங்கு அவசியமாகின்றது. இவ்வாறல்லாமல் புதிதளிப்பு முறையில் உருவாகிய சிறுவர் நாடக எழுத்துரு ஒன்றையும் அவ் வரங்கிற்கு பயன்படுத்த இயலும். மேலும் சிறுவர் கல்வியில் அக்கறை கொண்ட ஒருவரால் அல்லது ஒரு நிறுவனத்தினால் கூட இத்தகைய எழுத் துருவை எழுத இயலும். சிறுவர் அரங்கு மூன்று வகையான ஆற்றுவோ ரைக் கொண்டதாக இருக்கலாம். சிறுவருக்காக சிறுவர்களே நடிக்கின்ற அரங்கு, சிறுவருக்காக வளர்ந்தவர்கள் நடித்தல், அதாவது பார்வையாளர் சிறுவர்களாக இருக்க நடிப்பவர்கள் பெரியவர்களாக இருப்பர். மூன்றாவது சிறுவரும், வளந்தவர்களும் கலந்து சிறுவர்களுக்காக நடித்தல். எவ்வாறெனினும் சிறுவர் அரங்கின் பார்வையாளர். இவ்வரங்கினை நகர்த்திச் செல்லக் கூடிய பங்குபற்றுபவர்களாகவும் இருத் தலே அவசியமானது. இதன் காரணத்தினாலேயே சிறுவர் அரங்கின் பார்வையாளர் சிறுவரே எனக் குறிப்பிடுவர். சில சமயங்களில் சிறுவரின் பெற்றோர், சகோதரர், நெருங்கிய உறவினர் ஆகியோரும் பார்வையாளராக அனுமதிக்கப்படலாம். ஏனெனில் அரங்கில் சிறுவர்கள் மகிழ்வுடன் செயற்படும் பட்சத்தில் சிறுவர் மட்டுமே பார்வையாளராக இருப்பது விரும்பப்படுகின்றது. ஏனெனில் முன்னர் குறிப்பிட்டது போல் பிள்ளையின் உணர்வுடன் ஒன்றி தன்னுடைய மட்டத்தில் இருந்து இறங்கி பிள்ளையின் உள வயதுடன்ஒன்றக்கூடியவர்களே இவ்வரங்கில் பார்வையாளராக கலந்து கொள்வது மிகவும் பொருத்தமானதாகும். அதாவது பிள்ளையின் பால் அனுதாபமாக நோக்கக் கூடியவர் கள் பங்குகொள்ளலாம்.






முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன்



சிறுவர் அரங்கில் கவனிக்க வேண்டிய மற்றுமொரு விடயம் இவ்வரங்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படையான போதனையினைக் கொண்டதாக இருத்தல் கூடாது என்பதாகும். சிறுவர்கள் உள முதிர்ச்சிக்கு அல்லது உளவயதுக்கு பொருத்தமான நல்ல கருத்துக்கள் அரங்கில் தொக்கு நிற்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

எளிமையான சொற்கள், பாடல்கள், சிறுவருக்கு பொருத்தமான சிறிய கதைகள், கதை சொல்லும் (ஆச்சரியம்) பாங்கு, சுயாதீனமான அவர்களின் செயற்பாடு என்பவை இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. ஒற்றுமை, உண்மை, அன்பு, மகிழ்ச்சி, வெளிப்படை, சுயாதீனம் போன்ற விடயங்களும் உதவும் மனப்பான்மை பிறரை மதிக்கும் தன்மை, பிழையை ஏற்றுக்கொள்ளும் தன்மை, தட்டிக் கேட்கும் பண்பு, என்பவையும் சிறுவர் அரங்கில் இருக்க வேண்டிய அல்லது எடுத்தாள வேண்டிய அம்சங்கள் எனக் கூறலாம்.

அதாவது சிறார்கள் சூழலை, தான் வாழுகின்ற சமூகத்தை, கலாசாரப் பாரம்பரியங்களை நேசிக்கவும் விழுமியங்களை மதிக்கவும் பின்பற்றக்கூடிய மனப்பாங்கினையும் குழுவாகச் செயற்படக் கூடிய தன்மையினையும் முரண்பாடுகளைச் சுயமாக தீர்த்துக் கொள்ளக் கூடிய திறமையினையும் பெறுவதற்கு சிறுவர் அரங்கு சிறப்பான ஒன்றாக இருக்கின்றது. ☺

தொடரும்....

சவால்கள் வரும் போதுதான் நீங்கள் நினைத்திராத திறமைகள் உங்களிடம் ஒளிந்திருப்பதை உணர் வீர்கள். - டோரா ஆல்பட்

# சதுரங்கம்

வேழினி

## மனிதாபிமான உதவியை மறந்த ஒரு தொண்டர் நிறுவனம்



**தொண்டர்** நிறுவனங்களானது மனிதாபிமான தொண்டு புரிவதற்காகவே இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் உள்ளூர்த் தொண்டர் நிறுவனங்களாயினும் சரிதான் சர்வதேச தொண்டர் நிறுவனங்களாயினும் சரிதான் அடிப்படையில் இவற்றின் பணி என்பது மனிதாபிமானமிக்கதாகவே அமையும்.

சிலவேளைகளில் இவ் நிறுவனங்கள் மக்களிற்கு உலக நாடுகளின் உதவிகளுடன் பெருமளவு நிதியினை ஒதுக்கி கொடுப்பதும் அவற்றை தங்களது ஆடம்பர வாகனங்களில் மக்கள் மத்தியில உலாவந்து பார்வையிடுவதும் தான் என நினைக்கின்றனவோ என்னவோ?

ஏனெனில் இவ்வாறான சில தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகள் இப்படி மக்களை எண்ண வைக்கின்றன.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 1.55 மணியளவில் முறுகண்டிக்கு அண்மையில் நடந்த ஒரு சம்பவம் சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றை மிகவும் மலினப்படுத்திவிட்டது.

U,N என பொறிக்கப்பட்ட இரண்டு பஜிரோ ரக வாகனங்களில் வந்தவர்களின் செயற்பாடுகளே இத்தகைய நிலையைத் தோற்றுவித்தது.

கடந்த சனிக்கிழமை பி.பகல்.1.55 மணியளவில் முறுகண்டியிலிருந்து சுமார் இருநூறு மீற்றர் தூரமளவில் ஒரு நீலநிற எல்ப்ரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியது.

இதில் பெண்களும் சிறு குழந்தைகளுமே பயணம் செய்தனர். இவ் வாகனத்தில் பயணம் செய்த ஒருவர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு வைத்திய உதவியைக் கோரினார்.

இந்நிலையில் வீதியில் பயணம் செய்த ஒருவரும் பெண்களுமாக பாதிக்கப்பட்டவரை தாங்கிப் பிடித்தவாறு வீதியில் வந்த வாகனங்களின் உதவியைக் கோரினர்.

அவ்வேளையில் வீதியில் தெற்குப்பக்கமாகவிருந்து வந்து கொண்டிருந்த சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றின் இரு பஜிரோ வாகனங்களை மறித்து உதவி கோரப்பட்டது.

அந்த வாகனங்களில் நீல நிறத்தில் அந்நிறுவனத்தின் கொடியும் U,N என ஆங்கில எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தது.

அதில் பயணம் செய்தவர்கள் விசாரித்துவிட்டு அந்த நோயாளியை வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்லாமல் சென்று விட்டனர்.

பின்னர் பின்னால் வந்து கொண்டிருந்த மின்சாரக் கம்பிகளை ஏற்றிய ஒரு பாரவூர்தியில் நோயாளியை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர் அங்கிருந்த மக்கள்.

இங்கு வேதனை தருவது போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களிற்கு தொண்டு புரியவென வந்திருக்கும் இத்தகைய சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் விபத்துக்குள்ளாகி வைத்திய உதவி கோரிய ஒருவருக்கு உதவாமல் சென்றதுதான்.

ஒரு நோயாளிக்காக தமது ஆடம்பர வாகனங்களை விட்டு இறங்கி உதவ முடியாதவர்கள் இங்குள்ள மக்களிற்கு இவர்களால் எத்தகைய மனிதாபிமான உதவியை வழங்க முடியும்.

அல்லது அந்த வாகனங்களில் பிரயாணம் செய்தவர்கள் இவ்வாறான பணிகள் தம்முடையவையல்ல என கருதி நிறுவனத்தின் சட்டப்படி இயங்க தலைப்பட்டார்களா?

ஒரு வேளை அவர்கள் அவசர வேலை இருந்ததால் இப்பணியைப் செய்யாமல் சென்றதாகயாரும் கருதலாம்.

ஆனால் அவர்கள் வைத்தியசாலை இருக்கும் திசைநோக்கியே தமது பிரயாணத்தை தொடர்ந்தனர் என்பதுதான் வேதனைக்குரியது.

உண்மையில் அன்று விபத்துக்குள்ளானவர்கள் எமது பிரதேசத்திற்கு வெளியிலிருந்து வந்தவர்களே.

அவசர உதவி கோருபவர்கள் எத்தகைய பிரதேசத்தை சேர்ந்தவர்களாயினும் அவர்களிற்கு உதவி புரிய வேண்டியது ஒவ்வொரு மனிதனுடைய கடமை.

அதிலும் தொண்டு புரியவென பெயர்களையும், கொடிகளையும் தாங்கி வலம் வரும் இத்தகைய நிறுவனங்களிற்கு பல மடங்கு உண்டு.

அன்று விபத்துக்குள்ளானவர்களிற்கு உதவி புரியாமல் சென்ற அந்த தொண்டர் நிறுவனத்தின் செயற்பாடுகளை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

அவ்வாறு இவர்கள் நியாயப்படுத்த முனைவார்களானால் அவர்களின் மனிதாபிமானப் பணிகள் என்பது வெறும் கோசங்கள் மட்டுமேயாகும்.

●●●



## ஆசிரியர்களின் அரசியல் ஞானம்

**அண்மையில்** தென்னிலங்கையிலுள்ள ஒரு ஆசிரியர்கலாசாலையொன்றில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் ஒரு ஆசிரிய நண்பர் ஒருவர் வந்திருந்தார்.

அவர் வேதனையோடும் நகைச் சுவையோடும் ஒரு விடயத்தைக் கூறினார்.

இங்கிருந்து ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவான ஏராளமான தமிழ் ஆசிரியர்கள் அங்கு கல்வி கற்பதாகவும் அவர்களிற்கு அரசியல் ஞானம் சுத்தசூனியம் எனவும் வேதனையோடு தெரிவித்தார். அப்படி என்னதான் நடந்துவிட்டது என்று கேட்டதற்கு அவர்.

கொழும்பில் ஜே.வி.பி.யினரால் ஒரு சமாதான எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டதாகவும் அவ் ஊர்வலத்தில் இங்கிருந்து சென்ற தமிழ் ஆசிரியர்களும் கலந்து கொண்டார்களாம். ஆனால் அவர்களிற்கு யாரால் இவ் ஊர்வலம் நடத்தப்படுகின்றது என்பதோ அல்லது எதற்கு நடத்தப்படுகின்றது என்பதோ தெரியாமல் கலந்து கொண்டனர் என்பதுதான் வேதனையாம்.

அங்கு கல்விகற்கும் ஆசிரியர்களிற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்டத்தில் எந்தவித சம்பள உயர்வுகளும் வழங்கப்படவில்லையென்றும் இதற்கு எதிர்ப்பு ஊர்வலம் நடத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்ட போது பலமைல் தூரம் சென்று ஊர்வலத்தில்கலந்து கொண்ட போதுதான் தெரியுமாம் இது சமாதான எதிர்ப்பு ஊர்வலம் என்பது.

இவ்வளவிற்கும் இவ் ஆசிரியர்களிற்கு ஜே.வி.பி.யினரைப் பற்றியோ அவர்களின் அரசியல் பின்னணியைப் பற்றியோ தெரியவில்லையாம்.

எம்மவர்களின் அரசியல் ஞானம் பற்றி அங்கு கல்வி போதிக்கும் ஒரு விரிவுரையாளரும் கவலைப்பட்டாராம்.

இந்த ஆசிரியர்களால் எப்படி மாணவர்களிற்கும் சமூகத்திற்கும் நல்வழிப்படுத்த முடியும் எனவும் கேட்டாராம்.

அதுசரி என்னதான் இருந்தாலும் எங்கட ஆட்களின் காதில் விழுந்தது சம்பள உயர்வு பற்றியல்லோ அது தான் கொடி பிடித்திருக்கினம்.

# மாபெரும் இலக்கியப்போட்டி

## 2002 - முடிவுகள்

***2ம் லெப் மாலதி நினைவு நாளையும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு கப்டன் வானதி வெளியீட்டகம் நடாத்திய கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம் மற்றும் குறுநாவல் போட்டியில் பரிசு பெறுபவர் விபரங்கள்.***

### கவிதைப் போட்டி

*முதலாம் இடம்*

*"அப்பாவும் மாவீரராய் வருவார்"*
பிருந்தா முருகையா,
ஸ்ரீவாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு,
யாழ்ப்பாணம்.

*இரண்டாம் இடம்*

*"வீதி பற்றிய பதிவுகள்"*
திருமதி. ந. சாரங்கா
மே/பா. பா.மகானந்தராஜா,
இல,51/3 மூன்றாம் பகுதி,
திருவையாறு,
கிளிநொச்சி.

*மூன்றாம் இடம்.*

*"விடுதலை"*
திருமதி.மரியநாயகி மரியதாஸ்
(நவாலியர் நாயகி)
பாரதி நிலையம்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

### சிறுகதைப் போட்டி

*முதலாம் இடம்*

*விட்டு விடுதலையாகி...*
செல்வி. பிரேமினி சபாரத்தினம்
(தாட்சாயினி)
பெரிய அரசடி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

*இரண்டாம் இடம்*

*முகம் மாறும் மனிதர்களும்...முகம் மறந்த உதவிகளும்...*
காயத்திரி இராஜேஸ்வரன்,
கோண்டாவில் - இருபாலை வீதி,
கோப்பாய்.

*மூன்றாம் இடம்*

*"தனிமை"*
செல்வி. செல்வமதி சிங்கராசா,
உப தபாலகம்,
கலவெட்டித்திடல்,
புளியம் பொக்கணை.

### கட்டுரைப் போட்டி

*முதலாம் இடம்*

*நவநாகரீக உலகில் பெண்களின் நிலை*
செல்வி. கிறேஸ் லில்லிமலர் அருளானந்தம்,
(நடுவப்பணியகம், கிளிநொச்சி)
தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதி,
போக்குவரவுக் கண்காணிப்புப் பிரிவு,
தமிழீழம்.

*இரண்டாம் இடம்*

*வனிதையரும் வளமான எம் மண்ணும் கடந்து வந்த பாதைகள்.*
செல்வி.மு.கவிதா,
கட்டப்பிராய்,
வட்டக்குளம்,
யாழ்ப்பாணம்.

*மூன்றாம் இடம்*

*தமிழர் தேசிய - விடுதலை, சமூக விடுதலை.*
செல்வி. பிறேம்னி கணபதிப்பிள்ளை,
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை,
கோப்பாய்.

### ஓவியப்போட்டி

*முதலாம் இடம்*

றெகென்சியா ஞானவதனி - திருஞானம்,
புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

*இரண்டாம் இடம்*

மதுமதி மயில்வாகனம்,
23, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

*மூன்றாம் இடம்*

செல்வி. ம.தயாமதி
23, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்துப் படைப்பாளிகளுக்கும் எமது பாராட்டுகள். பரிசுகள் வழங்குவது பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

கப்டன் வானதி வெளியீட்டகம்,
தமிழீழம்.

(சி-7214)

சட்டம், நீதி இரண்டும் இறைவனால் பிணைக்கப்பட்டவை; மனிதனால் வெட்டிப் பிரிக்கப்பட்டவை. -சார்ல்ஸ் கோல்டன்

# புதிய சுருக்குக் கயிறு

**வெளிவாசல் பாலன்**

**ஒரு** நாளில் ஒரு பாடம் தொடர்ச்சியாகப் பன்னிரண்டு மணித்தியாலங்கள் படிப்பிக்கப்படுகிறதென்டால் நீங்கள் நம்புவீர்களா? நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ ஒரு பாடம் ஒரே ஆசிரியரால் ஒரு நாளில் பன்னிரண்டு மணிநேரம் படிப்பிக்கப்படுகிறது. விளங்கிக் கொள்கிறார்களோ இல்லையோ மாணவர்களும் படிக்கிறார்கள்.

காலை எட்டு மணிக்கு வகுப்புத் தொடங்கும். மதியம் பன்னிரண்டு மணிக்கு முதற்கட்டம் முடிவடையும். அரை மணித்தியால இடைவேளை. அதற்குள் சாப்பாடு மற்றும் அத்தியாவசியக் கடன்கள் முடித்து விட வேண்டும். பின்பு பன்னிரண்டு முப்பதுக்கு இரண்டாம் கட்டம் ஆரம்பமாகி மாலை ஆறுமணிக்கு நிறுத்தப்படும். ஒரு மணித்தியால இடைவேளை. இரவுச் சாப்பாட்டையும் இதர அவசர வேலைகளையும் அந்த ஒரு மணித்தியாலத்துக்குள் முடித்து விட்டு இரவு ஏழு முப்பதுக்கு மூன்றாம் கட்டத்தில் அமர வேண்டும். இரவு பத்து முப்பதுக்கு அன்றைய பாடம் முடியும்.

இது ஒரு தனிச் சம்பவம் அல்ல. பொதுவாக இதேமாதிரி ஒரே நாளில் ஒரு பாடம் ஒரே ஆசிரியரால் ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது மணித்தியாலங்களெனவும் படிப்பிக்கப்படுகின்றன.

இரவு பத்து மணிக்குப்பின் 'அரிக்கன் லாம்பு' வெளிச்சத்தில் தொடங்கும் வகுப்பு இரவு மூன்று அல்லது நான்கு மணிக்கு முடியும். பின்பு ஒரு குட்டித் தூக்கத்தைப் போட்டு விட்டு காலையில் எழுந்து அவசர அவசரமாக வெளிக் கிட்டு சாப்பிட்டது பாதி விட்டது பாதியாக பாடசாலைக்கு ஓடுகிறார்கள். மாணவாகள்.

சில வகுப்புக்கள் அதாவது ஒரு நாளில் மூன்று பாடங்கள் பதின்னான்கு பதினைந்து மணிநேரம்சில இடங்களில் பாடசாலை நேரம் முடிந்தவுடன் ஒரு மணித்திலாயத்தின் பின் தொடங்கும் வகுப்புக்கள் ஆறு, அல்லது ஏழு,எட்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து நடக்கின்றன. பாடசாலை நேரத்துடன் சேர்த்துக் கணக்கிட்டால் பன்னிரண்டு, பதின்மூன்று, பதின்நான்கு மணித்தியாலங்கள் ஓய்வின்றி படிப்பு நடக்கிறது. இந்த மாணவர்களுக்கு வீட்டில் என்ன நடக்கிறது, வெளியே என்ன நடக்கிறது என்றெல்லாம் எப்படித் தெரியும்? பலருக்கு ஆசிரியர், மற்றும் சக



மாணவர் சமூகத்தை தவிர வேறெதுவும் தெரியாமல் போகிறது.

இவையெல்லாம் அனேகமாக பிரத்தியேக வகுப்புக்களில் (personal class) தான் நடக்கிறது. இந்த வகுப்புக்களில் கற்பிற்கும் ஆசிரியர்களில் அனேகமானவர்கள் பாடசாலைகளிலும் படிப்பவர்கள் கற்பித்தல் முறைகள், மாணவ உளவியல் கல்வியின் பயன்பாடு, மாணவர்க்கும் சூழலுக்குமிடையில் உள்ள உறவு என்பனபற்றியெல்லாம் நன்கு அறிந்தவர்கள் கற்பித்தல் முறை பற்றி அடிக்கடி கல்வித் திணைக்களத்தினாலும் தொண்டர் நிறுவனங்களினாலும் செயலமர்வுகள் என்றும் பயிற்சி வகுப்புக்கள் என்றும் இவர்கள் கலந்து கொண்டு கருத்துரைக்கிறார்கள் சிலர் பயிற்சி பெறுகி றார்கள்.

பிறகு தனியார் வகுப்புக்களில் போதிக்கும் போது மட்டும் இவையெல்லாவற்றையும் வெகு இலகுவாக கடந்து சென்று விடுகிறார்கள் அல்லது பறந்து போகிறார்கள்.

இப்படி ஏன் தொடர் வகுப்புக்களை இவ்வளவு கூடுதலான நேரம் எடுக்கிறார்கள் என்று நீங்கள் கேட்கக்கூடும்.

கொஞ்சம் பொறுத்திருங்கள் இன்னும் சில சுவாரசியமான விசயங்கள் உண்டு. ஒரு வகுப்புக்கு ஆயிரம் ஆயிரத்தை நூறு என்று கணக்கு. அதில் மூன்று பேர் படித்தால் என்ன ஒன்பது பேர் படித்தால் என்ன ஆயிரத்தைக் கொடுத்தே ஆக வேண்டும். மாதத்தில் நான்கு நாட்கள் நடக்கும் வகுப்புக்கு நான்காயிரம் கொடுக்கிறோம் என்கிறார்கள் மாணவர்கள். ஏதாவது ஒரு வகுப்புக்கு ஒரு மாணவர் வரவில்லையென்றாலும் கொடுக்கும் "கொடை" குறைந்து விடக்கூடாது. வராமல் விட்டாலும் அந்த மாணவர் காசைக் கொடுக்கத்தான் வேணும் அல்லது ஏனையவர்கள் பொறுப்புத்தான். இன்னொரு முறை ஒரு வகுப்புக்கு நான்கு பேருக்கு மேல் இருக்கக்கூடாது என்பது ஆசிரியரின் நிபந்தனை. ஆனால் "கொடை" (கட்டணம்) மட்டும் குறையக்கூடாது. இன்னொரு நாலு மாணவர் சேர்ந்தால் அது ஒரு தனிஅணியும் தனி வகுப்பும் அதற்குத்தனியான கொடையும் அதனால் தான் இந்த நிபந்தனை தாங்கள் கொடுக்கும் கட்டணத்தை மாணவர்கள் ''கொடை'' என்று சொல்கிறார்கள் ஏது இப்படிச் சொல்வதற்கு என்ன காரணம் என்று கேட்டால் "இப்படி காசை அள்ளிக்கொடுப்பதை வேறு எப்படிச் சொல்வது" என்று திருப்பிக் கேட்கிறார்கள்.

இவையெல்லாம் க.பொ.த. உயர்தரத்தில் படிக்கும் மாணவர்களின் கதை நமது சூழலின் யதார்த்த நிலை.

வெகு தொலைவில் இருந்தெல்லாம் சைக்கிள்களில் வந்து ஓரிடத்தில்- அதுவும் போதிய வசதியற்ற இடத்தில் - கூடியே படிக்கவேண்டும். இரவாயின் மின்சாரம் இல்லை. பதிலாக மண்ணெண்ணெய்யில் எரியும் சிறு விளக்குகளின் ஒளி மட்டும் தான்.

இப்படியெல்லாம் கஸ்ரப்பட்டுத் தான் இன்று வன்னியில் படிக்கிறார்கள், பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள், பெறுபேறுகளை பெறுகிறார்கள். வெளியே இந்த அவலங்களும் பிரச்சினைகளும் எல்லோருக்கும் தெரிவதில்லை.

பிள்ளைகளின் பெறுபேற்றை மட்டும் எதிர்பார்க்கும் பெற்றோருக்கு தம் பிள்ளைகளின் அவலமும் சுமையும் நெருக்கடியும் புரிவதில்லை. குதிரைகள் வென்றுவிட வேண்டும் என்பது மட்டும் தான் அவர்களின் ஒரே எதிர்பார்ப்பும் நோக்கமும்.

தம் மாணவர்களின் வெற்றியில் - அவர்கள் பெறும் சித்தியில் - அடுத்த வருட மாணவரைக் கவரலாம் என்ற கணக்கை வைத்திருக்கிறார்கள் பிரத்தியேக வகுப்பின் ஆசிரியர்கள்.

கற்றல் கற்பித்தல் பற்றிய அறிவும் அனுபவமும் விளக்கமும் இருப்போர்கூட இந்நிலையை மாற்றுவதற்குப் பதிலாக ஒத்தோடிகளாக இருக்கின்றார்கள்.

ஆசிரியர்கள், பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை எல்லாம் சேர்ந்து குறைவாகவே இருக்கும்.பிரத்தியேகப் பாடங்களின் ஆசிரியர்களுக்கு பெரும் மதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்த மதிப்புத்தான் அவ்வாசிரியர்களின் பேரம் பேசும் தகுதியை உருவாக்குகிறது. இப்போதுள்ள கவலை என்னவெனில் இந்த நிலை வளர்ந்து எங்கே நம்மைக் கொண்டு சென்று விடும் என்ற அச்சம் தான் அதிலும் ஆசிரிய மனப்பாங்கின் சுருக்கம் ஒரு தூக்குக்கயிறாக மாறி வரும் ஆபத்தும் தான்.

---

# பத்திரிகையாளர்களும் படுகொலைகளும்

**அலெக்ஸ் பரந்தாமன்**

**இன்று** உலகெங்கும் எழுத்துத் தொழிலைத் தம் தொழிலாகக் கொண்டு வாழும் பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும், மற்றும் புகைப்படக் கலைஞர்களும் இன, மத, மொழி, நிறவெறி கொண்ட அடக்குமுறை ஆட்சியாளர்களினால், அவர்களின் ஆதரவாளர்களினால் படுகொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும், சிறைக்குள் தள்ளப்படுவதும் முன்பு இருந்ததை விட தற்பொழுது அதிகரித்தே கர்ணப்படுகின்றது.

சமுதாயப் பரப்பில் வாழும் ''பெரிய மனிதர்'' களின் அக்கிரமங்கள் நிறைந்த செயற்பாடுகளை மட்டுமல்லாது, அரசியல் மட்டத்துக்குள் மறைமுகமாக நடைபெறும் ஊழல் மோசடிகள், அந்தரங்கப் பேச்சுக்கள் யாவற்றையும் கண்டறிந்து, கேட்டறிந்து செய்தியூடகங்கள் மூலம் மக்களுக்கு பகிரங்கப் படுத்தி விடுகிறார்கள் பத்திரிகையாளர்கள்.

இதன்மூலம் மக்கள் கிளர்ந்தெழுந்து நீதி வேண்டிப் போராடத் தலைப்படும் பொழுது, கையாலாகாத நிலைக்குத் தள்ளப்படும் அரசுகள் மற்றும் தனி மனிதர்கள் இதற்குக் காரணமாக விளங்குகின்ற பத்திரிகையாளர்களைக் கொன்றும், சிறையில் அடைத்தும் காணாமல் போகச் செய்வதோடும் திருப்தியடைந்து கொள்கின்றனர்.

இந்த வகையில், உலகில் பல நாடுகளில் நடைபெற்ற பத்திரிகையாளர் மீதான சில படுகொலைகளை மீள்ளாய்வு செய்து பார்க்கையில், பத்திரிகையாளர் மீதான படுகொலைகள் ஒரு தொடர்கதையாகவே அரங்கேறிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

சாட் பத்திரிகையாளரான சலேகபா என்பவர் சாட் அரசாங் கத்தின் கொள்கைகளுக்கும், கொடூர மான சித்திரவதைகளுக்கும் எதிராக தனது எழுதுகோலை ஏந்தினார் என்ற குற்றத்துக்காக 1988 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் எவரும் அறியப்படாத வகையில் இரகியமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதேபோல, எகிப்து தேசத்தில் டாக்டர். முகமட் மௌறு எனும் பத்திரிகையாளர், அந்த அரசாங்கத்தின் கொடூர செயற்பாடுகள் குறித்து ஊடகங்கள் மூலம் மக்கள் முன் அம்பலப் படுத்தி அரசாங்கத்தை அவமதித்ததற்காக ஆறுமாதச் சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டார்.

'2000 நோக்கி' எனும் துருக்கிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான பத்திமா ஜசிசி எனும் பெண், குர்திஷ் நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான துருக்கி அரசாங்கத்தின் மிலேச்சத்தனமான செய்கை காரியங்களை கொடூரமான சித்திர வதைகளை மனித உரிமை மீறல்களை , மக்கள் முன் எழுதி வெளிப்படுத்தியமைக்காக துருக்கி அரசினால் எட்டுவருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது.

பெருவியன் அன்டெஸில் அடக்குமுறை இராணுவத்தால் சாதாரண பொதுமக்கள் இருவர் எந்த வித காரணமுமின்றி சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள். இந்தத்தகவலை அறிந்து கொண்ட 'கறெராஸ்' எனும் வாரப் பத்திரிகையின் நிருபரான ஹுகோ பஸ்ரொஸ் என பவர், படுகொலை நடந்த இடத்துக்குச் சென்று செய்திகளை சேகரிக்கவும், படுகொலை செய்யப்பட்ட அந்த இரு பொதுமக்களைப் புகைப்படம் எடுக்கவும் முயன்ற போது வந்திருப்பவர் பத்திரிகையாளர் என அறிந்த அடக்குமுறை இராணுவம் பயத்தில் மிரண்டு போகிறது. உடனே அந்த இடத்திலேயே அந்தப் பத்திரிகை



யாளனை சுட்டுக் கொன்று விடுகின்றது.

இதுதவிர, இன்றைய கால கட்டத்தில் இஸ்ரேலிய அரசாங்கத்தின் இராணுவமும், காவல்துறையினரும் பலஸ்தீனப் பிரதேசத்தை ஆக்கிரமித்து, அங்கிருந்து மேற்கொள்ளும் அடாவடித்தனமான காரியங்களை உலகின் முன் வெளிபபடுத்தும் பல பத்திரிகையாளர்கள் பலத்த துன்புறுத்தல்களுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப் படுகின்றார்கள். இப்படி கடும் சித்திர வதைகளுக்கும், துன்புறுத்தல் களுக்கும் ஆளாகும் பத்திரிகையாளர்களில் றிபாய் அல்அறுதி எனும் பத்திரிகையாளர் முதன்மை பெறுகின்றார்.

இதேவேளை, அண்டைநாடான இந்தியாவிலும் பத்திரிகையாளர் மீதான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. திரேன் பகத் எனும் பத்திரிகையாளர் ஆங்கிலப் பத்திரிகைத்துறையில் பிரபல்யமானவர். இவர் இளம் வயதிலேயே பத்திரிகைத்துறையில் மிகுந்த ஈடுபாடாக இருந்தவர்.

1982 இல் 'சண்டே ஒப்சேவர்' எனும் இதழில் இவர் எழுத ஆரம்பித்தபோது இவருக்கு அப்போது வயது இருபத்தைந்து.

இந்தியாவில் உள்ள பஞ்சாப் மாநி லத்தில், இந்தியாவின் உளவு அமைப்பான 'றோ' ஒரு பயங்கரவாதக்குழுவொன்றை வழி நடாத்தி வந்தது பற்றிய பல விபரங்களை, செய்திகளை அறிந்து தெரிந்து வைத்திருந்த திரேன் பகத், அவற்றை வெளியிட்டதன் பின்னர் திடீரென ஒருநாள் சாலை விபத்தொன்றில் இறந்து போனார்.

ஆயினும், இவரது இறப்பானது சாலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்டதல்ல என்றும், இது 'றோ' அமைப்பின் திட்டமிட்ட செயல் எனவும் இரகசியங்களை அவர் வெளியே கசிய விட்டதால், அவரை 'றோ' அமைப்புத்தான் கொலை செய்துள்ளதெனவும் பொதுமக்கள் மத்தியில் ஓர் அபிப்பிராயம் இன்றுவரை நிலவியே வருகின்றது.

இந்தவகையில், உலக நாடுகளில் வாழும் பத்திரிகையாளர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள்,சித்திரவதைகள், படுகொலைகள் போலவே சிறிலங்காவில் வாழும் பத்திரிகையாளர் மீதும் பௌத்த - சிங்கள பேரினவாத சிந்தனை கொண்ட ஆட்சியாளர்கள் தமது அராஜகப் போக்குகளைக் கட்டவீழ்த்தும், காண்பித்தும் வருகின்றனர்.

சிறிலங்காவைப் பொறுத்த வரையில், முன்னாள் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்த னாவால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'அவசர காலத் தடைச்சட்டம்' மற்றும் 'பயங்கர வாத தடைச்சட்டம்' ஆகிய இரண்டும் பல பொதுமக்கள், பத்திரிகையாளர்கள் கைது செய்யப் படுவதற்கும் காணாமல் போவதற்கும் இன்று வரை நன்கு வழி சமைத்தே கொடுக்கின்றன.

ஒரு நீதிபதியின் முன் நிறுத்தப்படுவதற்கான அவசியமோ அல்லது கைது செய்யப்படுவதற்கான பிடியாணையையோ அவசியமாகக் கொண்டிராத நிலையில், ஒருவரைக் கைது செய்ய வழி வகுத்துக் கொடுக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், பல பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுவும் முன்னாள் சனாதிபதி காலம் சென்ற பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த அரசியல் படுகொலைகளுக்கு எதிராக எழுதிய பலபத்திரிகையாளர்கள் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி, கைதும் செய்யப்பட்டார்கள். சிலர் கடத்தப் பட்டு காணாமலும் போனார்கள்.

இந்த வகையில், பத்திரிகையாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதிலும் அவர்களின் முயற்சி களுக்கு இடையூறு விளைவித்து, முடிவில் அவர்களைக் கொலை செய்வதிலும் சீனா, எல்சல்வடோர், கௌதமாலா, லைபீரியா, சாட், துருக்கி, கெயிட்டி, லெபனான், ஈராக், மெக்சிக்கோ, பேரு, ஆப்கான், இந்தியா போன்ற நாடுகளின் வரிசையில் சிறிலங்காவும் இடம் பிடித்துக் கொண்டுள்ளமையானது வியப்புக்குரியதொன்றல்ல.

# பன்முகம் - 02

# கிறிஸ்துமஸ் கொண்டாடத் தகுதி!

**கிறிஸ்து** பிறப்பின் விழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது. அதிலும் இந்த முறை அதிவிஷேடம் துப்பாக்கி வேட்டு முழக்கங்களும், எறிகணை வெடிப்பின் அதிர்வுகளும் விமானக் குண்டு வீச்சின் பேரொலிகளும் ஓய்வுற்ற நிலையில் பட்டாசு வெடிகளும் மத்தாப்புச் சிதறல்களும் மனமகிழ்வைக் கொடுக்கும் கிறிஸ்துமஸ் இவ்வாண்டின் கிறிஸ்துமஸ் ஆகும்.

இந்த மகிழ்சிச் சூழ்நிலையில் சென்ற காலங்களில் நிகழ்வுகளை நெஞ்சம் மறக்க மறுக்கின்றது.

தம் வயிற்றுச்சுமைகளை இறக்க இருப்பிடம் தேடி அலைந்த மரியாள்களை-கொலைகார ஏரோதுகளுக்கு அஞ்சி தன்மனைவியரை, குழந்தைகளை கொண்டு ஓடி ஒழிந்த சூசைகளை, தம் பிள்ளைச் செல்வங்களைக் காப்பதற்காக குறுக்கே புகுந்து தம் உயிரைத் தானம் செய்த பெற்றவர்களை, ஏரோதுவின் படைகளை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த பிள்ளைச் செல்வங்களை அவர்கள் விதைக்கப்பட்ட குழிகள் மீது விழுந்து மாரடித்துக் கொண்டிருக்கும் உறவுகளையெல்லாம் இந்தக் கிறிஸ்துமஸ் நாளில் நினைக்கத் தோன்றுகின்றது.

ஈழத்தில் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும் எனது நண்பருமான திரு. கே.ஆர். டேவிட்டின் வீட்டிற்கு அண்மையில் சென்றிருந்தேன் நாட்டார் இலக்கியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது அவர் ஒரு உண்மைச் சம்பவத்தைக் கூறினார்.

அவரது அயல் வீட்டுக் குடும்பம். இளம் குடும்பம் அவர்களுக்கு ஒரே பிள்ளை. அக் குழந்தைக்கு கடுமையான சுகவீனம் அது ஒரு டிசம்பர் 24 ஆம் நாள். அன்று இரவு கிறிஸ்துமஸ் அன்று மாலை டேவிற்சுகவீனமுற்ற குழந்தையைப் பார்க்கச் சென்றார். ஏனோ அந்தக் குழந்தை பிழைக்காது என்று அவர்மனம் கூறிற்று.

அவர்களிடமிருந்து விடைபெறும் போது "ஏதும் அவசரத்





தேவை என்றால் எந்த நேரமாயினும் சரி என்னை வந்து கூப்பிடுங்கள்" என்று பிள்ளையின் தந்தையிடம் கூறிவிட்டு வந்தார்.

இரவு கிறிஸ்மஸ் , அதிகாலைப் பொழுதில் அப்பிள்ளையின் தந்தை டேவிற்றை வந்து அழைத்தார் அன்று இரவு முழுவதும் தூக்கமின்றிக் கழித்தடேவிற் உடனே எழுந்து வெளியே சென்றார் அன்று அதிகாலை அருக்குக் கிடைத்த கிறிஸ்துமஸ் செய்தி அந்தக் குழந்தை இறந்து விட்டது என்பதே.

உடனே அந்தத் தந்தையுடன் இளவு வீட்டுக்குச் சென்றார். டேவிட்டைக் கண்ட குழந்தையின் தாய் "ஊரில் உள்ள வீட்டில் எல்லாம் பாலன் பிறந்திருக்கிறார். என்ர வீட்டில பாலன் இறந்து விட்டார்'' என்று சொல்லியழுதாளம்.

"அந்த அம்மாள் சொன்ன அவ்வரிகளைப் பாருங்கள் முன்ஆயத்தம் எதுவுமின்றி அவர் கூறிய உணர்வு பூர்வமான சொற்கள்தான் உண்மையான நாட்டார் பாடல்" என்றார்.

அந்தக் குடும்பத்தில் ஒருவராக அவர்கள் துயரத்தில் கலந்து கொண்ட நண்பர் டேவிட் அன்று உண்மையான அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ்ஸைக் கொண்டாடினார் என்பது எனது கருத்து. ஏனெனில் அடுத்தவன்

**நாவண்ணன்**

துயரத்தில் ஆறுதலாக இருப்பவனே உண்மையான கிறிஸ்தவன் என்பது தானே கிறிஸ்து பெருமானின் வார்த்தையும், வாழ்வும்.

கிறிஸ்துவின் இந்தப் போதனையை என்னும் போது அண்மையில் ஒரு விடுதலைப் போராளி கூறிய உண்மைச் சம்பவம் என் நினைவுக்கு வந்தது.

இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவர் தனது பஜரோ வாகனத்தில் வீதியால் சென்று கொண்டிருந்தார். வீதியிலே ஒரு விறகு வெட்டும் தொழிலாளி தன்மனைவியை தனது சைக்கிளில் பிரசவ வேதனையுடன் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஏற்றிச் சென்று கொண்டிருந்தார். பஜரோவாகனம் அவர்களைக் கடந்து சென்றபோது அவர் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் இருவரையும் கண்டு நிலைமையை கண்டு விட்டார். வாகனம் அவர்கள் கண்ணுக்கு மறையும் தொலைவில் வந்தும் வாகனத்தை நிறுத்தும்படி சாரதிக்குக் கட்டளையிட்டார். வாகனம் நிறுத்தப்பட்டது. வாகனத்தை விட்டு இறங்கிய அந்தப் பிரமுகர் பக்கத்தே இருந்த காட்டுக்குள் சென்று மறைந்து நின்று சைக்கிளில் வந்து கொண்டிருக்கும் அவர்களை வைத்திய சாலைமட்டும் ஏற்றிச் சென்று விட்டதன் பின்னர் மீண்டும் அந்த இடத்துக்கு வந்து தன்னை ஏற்றிச் செல்லும் படி பணித்தார். அவர் பணித்தது நடந்தது இத்தனைக்கும் அவர் கிறிஸ்தவரல்ல. ஆனால் அவர் செய்கையில் கிறிஸ்தவத்தை நான் காண்கின்றேன்.

இந்த நிகழ்வைக் கேட்ட போது இன்னுமொரு உண்மைச் சம்பவம் நினைவுக்கு வந்தது.

அது ஒரு பின்தங்கிய கிராமம் நகரத்தில் இருந்து காட்டுக்குள் வெகு தூரத்தில் இருக்கின்றது. போக்குவரத்து வசதிகள் இல்லாத கிராமம் அங்கு ஒருவருக்கு விஷம் தீண்டி விட்டது. கிராமத்தவர்கள் காவு கட்டி தோளில் காவிக் கொண்டு நடையில் வந்து பலமைல்கள் தாண்டி பிரதான சாலைக்கு வந்து சோந்தனர் அங்கிருந்து வெகுதூரத்தில் இருக்கும் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல வாகனம் ஒன்றிற்காகக் காத்து நின்றனர்.

அவர்கள் எதிர்பார்த்தபடி வாகனம் ஒன்று வந்தது அதுவும் அவர்களை நன்கு அறிந்த பெரியவர் ஒருவரின் வாகனம்அந்த வாகன உரிமைக்காரர் ஒரு கிறிஸ்தவர் அவரும் அந்த வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். நோயாளியை வைத்துக் கொண்டு எதிர் பார்ப்புடன் நின்ற அந்தமக்களுக்கோ மிகவும் மன ஆறுதல். அந்த மக்களும் கிறிஸ்தவர்கள். வாகச் சாரதியும் அவர்களை அறிந்த கிறீஸ்தவர்.

வாகனம் அண்மித்து வந்த போது அதனை நிறுத்தும்படி சைகைகாட்டினர். அதனைக் கண்ட வாகனச் சாரதி தனக்குப் பக்கத்தில் இருந்த பெரியவரிடம் கேட்டார் "யாரோ வருத்தக்காரரைக் கொண்டு வந்திருக்கிறார்கள் போல கைகாட்டுகிறார்கள் வாகனத்தை நிற்பாட்டவா?''

அந்தப் பிரமுகரிடம் இருந்து பதில் வந்தது''என்னுடைய வாகனத்தை எங்கே நிற்பாட்டுவது என்று எனக்குத் தெரியும் நீ காரை ஓட்டு"

அவரது கட்டளைப் படியே கைகாட்டியவர்களைக் கடந்து வாகனம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. ஏமாற்றமடைந்த மக்கள் சத்த மிட்டு அழைத்தபடி வாகனத்தைப் பின்தொடர்ந்து சிறுதூரம் ஓடிக் கொண்டு வந்த னர் ஆனால் வாகனம் நிறுத்த ப்படவில்லை.

இந்தச் சம்பவத்தை அந்த சாரதி எனக்குச் சொல்லக் கேட்ட போது யேசுநாதர் சொன்ன நல்ல சமாரித்தன் கதையே நினைவுக்கு வந்தது.

வீதியோரம், திருடர்களால் அடிபட்டுக் கிடந்த யூதனை கண்டும் காணாமல் சென்ற இரண்டு யூதர்களையும் அவனுக்கு உதவி செய்து காப்பாற்றிய சமாரித்தனையும் அக்கதையில் கூறி அந்த யூதனுக்கு யார் உண்மையான அயலவன் என்று கேட்ட இயேசுவின் வினாவும் நினைவுக்கு வந்தது.

இங்கு கூறப்பட்ட சம்பவங்களில் இருந்து கிறிஸ்மஸைக் கொண்டாட உண்மையில் தகுதி பெற்றவர் யார் என்பது வாசகர்களுக்கும் புரிந்திருக்கும்.

# மதவடி மயிலர்



செய்தி: உயர் பாதுகாப்பு வலயத்தில் குடியேற அனுமதிக்காவிடில் இனி உபகுழுக் கூட்டத்தில் பங்கேற்கோம்... மூத்த தளபதி கேணல் கருணா தெரிவிப்பு.

மயிலர்: சரியான முடிவுதான் பாருங்கோ...சும்மா...சும்மா சந்திக்கிறதும் கைகுலுக்கிறதும் பேசுறதுமாக இப்படியே காலத்தைக் கடத்தினால் என்ன மாதிரி? இராணுவத்தின் பாதுகாப்பு இரணுவத்துக்கு முக்கியம் என்றால் எங்கடை மக்களின்ரை இயல்பு வாழ்க்கையும், பாதுகாப்பும் எங்களுக்கு முக்கியம் பாருங்கோ... ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டின கதையா எல்லோ கிடக்கு... இந்த விடயத்தில இறுக்கமா இருக்காட்டி இளிச்சவாயராப் போயிடுவம்... தெரியும் தானே.

செய்தி: அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை சில தீய சக்திகள் கலைக்க முனைகின்றன... அமைச்சர் பாக்கீர் மாக்கார் குற்றச்சாட்டு...

மயிலர்: குற்றவாளிகள் யாரென்பதை சுட்டிக்காட்டி மக்களுக்கு இனங்காட்டாது 'சிலதீயசக்திகள்' என்று 'பொடி' வைத்து பேசுகிறது சரியில்லைப் பாருங்கோ உதைத்தான் அரசியல் 'நழுவல்போக்கு' எண்டு சொல்லுறது... ஊகங்களைக் கிழப்பிவிட்டு, சனங்களைக் குழப்பி அரசியல் யாவாரம் செய்தவையாதை சிறிலங்கா இப்படிச் சீரழிஞ்சு இருக்குது பாருங்கோ ஆர் அந்த தீயசக்திகள், எதிர்க்கட்சியா, ஜே.வி.பியா, பிக்குமார்களா பேரினவாத மொக்குச் சிந்தனையாளர்களா? நேருக்கு நேராகச் சொல்லுங்கள் அமைச்சரே..!

செய்தி: எந்தவொரு பலம் வாய்ந்த இயக்கமும் தீர்வு ஏற்பட முன்னர் ஆயுதங்களைக் கீழே போடாது... என்கிறார் G.L. பீரிஸ்...

மயிலர்: பீரிஸ் இந்த முறை... இந்தவார்த்தைகளை ஒரு பேராசிரியருக்குரிய தன்மையோடை யோசிச்சு சொல்லியிருக்கிறார் பாருங்கோ. முந்திசந்திரிகாவிடுதலைப் புலிகளுடன் பேசேக்கை ஆயுதக்கையளிப்பை நிபந்தனையாக விதிக்கேல்லை, ஆனால் இப்ப அதனை வலியுறுத்தாது தான் ஆச்சரியமாக இருக்கிறது என்றுமல்லோ பீரிஸ் ஐயா சொல்லியிருக்கிறார்... இதில. என்ன ஆச்சரியமிருக்கு இது சிறிலங்காவில் அரசியல் என்று பீரிஸ் ஐயாவுக்கு தெரியாமல் இருக்குமே!!

செய்தி: சமாதான முயற்சி வெற்றி பெற்றாலும் பலம்வாய்ந்த முப்படைகள் அவசியம் என்கிறார் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

மயிலர்: நாட்டின் பாதுகாப்புக்கு அயல்நாடுகளால் அச்சுறுத்தல் வரும் என்று மாரப்பன சந்தேகப்படுகின்றாரோ.. தெரியவில்லை.. ஆனால் பாதுகாப்பு அமைச்சரின் தொலை நோக்கு நடவடிக்கைகளை, திர்க்க தரிசனத்துடன் நாங்களும் ஆராயவேண்டும் பாருங்கோ...போர் நின்றுவிட்டாலும் போர்ச் செலவுகள் குறையாது.. படைகள் மேலும்நவீனமயப்படுத்த வேண்டும் என்றெல்லே அவர் சொல்லியிருக்கிறார்... நாங்களும் இதைப் பற்றியெல்லாம் ஆழமாகச் சிந்திக்க வேணும் பாருங்கோ..!

செய்தி: புதியஅரசியல் யாப்பு ஒன்றிற்கு அமைய அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகானலாம் என்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர் பீரிஸ்.

மயிலர்: பாவம் பீரிஸ் ஐயா முந்தி இப்பிடித்தன் சந்திரிக்கா அம்மணிக்கு பின்னாலை தீர்வுப்பொதியொன்றை சுமந்து கொண்டு ஊர்ஊராய் நாடுநாடாய் திரிந்து இனப்பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய 'அலாவுதீன் பூதம்' அதற்குள் இருக்கிறது என்று எல்லாரையும் நம்பவைக்க முயன்றார் ஏன்..சந்திரிகாவை அவரின் கழுகுத் தோற்றத்தை மறைத்து சமாதானத் தேவதையாகக் காட்டியதில் பீரிஸ் ஐயாவின் பங்கு தானே முக்கியமானது.. கடைசியிலை பொதியுமில்லை, தேவதையுமில்லை, பூதமுமில்லை.. எல்லாம் புஸ்வாணமாகி விட்டது பாருங்கோ... இப்ப புதிதா ஒரு அரசியல்யாப்பு மாற்றம் கொண்டு வரப்போறாராம்... அது சரி அதுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு என்ன செய்யப்போறாராம்...?

# நேர்நோக்கு

## அமைதி முயற்சிக்குத் தடையாக....

நெல்லியடியில் மக்கள் மீது மீண்டும் ஒரு மிருகத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. வேண்டும், வேண்டும் என இவ்வாறான தாக்குதல்கள் தமிழ்மக்கள் மீத தொடரத்தான் செய்கிறது.

இம்முறை "சனநாயக நிரோட்டத் தில் திரும்பி", மக்கள் பிரதிநிதிகள் நாம் என மார்தட்டிக் கொண்டிருப்பவர்களும் ஆக்கிரமிப்புப் படையுடன் இணைந்து தாக்குதலை நடத்தி தாம் எந்த அணி என்பதை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

தம்மைச் சொந்த இடங்களில் மீளக் குடியேற அனுமதிக்கக் கோரியும், தமது அன்றாட இயல்பு வாழ்வுக்கு இடையூறாக இருக்கும் இராணுவக் காவலரண்கள், முகாம்களை அகற்றக் கோரியும், மாணவர்கள் தமது கல்வியை தொடர இடைஞ்சலாக உள்ள முகாம்களை அகற்றக் கோரியும் விடுத்த மனுக்கள், கலந்துரையாடல்கள் எல்லாம் பயணளிக்காத நிலையில் நடத்திய போராட்டங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாது அவ்வாறு போராட்டம் நடத்துவதெல்லாம் குற்றம் என்று கூறிகைது செய்வதும் விரங்கிடுவதும் நீதிமன்றத்தில் ஏற்றுவதும் தொடர்கிறது.

இவ்வாறு மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகையில், மக்களின் போராட்டங்கள் குற்றச் செயல்களாகக் கருதப்படுகையில் மக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கும் அவர்கள் மீது கொடூரம் புரிந்தவர்களுக்கும் ஆயுதங்கள் வைத்திருக்கவும் முகாம்கள் அமைத்து மேலும் அட்டூழியங்களைத் தொடரவும் அனுமதி வழங்கப்படுகிறது. அவர்களுக்கு ஆயுதப் படையினரின் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.

இவையெல்லாம் அமைதி ஏற்படவும் இவர்களுடன் இணைந்து வாழ முடியும் என நம்பிக்கை ஏற்படவும் உகந்த செயல்களா? என்ற கேள்வியை அவர்கள் தம்மைத் தாமே கேட்டுப் பார்க்க வேண்டும்.

விடுதலைப்புலிகளிடமிருந்து தமிழ் மக்களை மீட்கப் போவதாகக் கூறி படையெடுப்பை நடத்தி அங்கு நிலைகொண்டு அம்மக்களுக்கு இயல்பு நிலையை மீட்டுக் கொடுத்து விட்டதாக கடந்த அரசாங்கம் உலகத்துக்கு கூறிவந்தது. ஆனால் அந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தின் இறுதிப்பகுதியிலே அங்குள்ள மக்கள் "பொங்குதமிழ்" எழுச்சி மூலம் தமது உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தத் தொடங்கி யிருந்தனர். பின்னர் அவர்கள் பேசும் தேர்தல் மொழியிலும் எவ்வளவோ மோசடிகள் ஊழல்கள் மத்தியிலும் தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்'தினர்.

பின்னர் விடுதலைப் புலிகள் யாழ். குடா நாட்டுக்குள் மீண்டும் பிரவேசித்த வேளையில் நிறை குடங்கள் வைத்து மேளதாளங்களுடன் வரவேற்று தமது பிரதிநிதிகள் யார்? என்பதை அம்மக்கள் வெளிப்படுத்தினர்.

ஆனால் இவற்றையெல்லாம் நேரடியாகப் பார்த்தும் மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஒருகுழுவுக்கு படையினர் பாதுகாப்பு வழங்கியது இன்னமும் அவர்கள் மக்களின் உணர்வுகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளத் தயாராக இல்லை என்பதையே வெளிபடுத்துகிறது. அத்துடன் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் "மக்கள் மனங்களை வெல்ல" இவர்கள் பெற்ற பயிற்சிகளும் வீண் என்பதையே புலப்படுத்துகிறது.

அதாவது தமிழ் மக்கள் தமது உரிமைகளுடன் கௌரவமாக வாழும் தீர்வொன்றை எட்டுவதற்கு முயன்று கொண்டிருக்கையில் - சிங்கள மக்களுடன் இணக்கமான வாழ்வு வாழ விரும்புகையில் அதற்கு எதிரான செயற்பாடுகளே தொடர்கின்றன. தமிழ்மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையிலான செயற்பாடுகளை இவர்கள் மேற்கொள்வதற்கான அறிகுறிகள் எவையுமே தென்படுவதாக இல்லை.

மாறாக தமிழ்மக்களின் போராட்ட உரிமையைக் கூட மறுக்கும் செயல்களும், தமது கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்தும் அடங்கிக் கிடக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுமே தொடர்கின்றன.

ஆனால் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டுவந்த இவ்வாறான அடக்குமுறைகளுக்கு தமிழ் மக்கள் பணிந்து போகவில்லை என்பதும், இதற்கு எதிரான மென்முறைப் போராட்டங்கள் தோல்வி கண்ட வேளையில் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்ததும், அதையொடுக்க சிங்கள அரசுகள் மேற்கொண்ட யுத்தமானது சிங்கள மக்களையும் பெரிதும் இன்னலுக்கு உள்ளாக்கி யதும் வரலாறாகும்.

இந்த வரலாற்றிலிருந்து தான் சிங்கள மக்கள் சமாதானத் தீர்வொன்றை எட்டுவதற்கான ஆணையை இன்று ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளனர்.

இந்த ஆணைக்கு அமைவாகச் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்மக்கள் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்பு வதை அடிப்படையாகக் கொண்டது. அதேவேளை இலங்கை முழுவதும் அமைதி நிலை திரும்புவதற் கானதுமாகும்.

இவ்வாறானதொரு சூழ்நிலை தோன்றுவதற்கு இருதரப்பும் அதாவது ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருதரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமானதாகும். இதில் விடுதலைப்புலிகள் தரப்பு இந்த ஒப்பந்தம் முற்றுமுழுதாகச் செயற்பட வழங்கிவரும் ஒத்துழைப்பானது உடனடியாகவே சிங்கள மக்கள் அமைதி நிலைக்குத் திரும்ப உதவியிருக்கிறது. இப்பொழுது தென்பகுதியிலுள்ள சிங்கள் மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்கள் யாழ்ப்பாணம் வரை எங்கும் செல்ல முடிகிறது. காவலரண் கெடுபிடிகள் எங்கு மில்லை.

ஆனால் தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விட்டார்களா? என்றால் இன்னமும் அவர்களுக்கு அதுகிட்டவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. இன்னமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்க தரப்பால் நிறைவேற்றப்படாத விடயங்கள் குறித்துப் பேசப்பட்டே வருகின்றது. யாழ். குடா நாட்டின் மக்கள் செறிந்து வாழ்ந்த பல பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்கள் குடியமர முடியாத நிலைக்கு தள்ளப்பட் டுள்ளன.

வலிகாமம் வடக்குப்பகுதி தமிழ் மக்களின் வளமான விளைநிலங்கள் தொழிற் சாலைகள், மீன்பிடித் துறை முகங்கள், மூல வளங்கள் நிறைந்த பகுதியாகும். கடந்த 12 வருடங்களுக்கும் மேலாக இது மக்கள் செல்ல முடியாத பிரதேசமாக்கப்பட்டிருக்கிறது.

அங்கு மட்டுமல்ல தெமராட்சியில் பல பகுதிகளில் ஏன் மக்கள் மிக நெருக்கமாக வாழும் யாழ். நகரப் பகுதிகளில் கூட "அனுமதியின்றி நுழைந்தால் குறைந்த பட்ச தண்டனை வழங்கப்படும்" என்ற அறிவிப்புப் பலகைகளே மக்களை அச்சுறுத்துகின்றன.

மக்கள் தமது சொந்த காணிகளில் குடியமர முடியாது அலைந்து திரியும் வாழ்க்கையின் அவலம் படையினருக்கு ஒருபோதும் புரியப் போவதில்லை போலவே தெரிகிறது. இதனைப் புரியவைத்து அவர்களை அங்கிருந்து அகற்றி மக்களின் அவலத்தைப் போக்குவது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு இல்லாவிடின் அமைதி முயற்சிகள் தொடர்வதற்கு பெரும் தடைக்கல்லாக அவை அமையக கூடும்.




(2ஆம் பக்கத்தொடர்ச்சி)

குடியமருதலோ அல்லது அவர்களிற்கான அபிவிருத்தி நடவடிக் கைகளிலோ பிரச்சனைகள் ஏற்படாது.

ஆனால் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இதற்கு மாறாக நிலைமை இன்னும் கவலை தரும் வகையிலேயேயுள் ளது.

உயர்பாதுகாப்பு வலயங்களாகவும் இராணுவ முகாம்களாகவும் மக்களின் சுதந்திர வாழ்விற்கும் புனர் வாழ்விற்கும் புனரமைப் பிற்கும் இடையூறா கவுள்ளது இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இன்னமும் தமிழ்மக்கள் முழுமையாக மீளக் குடியமர முடியாத நிலையேயிருக் கின்றது.

இது முழுமை யானபுனரமைப்பிற்கும் சமததான சூழ் நிலைக்கும் உகந்ததாக இல்லை இன்று சமாதான பேச்சுக்கள் தீர்க்கமான இலக்குகளை அடைந்திருக்கின்ற நிலையில் இராணுவத்தினர் பாதுகாப்புக் காரணங் களைக்காட்டி மக்களின் இயல்பு வாழ்விற்கும் அவர்க ளிற்கான புனர்நிர்மான நடவடிக் கைகளிற் கும் தடையாக இருத்தல் கூடாது.

சமாதானத்தின் அறுவடையை மக்கள் நுகர தடையாக இருப்பதும் அது உண்மையான சமாதானத்தின் மீது அவர்கள் கொண்டிருக்கம் வெறுப்பையே புலப்படுத்தும்.

இந்த நிலையில் கால நீட்சி இன்றி மக்களிற்கான வாழ்வுக்கான ஏது நிலையை உடன் ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம்.

✦

**தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி.**

| | | |
|---|---|---|
| வ,இல :118\2002,<br>தன்மை :-பணம்,<br>பெறுமதி :-80,000/= | வழக்காளி:<br>சுப்பையா-சந்திரசேகரம்,<br>உதயநகர் கிழக்கு<br>உதயநகர். | எதிர்:<br>த.அருணா<br>இல:483,<br>அக்கராயன்.<br>எதிராளி. |

**"பகிரங்க அறிவித்தல்"**

மேற்குறித்த எதிராளிக்கு

இவ்வழக்கில்,வழக்காளியால் 2002-10-09 அன்றைய நாள் எதிராளியான உமக்கு எதிராக பணம் என்னும் வழக்கொன்றை இந்நீதிமன்றில் தாக்கல் செய்து, உமக்கான அழைப்பாணையை சேர்ப்பிக்க முயன்றபோது, நீர் அம்முகவரியில் இல்லை என்பதால், இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது. இவ்வழக்கில் ஏதேனும்ஆட்சேபனைகள் அல்லது வேறு முகாந்திரங்கள் இருப்பின் நீரோ அல்லது உமது நிலையில் சட்டப்படியான அக்கறையுடையோரோ, இவ்வறித்தல் வெளியாகி 14 நாட்களுக்குள், மன்றில் தோன்றுமாறும், தவறும் பட்சத்தில், மன்று இவ்வழக்கை ஒருமுகமாக விளங்கி, தீர்ப்பு வழங்கும் என்பதை இப்பகிரங்க அறிவித்தல் மூலம் அறியத் தரப்படுகின்றது.

இந்த 2002, மார்கழி,12 திகதி
மன்றின் கட்டளைப்படி,

வரைபு:- தா.இ.குலசங்கர்
வழக்காழியின் சட்டவாளர்,
இரத்தினபுரம், கிளிநொச்சி. (சி-7581)

செல்வி.த.கிருஸ்ணவேனி
உபபதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

**நினைவு சுமைகள் ஈராண்டு**

ஜனனத்தில் 19 - 04 - 1928

மரணத்தில் 23 - 12 - 2000



அமரர் உயர் திரு
**சின்னையா சிவலிங்கம்**
(ஓய்வு பெற்ற புகையிரதச் சாரதி)

எங்கள் அன்புத் தெய்வம் – ஐயா
உங்களைப்பிரிந்து ஈராண்டு – ஆனால்
எம்மனதில் ஏக்கங்கள் தாங்க முடியவில்லை
மீண்டும் பார்க்க முடியாது
என்பதை அறிவோம் – ஆனாலும்
உங்கள் நினைவுகளின்
சுகங்கள் என்றும் எம்முடன்

தகவல்
சி.இந்தி கவிதா
சுதர்சினி மோகன்
(ஆ.ப. கலாசாலை கோப்பாய்)

நினைவுடன்
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உறவினர்

(2671)



மாவீரர் நாள் நினைவு

அவுஸ்ரேலியாவிலிருந்து ஏ.ஜே.மரியதாஸ்


Serendib Express

# யாழ் - கொழும்பு - யாழ்

## நம்மவரின் விமான சேவை

## (SERENDIB AIR)



கடந்த கால விமான பயணக்கட்டணத்தின் மூலம் உங்களுக்கு இரு வழி பயணக்கட்டணத்தில் இருந்து ரூபா 2400/= வை மீதப்படுத்தியுள்ளோம்.

* 3வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச பயணச்சீட்டுக்களை ஏற்படுத்தியுள்ளோம்.
பாடசாலை மாணவர்கள், சுற்றுலாக் குழுவினர் அவசர பயணநிமிர்த்தம் குழுவாகச் செல்பவர்கள் இவர்களுக்காக எம்மால் Metro iii U.S.A Air Craft 19 ஆசனங்களைக் கொண்டவை. தற்பொழுது பயணத்தில் ஈடுபடுத்தியுள்ளோம்.
எமது சேவையை விஸ்தரிக்க இன்னும் சில சிறிய விமானங்கள் வரவிருக்கின்றன. அத்துடன் எமது விமானமூடாக மக்கள் சிறந்த சேவையை பெற்றுக்கொள்வதற்கு எமது நிறுவனமானது தன்னகத்தே சொந்தமான விமானங்களைக் கொண்டமையே காரணமாகும்.

**SERENDIB MANO**
13,மின்சார நிலைய வீதி,
மக்கள் நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
021 -2223916
077-7801038
077-7512648

**SERENDIB**
500, காலி வீதி,
வெள்ளவத்தை.
01-505632
01-500626

**SERENDIB MANO COLOMBO**
61/A ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு -13.
01-390128
074-612656
077-7517019

Serendib Express

(C-6796)


# படமும் தகவலும்



உலகிலேயே மிக அதிக நிறையுடைய மூளை மேலே 30 வயதான ஒரு ஆணினுடைய இம்மூளை 2.3கி.கி என அமெரிக்காவைச் சேர்ந்த பல்கலைக்கழகம் தெரிவிக்கின்றது. இதற்கு முன் சாதனை மூளை ஆக 680 கிராமாகவே இருந்தது.



1997 ஜனவரி அமெரிக்காவில், டாலி எனும் ஆடு முளைக்கலங்களிலிருந்து குளோனிங் மூலம் உருவாக்கப்பட்டதன் பின்பு முதன் முறையாக முளையக் கலங்களிலிருந்து குளோனிங் மூலம் உருவாக்கப்பட்ட பிறைமேற்றுக்களே மேல் உள்ள குரங்குகள். வெவ்வேறு குரங்குகளின் டி.என்.ஏ மாதிரிகளை முளையங்களிலிருந்து பெற்று கருக்கட்டப்பட்ட முட்டைகளாக மாற்றி பிரசுரிக்கப்பட்டவையே இக்குரங்குகளாகும்.



தென்னாபிரிக்காவில் நியுக்கினியாவுக்குச் சொந்தமான சொர்க்கத்தின் பறவை என்று அழைக்கப்படும் ஒரு மலர்வகையே இது. அள வில்லாத வண்ணங்கள் கொண்டது இம்மலர்.



புளோரன்ஸ் நகரில் பிற்றிப் பிளோசில் 1505ம் ஆண்டு றேபியல் எனும் ஓவியரால் வரையப்பட்ட அன்னை மாியாளும், குழந்தை யேசுவின் திரு உருவமும் அடங்கிய எண்ணை வர்ண ஓவியம் இது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.